
பாலகுமாரன்
முல்லை
மாத நாவல்
ரூ.10
தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு நாவல்
வெள்ளைத் தாமரை



# பாலகுமாரன்

# வெள்ளைத் தாமரை



## 1

இரண்டு அணில்கள் எதிர்ப்பக்க சுவர்மீது ஒன்றையொன்று இடைவிடாது துரத்திக் கொண்டிருந்தன. சட்டென்று ஓரு அணில் நின்று 'கீச்கீச்'சென்று கத்தத் துவங்கியது. அதிலிருக்கிற உணர்ச்சி எது என்று திருஞானத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை. கோபமா, சந்தோஷமா, வெற்றிக் களிப்பா, ஆற்றாமையா என்ன என்பதை எத்தனை கவனித்தும் அறிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் ஏதோ ஒரு உணர்வை அந்த அணில் இடைவிடாது வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இன்னொரு அணில் எங்கேயோ மாய மாய் மறைந்து விட்டிருந்தது. கத்திய அணில் சோர்ந்து போய் இடமும், வலமும் நகர்ந்து, கீழிருப்பதை முகர்ந்து, வேகமாய் இடித்து வீசியெறிய மறுபடியும் இன்னொரு அணில் வேகமாய் துரத்தியது. மீண்டும் அவைகள் எதிர்வீட்டு முகப்பில் தாவி ஏறி இடதும் வலதுமாய் ஓட ஆரம்பித்தன. ஓடிய அணில் சட்டென்று நின்றது. தூரத்தில் அணில் இரண்டே தாவலில் ஓடிய அணிலை நெருங்கி அதன் முதுகின் மீது ஏறி அமர்ந்து கொண்டது. இறுக்கியது. இரண்டு அணில்களும் அசையாது ஒரு திசைப்போடும், முனைப்போடும் அழுத்தமாய் இருந்தன.

"அட இதுக்குத்தான் இத்தனை கூச்சலா" திருஞானம் சிரித்துக் கொண்டான். இன்னும் ஆவலோடு அணில்களைப் பார்த்தான்.

எந்த சங்கடமுமின்றி அணில்கள் இயங்கிக் கொண்டிருந்தன. மிகச் சிறிய அளவே அசைவுகள் இருந்தாலும், அந்த அசைவுகளில் இருந்த ஆத்திரத்தை திருஞானத்தால் உணர முடிந்தது. அவன் கன்னக்கதுப்புகள் சூடாகின. அணிலுக்குள் அவன் மனம் புகுந்துகொண்டது. திருஞானம் அணில்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று வீட்டிற்குள்ளிருந்து கனத்த காகிதத்தை வேகமாய் கிழித்தது போல ஒரு பெண் குரல் பிளிறி எழுந்தது. தொடர்ந்து பல பெண் குரல்கள் அழுகையாய் வெடித்தன. வெளியே நின்றிருந்த ஆண்கள் உள்ளே தாவிப்போனார்கள்.

'அப்பா செத்துப் போய்விட்டார்' என்பதை இந்த அசைவுகள் அவனுக்குத் தெரிவித்தன. அவன் தலைகுனிந்து கொண்டான். 'இப்பொழுது என்ன செய்வது' என்று யோசித்தான். இவர்களைப் போல் பதட்டமாக உள்ளே போகவேண்டுமா, உள்ளேயிருந்த பெண்களைப் போல் உரக்கக் குரல்கொடுத்து அழ வேண்டுமா, நெஞ்சில் அடித்துக் கொள்ள வேண்டுமா. இல்லை இங்கேயே மௌனமாக நிற்பதா, என்ன செய்தால் நன்றாக இருக்கும், என்ன செய்தால் மதிப்பு என்று யோசிக்கத் துவங்கினான். அவனுக்கு சட்டென்று அம்மாவின் ஞாபகம் வந்தது.

என்ன செய்வாள் என்று எண்ணம் வந்தது.

வீட்டிற்குள்ளிருந்து ஒரு வயசாளி உறவுக்காரர் வெளியே வந்தார். 'போயிட்டான்டா. தர்மராஜன் போயிட்டான்டா. உங்கப்பன் போயிட்டான்டா. கடவுளே, கடவுளே' என்று தலையிலடித்துக் கொண்டார்.

உள்ளிருந்து அப்பாவின் நெருங்கிய நண்பர் சுந்தரேசன் வெளியே வந்தார். "திருஞானம் வா. உள்ளே வந்து அப்பாவைப் பார். ஒரு சுத்து சுத்தி நமஸ்காரம் பண்ணிக்கோ. இந்த வேளை ரொம்ப நல்ல வேளை. இப்பத்தான் ஒன்றரை நிமிஷம் முன்னாடி பிராணன் உடம்பைவிட்டு வெளியே போச்சு. பிராணன் எங்கேயும் போயிருக்காது. அங்கேதான், பக்கத்திலேயே தான் இருக்கும். இப்பவந்து நமஸ்காரம் பண்ணிக்கிட்டேன்னு வைச்சுக்கோ. மனப்பூர்வமா உங்கப்பா உன்னை ஆசீர்வாதம் பண்ணுவார். இந்த ஆசீர்வாதம் ரொம்ப பலிக்கும். உடம்பா இருக்கறபோது இருந்த அப்பா வேற. இப்ப அப்பா தெய்வமாயிட்டார். அந்தத் தெய்வத்தை நமஸ்காரம் பண்ணிக்கோ".

எல்லாம் தெரிந்தவர்போல அவர் அவனை அழைத்துப் போனார். அப்பாவை வலம்வரச் செய்தார். நமஸ்கரிக்கச் செய்தார். அவன் விழுந்து வணங்கியதும் நிறைய பேர் நமஸ்கரித்தார்கள். அந்த ஹாலுக்குள் அப்பா எங்கே இருக்கிறார் என்று திருஞானம் தேடினான். ஹால் எப்போதும் போலவே இருந்தது. அம்மா சமையலறையிலிருந்து எட்டிப்பார்த்தாள். அம்மாவை அவன் உற்றுப்பார்த்தான். அம்மாவின் கண்கள் லேசாய் பனித்திருந்தன. வாயில் புடவைத்தலைப்பை வைத்து அழுத்திக் கொண்டிருந்தாள். 'என்னடா பண்ணப்போறே' என்பது போல் அவனைப் பார்த்தாள். அம்மாவின் கேள்வி அவள் கண்களின் மூலம் அவனுக்குப் புரிந்தது. மெல்ல இடக்கையை விரித்து, 'இனி நம்ம கதி என்ன' என்பது போல் சைகை செய்தாள். அதுவும் அவனுக்குப் புரிந்தது. துக்கம் பொசபொசவென்று நெஞ்சில் வேகமாய் கிளம்பிற்று.

"என் புள்ளை வீட்டுக்குப் பெரியவனாயிட்டான்" என்று நடுங்கும் குரலில் அம்மா எல்லோருக்கும் அறிவித்தாள். அவன் உடைந்து போனான். 'ஓ' வென்று வாய்விட்டு அழுதான்.

இப்படி ஒரு தகுதி, இப்படி ஒரு பதவி உயர்வு அவன் கேட்கவில்லை. அப்பாவே வீட்டின் தலைவராக இருப்பதுதான் அவர்கள் எல்லோருக்கும் சுகமாக இருந்தது. அதுதான் கம்பீரமாக இருந்தது. அப்பா இப்போது நகர்ந்துபோனதும், நகர்ந்துபோன மறுவிநாடியே அவனை வீட்டுத்தலைவனாக அம்மா அறிவித்து விட்டாள். இது வேதனையான நேரம். வேதனையான பதவி. அவன் அம்மாவை நோக்கி கைகூப்பினான்.

திருஞானத்தை அம்மாவுக்கருகே அழைத்துப் போனார்கள். அம்மா அவன் தலையைத் தடவினாள். நெற்றியில் முத்தமிட்டாள். அவன் அம்மாவைக் கட்டிக்கொண்டான். அம்மா அழுதாள்.

அம்மா, அப்பாவின் இரண்டாவது மனைவி. முதல் மனைவி இறந்துபோன நான்கு வருடங்களுக்குப் பிறகு அப்பா அம்மாவை எளிமையான முறையில் திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு முன்பே முதல்மனைவிக்கு பிறந்த ஒரு பையனை தன்னுடைய மாமனார்



வீட்டிற்கு அனுப்பிவிட்டார். 'அவன் நம்ம குழந்தைதானே. கூட்டிக்கினு வாங்களேன்' என்று அம்மா பலமுறை கேட்டாளாம். ஆனாலும் அப்பா மறுத்து விட்டாராம்.

"அவங்க வளர்க்கறேன்றாங்க. நாங்க பாத்துக்கறோம்னு வீறாப்பா பேசறாங்க. நாம குறுக்கே புகுந்து அந்த குழந்தையை இங்கே கொண்டாருவானேன். எப்ப தப்பு நடக்கும்னு காத்துகிட்டிருக்காங்க. நீ மெலிசா இரண்டு வார்த்தை அதட்டினாகூட, 'அய்யோ. பாடாபடுத்தறாளே'ன்னு அதிகமா பேசுவாங்க. நீ அதட்டாத போனா அவன் அயோக்கியத்தனமா வளருவான். அப்படி அயோக்கியத்தனமா வளர்ந்தா 'இவ புள்ளை வளர்க்கற லட்சணத்தைப் பாரு'ன்னு வாங்க. இதை விட்டுடு. நீ தேவையில்லாம கடப்பாரையை வாங்கி கால்ல போட்டுக்காத. வேற வழியில்லைன்னா அவனுக்கு நீதான் அம்மா. ஆனா அவன் அப்படி இல்லை. அவளை வளர்க்கறதுக்கு அவனைச் சுத்தி பெரிய பட்டாளமே இருக்கு. நீ என்னைக் கவனிச்சிக்க" - அப்பா சமாதானப்படுத்தினாராம்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இடையே பதினாறு வயது வித்தியாசம். அம்மா அப்பாவைக் கவனித்துக் கொண்டாள். பதிப்பகத்தை கவனித்துக் கொண்டாள். வீட்டின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டாள். இந்த மூன்று விஷயங்களிலும் அம்மாவே பதில் சொல்லும்படியாக ஒரு நிலைமை அவளுக்கு ஏற்பட்டது. அம்மாவிற்கு பொறுப்புகள் ஏற்க பிடிக்கும் என்பதால் இவைகளை சந்தோஷமாக ஏற்றாள். அம்மா வந்த பிறகுதான் பதிப்பகம் மிகப் பிரகாசமாய் வளர்ந்தது.

அப்பா பழைய நண்பர்களை உதறிவிட்டு தனியே பதிப்பகம் துவங்கியபோது அம்மாதான் பெயர் வைத்தாள். 'என்ன பெயர், என்ன பெயர்' என்று மூன்று நாட்கள் வீட்டிற்குள் பேசிக்கொண்டிருந்தார்களாம். சட்டென்று ஒரு விடியலில் அம்மா படுக்கைவிட்டு எழுந்து 'வெள்ளைத் தாமரை' என்று சொன்னாளாம். அப்பாவுக்கு அந்தப்பெயர் பிடித்துப் போய்விட்டதாம்.

ஒரு பதிப்பகத்திற்கு இதைவிட அழகான பெயர் வைக்க முடியுமா என்று அப்பா, அம்மாவைப் பாராட்டினாராம். பதிப்பகங்களுக்கு வடமொழிப்பெயரே அதிகமிருந்த அந்தக்காலத்தில் சுத்தத்தமிழில் 'வெள்ளைத்தாமரை' என்று வைத்தபோது, அன்றைய அரசியல் சூழ்நிலையும் பதிப்பகத்தினுடைய பெயரும் ஒத்துப்போயின. பதிப்பகம் வேகமாய் வளர்ந்ததற்கு இந்த பெயரும் காரணம் என்று அப்பா அடிக்கடி சொல்வார்.

தொள்ளாயிரத்து அறுபது தலைப்புகளில் அந்தப் பதிப்பகத்தில் புத்தகங்கள் இருந்தன. அதில் இருநூற்றைம்பது புத்தகங்கள் நல்ல வரவேற்பு பெற்ற புத்தகங்கள். அதில் நூற்றுப்பதினேழு புத்தகங்கள் பல பதிப்புகள் அடிக்கப்பட்ட புத்தகங்கள். ஒரு பதிப்பகம் வளமாக இருக்கிறது என்பதற்கு இந்த எண்ணிக்கைக்குள் ஒரு காட்சி.

அப்பா இதற்காகக் கடுமையாக உழைத்தார். அம்மா அப்பாவை உழைக்க வைத்தாள். தூண்டினாள். போராடச் செய்தாள். வெற்றிக் கொடியை வீட்டிலும் பதிப்பகத்திலும் ஏற்றினாள்.

அப்பா தன் நண்பர்களிடம் அம்மாவைப்பற்றி பேசிக் கொண்

டிருந்ததை அவனது பன்னிரெண்டு வயதில் கேட்டிருக்கிறான். புரிந்ததும், புரியாததுமாய் அதை உள்வாங்கியிருக்கிறான். உள்வாங்கியதை இருபத்தைந்து வயதிற்குப்பிறகு நன்கு புரிந்துகொண்டிருக்கிறான்.

"ஒரு வகையில இது அதிர்ஷ்டம். ரெண்டாவது கல்யாணம் பண்ணனோம்றபோது, ஒரு பயம் இருக்கத்தான் செய்தது. எங்கடா, மானம் மரியாதையோட வாழ்வோமா, இல்லை கவுந்துருவோமா அப்படின்னு ஒரு கவலை. சின்னப்பெண்ணா கல்யாணம் பண்றோமே. நம்ம பேச்சுக்கு அடங்கி இருப்பாளா அப்படின்னு ஒரு பயம். எல்லா வகையிலும் நாம் கட்டுப்படுத்த முடியுமான்னு உள்ளுக்குள்ளே ஒரு குமையல். ஆனா, நல்லவேளை ருக்மணி ரொம்ப நல்லவ. ரொம்ப கெட்டிக்காரி. நாலு பொண்ணுங்களுக்கு நடுவுல பொறந்தவ. கொஞ்சம் ஆதரவா இருந்தா போதும். என்ன வேணா செய்யறதுக்கு தயாரா இருக்கும். தினம் அஞ்சு மணிக்கு எழுந்தாக்க, ராத்திரி பத்து வரைக்கும் ஓயாத வேலை. ஆனா மூஞ்சி சுளிச்சதே இல்லை. மூஞ்சு சுளிக்காம வேலை செய்யறது அப்படிங்கறதை ருக்மணிதான் எனக்கு சொல்லிக் கொடுத்தா. அவகிட்டத்தான் கத்துக்கிட்டேன்.

"வேலையும் செய்துட்டு, நாய் மாதிரி எரிஞ்சு விழறதுல என்ன புண்ணியம். அது யாருக்கு லாபம். அதனால, செய்தது அத்தனையும் கெட்டுப்போகுதுன்னு அவ சொல்லிதான் புரிஞ்சுகிட்டேன். எப்ப அந்த மாதிரி இருக்க முடியும். நமக்கு புடிச்ச வேலையை நாம செய்யறபோது தான் சந்தோஷமா செய்ய முடியும்.

"எனக்கு பதிப்பக வேலை ரொம்ப புடிக்கும். புதுசு புதுசா டைட்டில் கொண்டார்றது ரொம்ப சந்தோஷம். 'இன்னொருத்தன்'கிட்ட எதுக்குப்போய் நிக்கறதுன்னு எனக்குள்ள ஒரு திமிரு தேவையில்லாம இருந்தது. அதைப் புடுங்கிப்போட்டவ ருக்மணி. 'வியாபாரின்னா நாலு பேர்கிட்ட போய் நிக்கத்தான் வேணும். பணிவா பேசத்தான் 'வேணும். பேசினாத்தான் வியாபாரம். பேசாம முறைச்சுகிட்டு இருந்தா, உங்ககிட்ட வந்து வியாபாரம் பண்ணனும்னு யாருக்கும் தலையெழுத்து இல்லை. அதனால இதமா பேசுங்க. மத்தவங்க் முறைப்பா பேசினாலும் மரியாதையா பேசுங்க'ன்னு குழந்தைக்கு சொல்லித்தர்றா மாதிரி சொல்லிக் கொடுத்தா.

'சரி. இந்த தடவை செய்து பார்ப்போம். அதையும் மீறி எவனா மரியாதைக்குறைவா பேசினா நம்ப வழிதான் சரின்னு நினைச்சேன். ஆனால், மிருதுவா பேசினா நல்ல பலன் இருக்குன்றதை ரொம்ப சீக்கிரமா தெரிஞ்சுகிட்டேன். அப்புறம் யாரையுமே முறைக்கறதில்லை.

வெளிய யார்கிட்டயுமே முறைப்பா பேசாததுனால வீட்டுக்குள்ளேயும் முறைப்பா பேசறதை விட்டுட்டேன். ருக்மணியை கல்யாணம் பண்ணி மூணு வருஷத்திலே இந்த தர்மராஜன் சுத்தமா மாறிப்போயிட்டான். என்னைப்பத்தி எனக்கே ஆச்சரியமா இருந்துது போயேன்.

சொல்லிக்கொடுக்கற புத்தியோட, இளமையா சுறுசுறுப்பா ஒரு பொண்டாட்டி வந்த நேரம் நம்ம புத்தி கேட்டுக்கற புத்தியா மாறிப் போச்சு. இதுவே முப்பது வயசு ஆளா இருந்தா, 'உனக்கு என்னடி



மயிரைத் தெரியும்' அப்படின்னு எகத்தாளமா பேசியிருப்பேன். அவளை விட் பதினாறு வயசு ஜாஸ்தியில்லையா. அதனால ஒரு நிதானம் இருந்தது. அப்படி நிதானம் வர்ற நேரத்துல இவ வந்தா. என்னுடைய வாழ்க்கை ரொம்ப சந்தோஷமா போயிடுச்சி. இந்தக் கல்யாணம் பண்ணலைன்னு வைச்சுக்கங்க நான் பைத்தியக்காரன் மாதிரி அலைஞ்சிருப்பேன். குடி, சீட்டாட்டம்னு நாசமா போயிருப்பேன். தினம் சீட்டாடற ஆளுதான் நானு. இப்ப சீட்டைப் பார்த்தாலே வெறுப்பு. சீட்டாடற நேரத்துக்கு நானும் ருக்மணியும் கோவிலுக்குப் போயிடுவோம்.

"அப்ப மாம்பலம் சிவா விஷ்ணு கோயில் ரொம்ப பிரபல்யம். மத்த எல்லா கோயிலிலும் மண்டபம் சின்ன சின்னதா இருக்க, இது பெரிய மண்டபம். அங்க போய் எங்கயாவது ஒரு மூலையில நானும், ருக்மணியும் உக்காந்துட்டு வருவோம். வழியிலே பாக்கிறவங்க 'யாரு உங்க மகளா'ன்னு கூட கேட்டிருக்காங்க. வேணும்னுட்டே என்னை கேலி பண்றதுக்காகவே திரும்ப திரும்ப உங்க பொண்ணான்னு விசாரிப்பாங்க. எனக்கு கோவம் வரும். ருக்மணிதான் விரல்தொட்டு அடக்கிடுவா.

'உங்களுக்கு இளமை மனசில இருக்கு. அது அவங்களுக்குத் தெரியாது. எனக்குத்தான் தெரியும். மனசுல இளமையா இருக்கறதுன்னா என்னன்னு தெரியுமா உங்களுக்கு. முன்னேறணும்னு துடிச்சிக்கிட்டே இருக்கற அத்தனைபேரும் இளமையானவங்க தான். அடுத்தது அடுத்த துன்னு காரியத்துக்கு ஓடறான் பாருங்க. அவங்க எல்லார் மனசிலேயும் இளமை இருக்கு. ஆனா போதும்னு எவன் நினைக்கிறானோ அவன் முதுமையானவன். புத்தி வயசை வச்சு வராது. அது மனசினுடைய விஷயம்' அப்படின்னு அவதான் எனக்கு தெளிவா புரிய வைச்சா".

நடேசன் பார்க்கில் அமர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் நண்பர்களோடு அப்பா பேச, அருகில் உட்கார்ந்திருந்த திருஞானம் சகலமும் கேட்டுக் கொண்டிருந்தான்.

"உன் புள்ளை உன்னை அப்படி கவனிக்கிறான் தெரியுமா. வீட்டுக்குப்போய் அத்தனையும் சொல்லப்போறான்" - நண்பர் ஒருவர் கேலிசெய்தார்.

"சொல்லட்டுமே. என்ன தப்பா சொல்லிட்டேன் டேய் வீட்டுக்குப் போய் இங்க நடந்ததையெல்லாம் அம்மாகிட்ட சொல்லு சரியா" என்று அப்பா சொல்ல, நண்பர்கள் கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

திருஞானமும் எதனாலேயோ சந்தோஷமானான். அப்பாவின் கையைப் பிடித்துக்கொண்டு உற்சாகமாய் வீட்டிற்குத் திரும்பினான்.

இன்று காரடையான் நோன்பு. செங்குந்த முதலியாரான அவர்கள் வீட்டில் இந்த நோன்பு எடுப்பது பழக்கமில்லை. மாம்பலத்தில் அந்த அடுக்குமாடி வீட்டில் எல்லா குடித்தனங்களும் அந்தணர்களாக இருக்க, இவர்கள் மட்டும் வேறு பிரிவாய் இருந்தார்கள். எல்லார் வீட்டிலும் காரடையான் நோன்பு கைக்கொள்ளும்போது, தான் மட்டும் தனக்கு இல்லையென்று இருப்பானேன் என்று அம்மாவும் அந்த நோன்பு எடுத்துக்கொண்டாள். இதற்கு பிராமணத்தியாக இருக்க வேண்டியதில்லை என்பதை மற்றவர் சொல்ல புரிந்துகொண்டாள்.

காலையிலிருந்து ஒட்ட ஒட்ட பட்டினியிருந்து, வெல்ல அடையும், உப்பு அடையும் செய்து, நடுவே சிறிய குழி வைத்து, அதில் வெண்ணை திரளாய் அப்பி, இலைகளில் பரப்பி, நூலால் செய்யப்பட்ட மஞ்சள் கயிற்றில் மல்லிகைப்பூவை பிணைத்து, காமாட்சியம்மன் படத்திற்கு சார்த்தி, அப்பா வந்தவுடன் அதை அவரிடம் கொடுத்து, விழுந்து நமஸ்கரித்து, அவர் கழுத்தில் மூன்று முடிச்சு போட மறுபடியும் விழுந்து நமஸ்கரித்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாள். பன்னிரெண்டு வயது திருஞானத்திற்கு இந்தக் காட்சி மிகுந்த பரபரப்பாய், சந்தோஷமாய் குதியலாய் இருந்தது. 'டும்டும்' மென்று வாயில் தவில் சத்தம் எழுப்பி, நாதஸ்வர ஓசை எழுப்பி, அப்பா, அம்மாவின் கல்யாணத்தைக் கவனிக்கின்ற ஒரு பெரிய உவகையை அடைந்தான். கிளர்ச்சியானான். அப்பாவும், அம்மாவும் அவனைக் கட்டிக்கொள்ள இரண்டு பேர் கன்னத்திலும் மாறிமாறி முத்தங்கள் கொடுத்தான்.

சுற்றுப்புறம் உள்ளவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை என்பதால், அவர்களுக்கு மாமிசம் சாப்பிடுகிற பழக்கம் இருந்தாலும் வீட்டில் மாமிசம் சமைப்பதில்லை. எப்போதேனும் வெளியே போகும்போது அப்பா விருப்பப்பட்டால் ஓரிரு துண்டுகள் வாங்கிச் சாப்பிடுவார். அவனுக்குக் கொடுப்பார். ஆனாலும் மாமிசத்தின் மீது விருப்பமே இல்லாமல் போயிற்று. பேச்சிலும், எண்ணங்களிலும் அந்தண சுபாவம் அதிகரித்தது.

பதிப்பகம் இருப்பது சொந்த இடம். தியாகராய நகரில் ஒரு சிறிய தெருவில், பழமைவாய்ந்த ஒரு கட்டிடத்தில், மேலே கோடவுனும், கீழே அலுவலகமும், ஸ்டோர் ரூமும் இருந்தன. அங்கே வசிப்பது சிரமமாக இருந்ததால், இந்த இடத்திற்கு அவன் பிறந்தவுடனேயே குடிபுகுந்தார்கள். அவர்கள் குடிவந்தபோது வாடகை மிகக் குறைவு. இந்த வாடகைக்கு இப்போது இந்த பகுதியில் ஒரு ரூம்கூட கிடைக்காது. அகலமும், காற்றோட்டமுமான அந்த அடுக்குமாடி வீட்டில், நல்ல சூழ்நிலையில் கெட்டிக்காரத்தனமாய் திருஞானம் வளர்ந்தான். பத்தாம் வகுப்பிலேயே அப்பா தெளிவாகச் சொல்லிவிட்டார்.

"நீ எதுக்கு விஞ்ஞானம் எடுக்கறே. டாக்டர் ஆகப்போறியா. இஞ்சினீயர் ஆகணுமா. இவ்ளோ பெரிய தொழிலை நான் தூக்கி நிறுத்தி வைச்சிருக்கேன். நீ டாக்டராயி இதை நாசம் பண்றதுக்கா. தேவையே இல்லை. நீ மொழியை முக்கியமா எடுத்துக்க. ஒண்ணு எம்.ஏ. தமிழ் படி அல்லது ஆங்கிலம் படி."

அவன் எம்.ஏ. ஆங்கிலம் படித்தான். நல்ல தமிழை பதிப்பகத்தின் புத்தகங்கள் மூலமாகக் கற்றான். மற்ற பதிப்பகங்களிலிருந்து புத்தகங்கள் பரிமாறிக் கொள்ளும்படி நேரும்போது அவைகளின் மூலமாகவும் தமிழின் ஆளுஷமையை அதிகரித்துக் கொண்டான். இலக்கியத்தமிழை, பதிப்பகத்திற்கு வரும் பிழை திருத்துகின்ற புலவரோடு விவாதித்து கற்றுக் கொண்டான். ஒருவருக்கு சூழ்நிலையும், படிப்பும் ஒன்றாக அமைவதென்பது எல்லோருக்கும் நடப்பதில்லை.

கீழ்த்தளத்திலிருக்கும் ஹேமமாலினியின் அப்பா புரோகிதர். அவளுக்கு மதிப்பெண்களின் மூலம் டாக்டர் படிப்புக்கு இடம் கிடைத்



தது. அவள் போய் கல்லூரியில் சேர்ந்தாள். வீட்டில் பிணங்கள் பற்றியும், துண்டு துண்டாக்கப்பட்ட உறுப்புகள் பற்றியும் சொல்ல, அவளுடைய அப்பாவும், அம்மாவும், பாட்டியும் அவளை வீட்டு வாசலில் நிற்க வைத்து, கை கால் அலம்பச்சொல்லி, பின்பக்கமாய் நடந்து வந்து, பாத்ரூமில் சகல உடுப்புகளையும் கழற்றிப் போட்டுவிட்டு குளித்தபிறகே உள்ளே வரவேண்டும் என்று கட்டளையிட்டார்கள். கொதிக்கும் வெயிலாக இருந்தாலும், நடுங்கும் குளிராக இருந்தாலும், மழையாக இருந்தாலும் அவளை அவ்விதமே நடத்திவரார்கள். தீட்டு என்று சொன்னார்கள். படிக்கும் படிப்பைத் தீட்டு என்று சொன்னால், அந்தப் பெண்ணுக்கு எப்படி படிப்பு வரும்?

ஹேமமாலினி படித்தாள். படித்த ஐந்தாவது வருடம் வீட்டை விட்டு வெளியேறி வேறு ஜாதிக்காரனை திருமணம் செய்துகொண்டு அவர்களோடு எந்த சம்பந்தமுமில்லாமல் போய்விட்டாள். புரோகிதர் வீடு உரக்கக் கத்தியபோது, அப்பர் கீழிறங்கிப் போனார்.

"ஒரு நாளாவது அந்தப்பெண்ணை மரியாதையாக நடத்தியிருக்கிறீர்களா. அந்தப்பெண் இத்தனை நாள் உங்களோடு இருந்ததே பெரிது" என்று அதட்டிவிட்டு வந்தார். அப்பா அப்படி அதட்டுகிறபோதுதான் அம்மா அவனுடைய வாழ்க்கை எவ்வளவு சிறப்பானது என்பதை எடுத்துக் காட்டினாள்.

"உன் அப்பா மொழி படிக்கச்சொன்னது இதுக்குத்தான். தலையெழுத்தேன்னு படிக்காதே. தண்டத்துக்கு படிக்காதே. மொழியை நல்லா கத்துக்கிறதுக்காகப் படி. நீ ஒரு பதிப்பகத்துக்கு அதிபராகப் போற ஆள். உனக்கு மொழி தெரியலைன்னா உன் தொழில் மேல உனக்கு மரியாதை இல்லைன்னு அர்த்தம். நீ ஆங்கிலம் படிக்கறது எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அப்பா தமிழ் மட்டும்தான் பதிப்பு செய்யறாரு. நீ ஆங்கிலப் புத்தகம் வெளியிட முடியுமான்னு யோசிக்கணும். அதுக்காகத்தான் படிக்கிறேன்னு புரிஞ்சுக்கணும்."

அம்மா அறிவுறுத்த, அவன் ஆங்கிலத்தை காதலோடு படித்தான். தமிழ்மொழியை உயிர் என்று நேசித்தான்.

"நூற்றுக்கு தொண்ணூறு பதிப்பாளர்கள் தான் பதிப்பிக்கிற புத்தகத்தைத் தானே படிக்கறதில்லை. நான் அப்படி இருக்கமாட்டேன். நீயும் அப்படி இருக்கக்கூடாது. நம்ம பதிப்பகத்தில இருக்கிற அத்தனை புத்தகத்தையும் நீ படிச்சிருக்கணும். படிக்கலைன்னா. நீ தின்ற சோறு உனக்கு செரிக்காது" அப்பா கட்டளையிட்டார்.

அவன் அத்தனை தலைப்பிலுள்ள புத்தகங்களையும் முற்றிலுமாய் படித்தான். நல்ல ஆங்கில அறிவும், தமிழ்மீது காதலும் அவனை மிகச் சரியான பதிப்பாளராய் உயர்த்திக்கொண்டு வந்தன.

அறிவான அம்மா, அன்பான அப்பா, நல்ல செல்வச் சூழ்நிலையுள்ள வீடு, கெட்டிக்காரத்தனமான ஒரு சூழ்நிலை. மாம்பலத்தில் துடுக்கான இளைஞர்களும், துடிப்பான யுவதிகளும் நிறைந்த காலகட்டம். திருஞானம் ஆரோக்கியமாக வளர்ந்தான்.

"எதிர் பிளாட்ல இருக்கிற சரிதா உன்னை லவ் பண்றான்னு நினைக்கிறேன்டா. உன்னைப்பத்தி அடிக்கடி விசாரிக்கறா.. நீ

கையெழுத்துப்போட்ட புஸ்தகத்தை எப்பவுமே பையில வைச்சிருக்கா. உனக்கு அப்படி ஏதாவது ஐடியா இருக்கா. உன்கிட்ட அவ ஏதாவது சொன்னாளா" - நெருங்கிய நண்பன் விசாரித்தபோது திருஞானம் திகைத்தான்.

"எனக்கு இல்லை. அவளுக்கும் இருக்க வேண்டாம்னு சொல்லிடு. அவங்க வேற. நான் வேற. சரிதாவோட அம்மா, அப்பா வெள்ளை வெளேர்னு இருக்காங்க. சரிதாவும் நல்ல கலர். எங்க வீட்டில நாங்க எல்லோருமே மாநிறம். அவங்க பேசறதுக்கு முழுக்க முழுக்க இங்கிலீஷ். எங்க வீட்டில அதிகமாக ஆங்கிலம் பேசினா எங்கப்பா கோபப்படுவாரு. தமிழ்ல பேசடான்னு சீறுவாரு. அவங்க வீட்டில் எல்லாருடைய எண்ணமும் 'லண்டன், நியூயார்க், பிராங்க்பர்ட்'னு இருக்கு. என்னால இந்த மாம்பலத்தை விட்டு போக முடியாது. நான் கூட்டுப்புழு. அவ வெள்ளை நாரை. எப்படி சரி வரும்?

"இப்போதைக்கு பக்கத்துல இருக்கற ஆம்பளைங்கள்ல நல்லா உடுத்தறவன், பார்க்க லட்சணமா இருக்கறவன்னு அந்தப்பொண்ணு கணக்கு போடுது. வீட்டுக்குள்ள நுழைஞ்சிட்டோம்னா, அப்புறம் நம்ம இஷ்டத்துக்கு வளைச்சு எங்கயாவது கூட்டிக்கிட்டு போயிடலாம் அப்படின்னு அவங்களுக்குள்ள திட்டம் இருக்கு. நம்ம வேர் எது, நம்ம விஷயம் எதுன்னு அவங்களுக்கு தெரியவே தெரியாது. எனக்கு சரிதா மாதிரி பொண்ணுங்களைப் பாக்கறபோது லேசா பயம் வரும். நான் லவ் பண்ணலை. லவ் பண்ண மாட்டேன் அப்படின்னு சொல்லிடு. பிரெண்ட்லியா எவ்ளோ வேணும்னாலும் பழகலாம். லவ்ன்ற மேட்டர் வேண்டா ம்."

இது எப்படி அம்மாவுக்கு போயிற்று என்று தெரியவில்லை. அம்மா ஒரு பிற்பகல் சோறு போடுகிறபோது மனம் விட்டு பாராட்டினாள்.

"எனக்கு ரொம்ப சந்தோஷன்டா. இருபத்து நாலு வயசுல இப்படி ஒரு புத்தி உனக்கு வந்துடிச்சே. எனக்கு ரொம்ப சந்தோஷம். நீ ஒண்ணாம் தேதி பிறந்தவன். திருவோண நட்சத்திரம். தெளிவு உனக்கு நிச்சயமா வரும்னு தெரியும். ஆனா இவ்ளோ சீக்கிரம் வரும்னு தெரியாது. அந்த சரிதாவினுடைய அழகும், அசைவும், நிக்கறதும், நடக்கறதும் தெரு முழுக்க பசங்களை பைத்தியமாக்கிடிச்சி. உனக்கு அவ தூது அனுப்பியும் சட்டுன்னு வேணான்னு கைகூப்பினியே அது ரொம்ப பெரிய விஷயம். ஆனா, முறைப்பா போகாதடா. அவளைப்பார்த்தா சிரி. நல்லா இருக்கியான்னு கேளு. எதனா உதவி செய்யட்டுமான்னு நீயா போய் நில்லு. அவ, உள்ளுககுள்ள எதனா வேதனைப்பட்டா, வெக்கப்பட்டா அதை துடைச்சி எடுத்துடு" அம்மா எப்படி நடந்து கொள்வது என்று தொடர்ந்து வழிகாட்டினாள். இந்த உலகத்தில் லட்சத்தில் ஒருவருக்கே இப்படி வாழ்க்கை கிடைக்கும். இத்தனை சிறப்பா அம்மா கிடைப்பாள்.

"நான் இப்படி சொன்னதுக்கு ஒரு முக்கியமான காரணம் உண்டும்மா" அவன் அம்மாவிடம் அடிக்குரலில் பேசினான்.

"என்னடா" அம்மா ஆவலோடு பேசினாள்.



"நம்ம வீட்லேயும் ஒரு பொண்ணு இருக்கே" அவன் ஹாலில் உட்கார்ந்திருந்த தங்கை தாரிணியைக் காட்டினான்.

"எனக்கு இருபத்திநாலு வயசு. இவளுக்கு பதினாலு வயசு. இவள பாரு. பார்வைக்கு சாதாரணமாதான் இருக்கா. சரிதா இவ பக்கத்துல போய் நின்னாக்க இவ இன்னும் கருப்பா இருப்பா. சரிதா அவங்க வீடு இவள எப்படி நடத்தும். இந்த குழந்தை மூஞ்சி சுருங்கினா, இவ பயந்தா, இவ வெட்கப்பட்டா, இவ உள்ள வருத்தப்பட்டா, தாங்குமா. என் மடியிலே வளர்ந்த குழந்தை இல்லையா. அதனாலேயே நான் சரிதாவ வேண்டான்னு சொல்லிட்டேன்."

அம்மா அவனை உற்றுப்பார்த்தாள். தனது வலக்கையை அவன் தலையில் வைத்தாள்.

"நல்லாயிருப்படா. நீ ரொம்ப நல்லாயிருப்ப" நெகிழ்ந்து சொன்னாள்.

அதும் தவிர சரிதா அவங்க வேற வாழ்க்கை, நாம வேற வாழ்க்கை. இந்த வித்யாசமும் விவரித்தான்.

வீட்டிற்கு வந்த அப்பாவிடம் இதையெல்லாம் அம்மா விவரித்திருக்க வேண்டும். பதிப்பகத்திற்கு போனபோது அப்பா மிக மிக மரியாதையாக நடத்தினார். அன்றிலிருந்தே அவனை 'வாங்க' என்று மிகமிக மரியாதையாக கூப்பிட ஆரம்பித்தார்.

"ஏம்பா இப்படி" என்று அவன் மறுத்தபோது. "அதாண்டா மரியாதை. 'நீ புள்ள மட்டுமில்ல. பதிப்பகத்த தொடர்ந்து நீதான் நடத்தப் போற. வர்றவன் போறவனுக்கு நான் சொல்ல வேண்டாமா. அதனால மத்தவங்களுக்காகதான் உன்னை வாங்க போங்கன்னு சொன்னேன். அப்பதான் அவனும் வாங்கபோங்கன்னு சொல்லுவான். உன்னை டேய் வாடான்னா, வந்த வியாபாரி, எழுத்தாளன், அச்சுகோக்குறவன் எல்லாரும் உன்னை டேய்ன்னு கூப்பிட ஆரம்பிச்சுடுவாங்க. நான் மரியாதையா கூப்பிட்டா, மத்தவங்களும் மரியாதையா நடத்துவான். நீ முதலாளிடா. உன்னை நான் வாங்கன்னுதான் கூப்பிடணும்."

"எனக்கு சங்கடமா இருக்குப்பா."

"ஒரு சங்கடமும் இல்லை. நேத்து உங்கம்மா உன்னை பத்தி எவ்வளவு அழகா பேசினா தெரியுமா. எனக்கு சிலிர்த்து போச்சு. ஒரே ஒரு உதவி கேக்கவா."

"சொல்லுப்பா."

"உன்னை மாதிரி உன் தங்கச்சி இல்ல. கொஞ்சம் இரண்டாங் கெட்டான். அதுக்கு சட்டுபுட்டுனு ஒரு கல்யாணத்தை முடிச்சு, நாம கரையேத்திடணும். இதை மனசில ஞாபகம் வைச்சுக்க."

"நீங்க ஏதாவது மனசில வைச்சிட்டு பேசறீங்களாப்பா" அப்பாவை கூர்மையாக பார்த்து கேட்டான்.

"அவளுக்கு போறலைடா. கொஞ்சம் வெளிவாசல்ல நின்னு ஜொள்ளுவிடறா. பசங்க அவளை சுத்துறானுங்க. நீ கவனிச்சியா."

"மாம்பலத்துல அப்படிதாம்ப்பா. பசங்க கொஞ்சம் சுத்தத்தான் சுத்துவானுங்க. பொண்ணுங்களும் பேசத்தான் பேசும். மத்த ஊருங்க மாதிரி மாம்பலம் இல்லப்பா. கொஞ்சம் சோஷியல் டைப் சொஸைட்டி

இது. எனக்கு இது ஒண்ணும் தப்பா தோணலை."

"தொடர்ந்து பாரு. ஒருவேளை நான் சொன்னது தப்பாவும் இருக்கலாம்" அப்பா நிறுத்திக் கொண்டார்.

தொடர்ந்து பார்த்தபோது தங்கை தாரிணி அதிகமா ஜொள்ளு விடுவது தெளிவாய் தெரிந்துவிட்டது. இவன் மீது என்று ஒரு ஆள் மீது இல்லாமல் எந்த இளைஞனைப் பார்த்தாலும் சற்று அதிகமாகவே பரவசப்பட்டாள். அருகே போய் நின்று பேசினாள். பையன்கள் கண் சிமிட்டி பார்த்து அவளைப்பற்றி கேலி செய்தார்கள். அவளை எதிரே நிற்க வைத்து அதிகம் உற்றுப்பார்த்தார்கள்.

அவர்கள் உற்றுப்பார்ப்பது தாரிணிக்குப் பிடித்திருக்க வேண்டும். அவள் அலட்டலாகவே அவர்களுக்கு நடுவில் புழங்கி வந்தாள். திருஞானம் கவலையானான். அம்மாவிடம் மெல்ல சொன்னான்.

"அவ ரோகிணி நட்சத்திரம். உடம்பு மதமதன்னுதான் இருக்கும். ஆம்பிளை கேக்கத்தான் கேக்கும். தேதி ஆறு. மொத்தம் கூட்டுனா அந்த நம்பரும் ஆறு. சுக்கிரனுடைய ஆட்சி. கர்வியா இருப்பா. அலங்காரியா இருப்பா. என்ன பண்றது. ஒவ்வொருத்தர் ஒவ்வொரு கர்மத்தோட பொறந்திருக்கோமே. அவங்கவங்க தலையெழுத்துபடிதானே ஆவும் நீ கொஞ்சம் கண்டிச்சு வைக்கக்கூடாதாம்மா."

"இதெல்லாம் அதிகமாக கண்டிக்க முடியாதுடா. அழுத்துனோம்னா பிடுங்கிகிட்டு வந்திடும். நான் அப்பப்போ விளைவு சொல்லி எச்சரிச்சு தான் வைச்சிருக்கேன். அதையும் மீறி ஆகுதுன்னா நான் என்ன பண்ண முடியும் சொல்லு."

தாரிணி பத்தாம் வகுப்பில் குறைந்த எண்ணிக்கையில் தேறினாள்.

பதினோறாம் வகுப்பில் நடனம், மாறுவேடப் போட்டி என்று ஆட்டம் போட்டாள். பன்னிரெண்டாம் வகுப்பில் தாக்குபிடிக்க முடியாமல் தோற்றுப்போனாள்.

"அடப்போ யாருக்கு வேணும் படிப்பு" என்று நிறுத்திக் கொண்டாள். சமையலுக்கு இறங்கினாள். ஆனால் இயற்கை அற்புதமானது. குறையுள்ளவர்களுக்கு ஏதேனும் ஒரு நிறையும் வைத்துவிடுகிறது.

தாரிணி அற்புதமாக சமைப்பாள். விதவிதமாக சமைப்பாள். மிக அழகாய் கோலம் போடுவாள். வண்ணம் தீட்டுவாள். புடவை உடுத்தி நிமிர்ந்தால் மாம்பலம் பதறி எழும். அதிசயமாய் பார்க்கும். அவள் கையினால் மருதாணி வரைந்துகொள்ள அடிதடி ரகளையே நடக்கும். தாரிணி மக்கு இல்லை. கெட்டிக்காரி. அவளுக்கு படிக்க இஷ்டமில்லை. அதனால் படிப்பு வரவில்லை. அந்த அந்தணர் கூட்டத்துக்கு நடுவே, இந்த செங்குந்த முதலியார் பெண் இளவரசியாய் வலம் வந்தாள்.

"தாரிணி கொழுக்கட்டை விண்டு போறதுடி கொஞ்சம் வாடி" பிள்ளையார் சதுர்த்தி அன்று ஒரு மாமி அள்ளி எடுத்துக் கொண்டு போனாள்.

"மணல் மணலா போறது. எப்படி செய்யறதுன்னு ஒருதரம் சொல்லித்தரமாட்டியா பிளீஸ்" இன்னொரு மாமி வந்து கெஞ்சுவாள்.

"நாளைக்கு சுமதிக்கு பெண் பாக்க வ்ரா. நீ மூஞ்சிக்கு ஏதும் பூசிப்பியாமே. நிறம் எடுப்பா தெரியுமாமே, அந்த மாதிரி அவளுக்கு



கொஞ்சம் பண்ணி விடப்படாதா. என்ன செலவானாலும் நான், தரேன். நல்லதா பண்ணேன்" தாரிணியால் வீட்டினுடைய அமைப்பு மாறியது. சாதாரண மத்தியதரவர்க்கமாக இருந்த வீடு, அவளுடைய கைவண்ணம் பட்டு, செல்வச்செழிப்பு உள்ளதுபோல், தோற்றம் கொடுத்தது.

பெரிய ஹாலில் நேரெதிரே மர ஷெல்ப் செய்ய சொல்லி, அதையே பூஜையறையாய் மாற்றியிருந்தாள். உள்ளே நுழைகிற எவனும் கைகூப்பாமல் இருக்க முடியாது. பூஜையறையில் நெடுந்துயர்ந்த திருவேங்கடவனை வணங்காமல் போகமுடியாது.

"என்னாங்க இது வீடு கோயில் மாதிரி இருக்கு" என பலர் சொல்லியிருக்கிறார்கள்.

"நீங்க கோவிலை வீடா மாத்தியிருக்கீங்க போலிருக்கு" வருபவர்கள் வியப்பார்கள்.

"இது வீடே இல்லை கோயில்" என்று விழுந்து வணங்குவார்கள்.

"முதலியார் சார். பையன் ப்ளஸ் டூ பரீட்சை போறான். கொஞ்சம் உங்க வீட்டு வெங்கடாஜலபதிக்கு நமஸ்காரம் பண்ணிக்கலாமா" அப்பா, அம்மா, பிள்ளை மூவரும் விழுந்து வணங்குவார்கள். கதம்ப மாலை போடுவார்கள்.

"பொண்ணுக்கு வரன் நிச்சயமாயிடுத்து. பட்டு சாத்தறதா வேண்டின்டேன். சாத்தட்டுமா" வேறொரு பெண்மணி வந்து பட்டுப் புடவையை வெங்கடாஜலபதிக்கு சார்த்திவிட்டு போவார். அந்தப் பட்டுப்புடவை வேறொரு ஏழைப்பெண்ணுக்கு தானமாகக் கொடுக்கும் படி அப்பா சொல்வார்.

"பத்மா புள்ளையாண்டுருக்காளாம். நியூ ஜெர்ஸியில இருந்து போன் வந்தது. ஒரு அஞ்சு நிமிஷம் இங்க உக்காந்துட்டு போட்டுமா" - வேறொரு குடும்பத்தினர் வருவார்கள். எங்கோ இருக்கிற பெண்ணுக்கு இந்த வீட்டிலுள்ள வெங்கடாஜலபதியின் பாதத்தில் விளக்கேற்றி வைத்து, கற்பூர ஆரத்தி காட்டி கண்மூடி அமர்ந்து விட்டுப் போவார்கள்.

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் அந்த ஒரு வீடு கோவிலாகத்தான் இருந்தது.

"எல்லாருக்கும் கல்யாணம் நடக்குது. இதுக்கு ஒரு வேளை வரலையே" அம்மா மெல்ல புலம்பத் துவங்கினாள்.

தாரிணிக்கு இருபது வயது ஆயிற்று.

"இன்னும் ஒரு வருஷம் போட்டும். அவ இன்னும் சில விஷயங்கள் கத்துக்கட்டும்" அப்பா அவளை சுதந்திரமாக விட்டார்.

தாரிணி, தலைமுடி வெட்டவும், கால்களையும் கைகளையும் பேணிக் காக்கவும், கண் புருவத்தை வில்லாய் சரிசெய்து கொள்ளவும் தனித்த படிப்பு படித்துவிட்டு வந்தாள். டிவியின் தாரிணி இனிப்பு சோமாஸ் செய்ய, மதர்த்த உடம்பில் புடவையை இழுத்து சொருகிக் கொண்டு, தேங்காய் வறுத்து, சர்க்கரை பொடி கொண்டு கிளறி, அழகாய் நடுவே பூரணம் வைத்து அதை நறுவிசாய் மடித்து, வட்டக்கத்தரியால் கத்தரித்து, எண்ணையில் பொரித்து அடுக்கிக் காட்ட, கிட்டத்தட்ட அத்தனை குடித்தனங்களிலும் கைத்தட்டல் கேட்டது.

"கடையிலகூட இத்தனை அழகா பண்ணமாட்டா. என்ன நறுவிசு

என்ன தெளிவு. இவளை ராஜாவாட்டம் மாப்பிள்ளை வந்து கொத்திண்டு போகப்போறான்" என்று எதிர்வீட்டு மாமி வாசற்படியில் நின்று உரக்கச் சொன்னாள்.

அவள் வாக்கு பலித்தது; தூர்தர்ஷன் டி.வி. கேமராமேன் அவளைக் கொத்திக்கொண்டு போனான்.

"சென்ட்ரல் கவர்மெண்ட் சம்பளம் பதினெட்டாயிரம். இதைத் தவிர வெளியு வாசல்ல கேமராவைத் தூக்கிகிட்டு போனேன்னு வைச்சுக்க. இரண்டாயிரம், மூணாயிரம் தனியா கிடைக்கும். சொந்தமா வீடு இருக்கு. மோட்டார் சைக்கிள் வைச்சிருக்கேன். உன்னை உள்ளங்கையில வைச்சு காப்பாத்துவேன்" - என்று அவன் வாக்கு கொடுத்தான்.

அவள் வீட்டில் வந்து சொல்ல, அப்பாவும் அம்மாவும் யோசனை செய்தார்கள். கிளம்பி அந்த கேமராமேன் வீட்டிற்கு போனார்கள். போய் பார்த்து விசாரித்திருக்கிறார்கள். அதிகம் பிக்கல், பிடுங்கல் இல்லாத வீடு. முதலியார்கள் இல்லை. பிள்ளைமார். இருந்தாலும் என்ன. அப்பா சரியென்று சொல்லிவிட்டார். அவர்கள் வீடும் இவர்களைப் பார்த்து சந்தோஷப்பட்டது. 'நல்ல இடம்தான்' என்று விசாரித்து தெரிந்து கொண்டது பெரிய சீர் கேட்டது. அப்பா செய்தார்.

திருமணத்தையும் சிறப்பாக நடத்தினார். தாரிணி நிறைவாக தனிக் குடித்தனம் போனாள்.

தன் பக்க கோல் போஸ்ட் அரசே குழம்பிக் கொண்டிருந்த கால் பந்து, விரைவில் முன்னேறி, சில விநாடிகளில் எதிர்ப்பக்கம் அடைந்து, ஒரு குறிப்பிட்ட மூலையிலிருந்து விண்ணென்று பறந்து எதிர்ப்பக்க கோலுக்குள் புகுந்தது போல இந்தத் திருமணம் நடந்து போயிற்று. எப்படி நடந்தது, யாரால் நடந்தது என்று சொல்லவே முடிய வில்லை.

"அப்படித்தான்பா. எல்லா கல்யாணமும் அப்படித்தான். நடக்கலையே, நடக்கலையேன்னு கவலைப்பட்டுட்டு இருப்போம். சடக்குனு இரண்டு வாரத்தில கழுத்துல தாலி ஏறிடும். இது ஒண்ணும் அதிசயமே இல்லை. இந்த மாதிரி நிறைய கல்யாணம் பாத்திருக்கேன். அவ மகா கெட்டிக்காரி. ரொம்ப சௌக்கியமா இருப்பா. அவளைப்பத்தி கவலையை விட்டுடு" - எதிர்வீட்டு மாமி உரக்கச் சொன்னாள்.

அந்த கேம்ராமேனை பெங்களூருக்கு மாற்றினார்கள். கர்நாடகா தூர்தர்ஷனுக்குப் போய் அங்கு வேலைசெய்யத் துவங்கினான். தாரிணி பெங்களூர் எல்லையில் குடித்தனம் போட்டாள். மறுவருடமே கருவேந்தி வ ந்தாள்.

தங்கை தாரிணிக்கு சுகப்பிரசவம் ஆனது. ஆண்குழந்தை பிறந்தது. பிரசவத்திற்குப்பிறகு பத்து, பதினைந்து நாட்கள் சோர்வாக இருந்த தாரிணி, மெல்ல மெல்ல நல்ல ஆகாரத்தால் அம்மாவினுடைய சீராட்டலால் மீண்டும் பொலிவானாள். முன்னைவிடவும் அழகானாள். அவள் புகுந்த வீட்டிற்கு தந்தியின் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. வயதான மாமனாரும், மாமியாரும் மிக சந்தோஷம் என்று பதிலுக்கு ஆசீர்வாத கடிதம் அனுப்பினார்கள்.

ஆனால் புருஷன்தான் குழந்தையைப் பார்க்க வருவதற்கு தாமதமாயிற்று. அவள் இங்கு வந்த வேலை, அவனை டெல்லிக்கு மாற்றி



னார்கள். டெல்லியிலிருந்து எல்லைப்பக்கம் போகச் சொன்னார்கள். அவன் எங்கிருக்கிறான் என்று உடன் வேலை செய்பவர்களுக்கு தெரியவே பல நாட்களாயின. அதனாலும் தொடர்புகொள்ள முடியவில்லை.

தாரிணி பொருமித் தீர்த்தாள்.

"வரும் இல்லே. அப்ப வைச்சுக்கறேன்" என்று வாய்க்கு வந்தபடி திட்டினாள். அம்மா சமாதானப்படுத்தியும் கேட்காமல், புருஷன் பேரை சொன்னபோதெல்லாம் ரௌத்திரமானாள்.

"இப்படி கோபப்பட்டு கத்தினின்னா உனக்கு சரியா பால் சுரக்காது. சரியா பால் சுரந்தாலும், குழந்தைக்கு அது நல்லதா இருக்காது. அமைதியா இரு. என்ன வேலையோ, என்ன தொந்தரவோ. ஆசையா இருக்கற புருஷன்தானே. வராதயா போயிடுவான்."

"இத்தனை நாள் என்ன புடிங்கினு இருக்கான். குழந்தை பொறந்துன்னு கேள்விப்பட்ட உடனே பிசாசு மாதிரி ஓடிவந்து நிக்கவேணாம். அதான் எதிர்க்க பொம்பளை இருந்தா ஆடிக்கினே இருக்கணும்" தாரிணி கொஞ்சம் எகத்தாளமாய் பேசினாள். அவள் பேச்சிலிருந்து அவள் சொடுக்கினால் அவள் புருஷன் எழுந்து நிற்பான் என்றும், அதட்டினாள் புருஷன் ஓடிவருவான் என்றும், அவளுடைய புகுந்த வீடு அவள் பேச்சுக்கு நாய் மாதிரி வாலை ஆட்டிக்கொண்டு இருக்குமென்றும் தெரிந்தது.

"எங்க மாமனார் மெல்ல, இன்னைக்கு பூரி பண்றியாமான்னு ஆரம்பிப்பாரு. 'தயவுசெய்து விட்ருங்க. எனக்கு தோள்பட்டை வலி. என்னால பூரில்லாம் இடவே முடியாது.' தடுக், தடுக்குனு இப்படி கேட்டா நான் எப்படி செய்ய முடியும்'னு பதிலுக்கு கத்துவேன். 'சரிம்மா பூரி வேணா, ஏன் தோள்பட்டை வலி டாக்டராண்ட போலாமான்னு வாரு. 'அதெல்லாம் ஒண்ணும் வேணாம்' அப்படின்னு போய் படுத்துக்குவேன். திடீர்னு 'அய்யோ பாவம், என்னமோ கிழவன் ஆசைப்பட்டு கேக்கறான்'னு தோணும். உடனே மாவு பிசைஞ்சு இருபது பூரி இட்டு, கூட சப்ஜி பண்ணி, அவருக்கு நாலு, புருஷனுக்கு ஆறு, மாமியாருக்கு நாலுன்னு பரிமாறுவேன். அவங்களுக்கு அத்தினி சந்தோஷமாயிடும். 'அது எப்படி நீ பூரி செய்யாம போலாம்னு கேள்வி கேட்டா, வாழ்க்கையில அதோட பூரியே செய்ய மாட்டேன்" - அவள் தன வீர தீர சாகசங்களை அம்மாவிடம் விளக்கிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா, இது இன்னும் ரெண்டுங்கெட்டானாவே இருக்கு" - சாப்பிடும்போது அம்மாவிடம் திருஞானம் கேட்டான்.

"சிலபேருக்கு வாழ்க்கை தங்ககிரீடமும், இடுப்பு ஒட்டியாணமுமா கிடைக்கும். அவளுக்கு நல்ல அப்பா, அம்மா, நல்ல அண்ணன், நல்ல புருஷன், வசதியான புகுந்தகம்னு கிடைச்சுது. அனுபவிக்கிறா. என்ன செய்யறது. அவ வாங்கினு வந்த வரம். ஆனால் இத்தினி சௌகரியத்தை இன்னும் இதமா அனுபவிக்கறதுக்கு அவ கத்துக்கலாம். இதில எங்கயாவது இடிச்சிப் போச்சு. இதுங்கள்லாம் தூக்கு போட்டுக்கிட்டு செத்துடும்" - அம்மா அழகாக தங்கையின் மனோநிலையை விவரித்தான்.

தாரிணியின் புருஷன் எல்லையிலிருந்து ராணுவ விமானம் மூலம் நேரே பறந்து சென்னைக்கு வந்து இறங்கினான். ஜீப் ஏறி வீட்டிற்கு வந்

தான். பன்னிரெண்டு நாட்கள் பனிமலையின் உச்சியில் ராணுவ வீரர் களோடு கழித்ததை போட்டோக்கள் கொண்டு வந்து காட்டினான்.

தாரிணி அவனைத் திரும்பியே பார்க்கவில்லை. முகம் கொடுத்தே பேசவில்லை. குழந்தையை அவன் வாங்கிப் பார்த்ததும், சட்டென்று பிடுங்கிக் கொண்டு அறைக்குள் போய்விட்டாள். அவளைச் சமாதானப் படுத்த அவன் பரபரப்பது தெரிந்தது.

"இப்போதைக்கு யாரும் உள்ளே வரவேண்டாம்" என்று தாரிணி கதவு சாத்திக் கொண்டாள். அவன் கலங்கிப்போய் ஹாலில் உட்கார்ந் திருந்தான்.

"இது புருஷன், பொண்டாட்டி சண்டை. நீயும் நானும் ஜாஸ்தி பட்டுக்க வேண்டாம். நான் கோயிலுக்கு கிளம்பறேன். நீ கடைக்கு கிளம்பு" அம்மா திருஞானத்தைத் துரத்தினாள். அப்பாவும், பிள்ளையும் கடைக்குப்போய் உட்கார்ந்து அடுத்தபடி என்ன ஆகவேண்டும் என்று அன்றைய தொழிலை கவனித்தார்கள்.

எப்படித் தீர்த்தாளோ, என்ன செய்தாளோ அல்லது புருஷன் எத்தனை முறை நமஸ்காரம் செய்தானோ தெரியவில்லை. மாலை நேரம் இரண்டுபேரும் அருகருகே உட்கார்ந்து குழந்தையை மடியில் போட்டு கொஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

மாப்பிள்ளை மூன்று நாள் இருந்தான். மறுபடியும் ராணுவ ஜீப் வீட்டு வாசலுக்கு வந்து அவனை வேலைக்குக் கூப்பிட்டது. இந்த முறை அஸ்ஸாம் பகுதிக்கு பயணப்பட வேண்டுமென்று அழைத்தது. அரசாங்க உத்தியோகஸ்தரான மாப்பிள்ளை, எந்த மறுபேச்சின்றி தன்னுடைய பெட்டி, படுக்கைகளோடு ஜீப் ஏறி அமர்ந்தான். பிரியாவிடை பெற்றான். தாரிணி வாசற்படியை பிடித்துக்கொண்டு கண்ணீர் உகுத்தாள். மொத்த அடுக்குமாடி வீடுகளும் வாசலில் நின்று மாப்பிள்ளையை வழியனுப்பி வைத்தது. தாரிணியை 'ஐயோ பாவம், ஐயோ பாவம்' என்று கொண்டா டியது. அரைநாள், துக்கத்திலிருந்த தாரிணி மறுபடியும் அலட்டிக் கொண்டு அம்மாவை இடைவிடாது வேலை வாங்கினாள்.

தாரிணியின் குழந்தையை மடியில் போட்டு கொஞ்ச குடித்தனக் காரர்கள் போட்டிபோட்டுக்கொண்டு வந்தார்கள். ஆளாளுக்கு தூக்கிக் கொண்டு கொஞ்சினார்கள்.

பதிப்பகத்தின் எல்லா வேலைகளையும், எல்லா நுணுக்கங்களை யும் அப்பா திருஞானத்துக்கு தெளிவாகக் கற்றுக் கொடுத்தார். எழுத் தாளர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். இன்னும் என்னென்ன செய்ய லாம் என்று விவாதித்தார். 'உன்னுடைய ஆலோசனை என்ன' என்று கேட்டார்.

"கடையை ஏஸி பண்ணலாம்பா" திருஞானம் சொல்ல, அப்பா திகைத்தார்.

"ஒரு புஸ்தக கடையை எதுக்கு ஏஸி பண்ணனும். ஏஸி பண்ணா புஸ்தகம் லேசா ஈரமாகும். லேசா ஈரமானா பூச்சி வரும். இது நல்லதா" ஆட்சேபித்தார்.

"பூச்சி வரும்றதுக்காக வர்ற மனுஷாளை வியர்வையில நிக்க விட லாமா."



"ஏன் ஃபேன் காத்து போதாதா"

"சென்னைப் பட்டணத்திலே வெயில் அதிகம். புஸ்தகம் வாங்க வர்றவங்க உக்காந்து பத்து புஸ்தகம் பாக்கணும். வேர்த்து வழிய உடனே கிளம்பிடக்கூடாது. மூச்சு திணறக்கூடாது. ஏஸி போட்டு விட்டுட் டோம்னா வர்றவங்க உக்காந்து புஸ்தகம் பார்ப்பாங்க. பத்து புஸ்தகம் பார்த்தா, அதில ரெண்டு புஸ்தகம் எடுத்தாலும் போதும். நமக்கு நிறைவு."

"வேணும்னுட்டே உக்கார்றவங்களும் இருப்பாங்கடா."

"ரெண்டு நாள் உக்காருவான். மூணாம் நாள் கண்டுபிடிச்சிடலாம். என்னங்க ஏதாவது தேடறீங்களான்னு அழுத்தி விசாரிச்சா, தானா வெளிய போயிடுவான். ஆனா ஏஸி பண்றது ரொம்ப முக்கியம்பா."

அப்பாவும் பிள்ளையும் மறுபடியும் பேசி, கடைசியில் ஏஸி பண்ணுவது என்று முடிவாகி அந்த வேலை திருஞானத்திடம் கொடுக்கப் பட்டது. திருஞானம் பல்வேறு விதமாய் அந்த இடத்தை சோதித்து விட்டு அலமாரிகளின் இருப்பை மாற்றி, கண்ணாடி விஷயங்களை அதிகரித்து, சரியான இடத்தில் ஏற்றிப் பொருத்தி, கதவு சந்துகளை அடைத்து, தரையின் நிறத்தை மாற்றி சுவரில் அலங்காரப்பொருட்கள் தொங்கவிட்டு மிக வசீகரமாய் அதைச் செய்தான். நினைத்ததை விட காசு கொஞ்சம் அதிகமாக செலவாயிற்று. ஆனால் சென்னையில் எந்தப் பதிப்பகமும் இவ்வளவு அழகாக காட்சியளித்ததில்லை என்ற பெயர் வந்தது.

ஒரு வாரப்பத்திரிகையில் கூட 'குளுகுளு' பதிப்பகம் என்று அதை விளம்பரப்படுத்தி இருந்தார்கள். அந்தப்பத்திரிகை படித்துவிட்டு பதினைந்து பேர் கடைக்கு வந்தார்கள். புத்தகங்கள் வாங்கினார்கள்.

மொழிபெயர்ப்பு புத்தகங்களையும், விஞ்ஞானப்புத்தகங்களையும் திருஞானம் அதிகரித்தான். குறிப்பாய் மருத்துவ புத்தகங்களை திரு ஞானம் அதிகமாய் பிரசுரித்தான். எளிய தமிழில், ஆங்கில வைத்தியப்படி ரத்தக்கொதிப்பை எப்படி தடுக்கிறார்கள் என்றும், சித்த வைத்தியப்படி எப்படி தடுக்கிறார்கள் என்றும், ஹோமியோபதி வைத்தியத்தில் எப்படித் தடுக்கிறார்கள் என்றும், உணவுப்பழக்கத்தில் ரத்தக்கொதிப்பை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்றும், பல்வேறு வகையாகச் சொல்ல, அந்தப் புத்தகம் வந்தவுடனேயே இரண்டாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.

இந்த மாதிரி புத்தகங்களுக்கு மதிப்பு இருப்பது தெரிந்து சர்க்கரை வியாதி, சிறுநீரகங்களும் அதன் செயல்களும், இருதயமே என்ன சொல் கிறாய் என்றெல்லாம் கவர்ச்சியாக தலைப்பில் உடற்கூறு பற்றி புத்தகங்கள் போட, படித்த ஜனங்கள் அதை அள்ளிக்கொண்டு போனார்கள். பள்ளிக்கூடங்களில் வாங்கினார்கள். லைப்ரரிகளில் அந்தப் புத்தகங்கள் எந்தத் தடங்கலும் இல்லாமல் உள்ளே நுழைய முடிந்தது.

அடுக்குமாடிக் கட்டிடத்தில், மிகவும் நன்றாக சமைக்கக்கூடிய ஒரு பெண்மணியைப் பற்றி எல்லோரும் சொல்ல, அவரைத் தேடிக் கொண்டு திருஞானம் போனான். பத்து சமையல் குறிப்புகள் எழுதச் சொன்னான். அவள் சுமாராக எழுதிக்கொடுக்க, அதை இன்னும் எளிமையாகவும், சுவையாகவும் இவன் எழுதி மாற்றினான். மீனாட்சியம் மாள் சமையல் புத்தகத்தை அந்தப்பெண்ணிடம் கொடுத்து, அதை

படிக்கச்சொல்லி, அவர்களுடைய முறையிலே திருத்தி அமைக்கச் சொன்னான். அவர்கள் திருத்திக்கொடுக்க, அந்த மொழிநடையை சீனிவாசன் மாற்றினான். அந்தப் பெண்மணி பார்ப்பதற்கு மிக லட்சணமாக இருந்தாள். களையான முகத்தோடு காட்சி அளித்தாள்.

அவளை, நல்ல போட்டோகிராபரை வைத்து, பல்வேறு விதமாய் போட்டோ எடுத்து, அட்டைப்படத்தில் முழுவதுமாகப் போட்டு, 'சாந்தா மேடத்தின் சமையல் குறிப்புகள்' என்று புத்தகம் போட, அழகிய பெண்ணின் முகத்திற்காகவும், உள்ளே இருக்கிற மொழிநடைக்காகவும், சாதாரண வத்தக்குழம்பிலிருந்து தேங்காய் அரைத்து செய்யும் சாம்பாரி விருந்து, அன்னாசிப்பழ ரசம், தக்காளி ரசம் என்று தினசரி வீட்டில் பயன்படுத்தும் விஷயங்களையும் விவரிக்க, மிகப்பெரிய அளவில் அது வாங்குபவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. இருநூறு, முந்நூறு என்று அந்தப்புத்தகத்திற்கு ஆர்டர்கள் குவிந்தன. வெளிநாட்டிலிருந்து ஐந்நூறு புத்தகத்திற்கு ஆர்டர் வந்தது. துணிந்து ஐயாயிரம் காப்பி அடிக்க உச்சநிலைக்கு அந்தப்புத்தகம் போயிற்று.

அந்த மாமியை வேறொரு பதிப்பாளர் மடக்கிப் பிடிக்க முயற்சிக்க, அந்த மாமி 'முடியாது' என்று சொல்லிவிட்டாள். இப்படி வருகிறார்களே' என்று திருஞானத்திடம் வந்தாள். திருஞானம் அவளுக்கு நல்ல சன்மானம் கொடுத்தான். உயர்ந்த பட்டுப்புடவை வாங்கிக் கொடுத்தான். அவள் வீடு அவனை போற்றித் துதித்தது. அதுமட்டுமில்லாமல், மாப்பிள்ளையின் நண்பர்களால் சென்னைத் தொலைக்காட்சியில், சாந்தா மேடத்திற்கு, ஒரு வாரம், அதாவது ஐந்து நாட்கள் ஐந்து வித சமையல் செய்துகாட்ட அரைமணி நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுக்க, அந்த நிகழ்ச்சியின் மூலம் சாந்தா மேடம் பிரகாசமானார்கள். சாந்தா மேடம் பிரகாசமானதால் புத்தகமும் பிரகாசமாயிற்று. 'அடடே, டிவியிலே வருவாங்களே. அவங்கதானே இவங்க' என்று எல்லோரும் சொல்லி புத்தகத்தை வாங்கினார்கள். வட இந்திய சமையலும், கேரளத்து சமையலும், பத்திய சமையலும் தனித்தனியான புத்தகங்கள் சாந்தா மேடத்தின் வெள்ளைவெளேரென்ற முகத்தோடு, வைரமூக்குத்தி, குங்குமப்பொட்டு, விபூதி கீற்றோடு அட்டைப்படம் போட்டு வருகிற போது அந்தப்புத்தகங்களும் விற்பனையாயின.

அப்பா அவனைத் தழுவிக்கொண்டு பாராட்டினார். மற்ற பதிப்பாளர்கள் அதேவிதமாய் செய்ய முயற்சித்து தோற்றுப்போனதும் அவருக்குத் தெரிந்திருந்தது.

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் அதிகம் பேசாத ஒரு தெலுங்கு நண்பர் அவர் உறவினர் ஒருவரை அழைத்து வந்தார். உறவினருக்கு தமிழ் சுத்தமாக தெரியவில்லை. ராஜமுந்திரியின் விரைவான தெலுங்கில் அவர் பேச, அந்த தெலுங்கு நண்பர் அதை மொழிபெயர்த்தார்.

'ஆந்திராவில் வாஸ்து சாஸ்திரம் பார்க்காமல் எதுவும் செய்ய மாட்டார்கள்' என்று விவரித்து, அந்த திசைகளைப் பற்றியும், அந்தத் திசைகளில் இருக்க வேண்டிய விஷயங்கள் பற்றியும், அதன் பலன்களைப் பற்றியும், அப்படி இருக்க வேண்டிய விஷயம் இல்லாவிட்டால் அதனால் ஏற்படும் கெடுதல்கள் பற்றியும் விவரித்தார். திருஞானத்துக்கு வியப்பாக



இருந்தது.

"அடுக்குமாடி வீடுகளுக்கு வாஸ்து சாஸ்திரம் உண்டா?" - திருஞானம் கேட்க, 'உண்டு' என்று அடித்துச் சொன்னார்.

"குடிசையாயினும் சரி. கோபுரத்தின் உச்சியாயினும் சரி. அதற்கு வாஸ்து சாஸ்திரம் பலிதமாகிறது. ஒரு சாது கோபுரத்தின் உச்சியில் எட்டாவது தளத்தில் தன் இருப்பிடத்தை வைத்துக்கொண்டு தவம் செய்து வந்தார். அந்தக் கோபுரத்தில் அவர் தேர்ந்தெடுத்து உட்காருகின்ற மூலையைப் பொறுத்தே அவருடைய தியானமும் அமைந்தது என்று விவரித்தார். அடுக்குமாடி வீட்டில் முதல் தளமாக இருந்தாலும், இரண்டாவது, மூன்றாவது தளமாக இருந்தாலும், கீழ்த்தளமாக இருந்தாலும் வாஸ்து சாஸ்திரத்தினுடைய விஷயங்கள் பலிதமாகின்றன" என்றும் அவைகளை சொந்த வீடு போல் மாற்ற முடியாது போனாலும், பரிகாரங்கள் செய்யலாமென்றும் கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்தில் அவர் சொன்ன விஷயங்களை அவன் குறிப்பெடுத்துக்கொள்ள அவை மிக சுவையானதாக இருந்தன.

திருஞானம் அதை அப்பாவிடம் படித்துக்காட்ட, 'முதலில் அதை நாம் பரீட்சித்துப் பார்ப்போம்' என்ற அப்பா, "நம் வீட்டில் என்ன குறை என்ன மாற்றங்கள் செய்தால் நல்லது" என்று அவரிடம் கேட்டார்.

அவர் சுற்றிப்பார்த்துவிட்டு, "ஈசான்யத்தில் மாடி வராண்டா இருக்கிறது. அந்த ஜலதாரையை மூடி விடுங்கள். அது வழியாக ஜலம் போக வேண்டாம். அங்கே செடி வளருங்கள்" என்று இடம் காட்டினார். வீட்டு அக்கினி மூலை பக்கம் அருகம்புல் வளர்க்கச் சொன்னார். நடுக் கூடத்தில் அகலமான இலையும், அது கூர்மையாக முடியும்படியும் செடிகள் வைக்கச் சொன்னார். பூஜை அலமாரிக்கு நேரெதிரே விநாயகர் சிலையை வைக்கச் சொன்னார். வீட்டில் குழந்தை இருப்பதால், வாசலில் காற்றில் அசையும் மணியைக் கட்டச் சொன்னார். வராண்டாவில் குருவிகள் கூடுகட்ட அட்டைப்பெட்டியால் ஒரு அமைப்பு குருவிகள் வருவதற்கு ஏதேனும் ஒரு வசதி செய்யச் சொன்னார். ஏற்படுத்தச் சொன்னார்.

"வெறும் நடராஜர் சிலை மட்டும் வைத்திருக்கிறீர்களே. அதற்கும் உடைபோடாமல் வைத்திருக்கிறீர்களே இது தவறு. ஒரு பட்டு அங்கவஸ்திரமும், சிறிய கிரீடமும், இடுப்பில் புலித்தோல் ஆடையும், அவருக்கு நீங்கள் நிச்சயம் மரட்ட வேண்டும். தூக்கிய காலுக்கு சந்தனம் அப்ப வேண்டும். அதில் குங்குமம் வைக்க வேண்டும். வெகுநிச்சயமாய், அவருக் கருகே பார்வதி சிலையாய் நிற்கவேண்டும். அந்தச்சிலைக்கு புடவையும், தாலிக்கொடியும் அணிவிக்க வேண்டும். இரண்டு சிலை களையும் சுத்தப் படுத்தி வாராவாரம் அதற்கு குங்குமம், சந்தனம் வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமைதோறும் கற்பூர ஆரத்தி காட்டவேண்டும். ஊதுவத்தி காலையும், மாலையும் நிச்சயமாக ஏற்றி வைக்கவேண்டும்" என்று சொன்னார்.

"ஏற்றி வைத்தால் என்ன ஆகும்?"

"சிவன் உமையோடு இருக்குமிடம் கைலாயம். அந்தக் கைலாயம் போலவே வீடும் குளுமையாக இருக்கும். கோபமே வராது. சண்டையே

எழாது. செல்வம் பெருகும்" என்று அவர் சொன்னார்.

அவன் அப்படியே விரைவாகச் செய்தான். தொள்ளாயிரம் ரூபாய் கொடுத்து ஒரு பார்வதி ஐம்பொன் விக்கிரகம் வாங்கி வந்தான். புடவை உடுத்தினான். தங்கக்காசில் தாலிச்சரடு கோர்த்து பார்வதியின் கழுத்தில் மாட்டினான். சிறிய கிரீடம் நடராஜருக்கு ஏற்படுத்தி புலித்தோல் வர்ண துணியால் இடுப்பில் வேட்டி கட்டி, சரிகை அங்கவஸ்திரத்தை இரண்டு பக்கமும் தொங்கவிட்டான். காலில் சந்தனம் அப்பினான். குங்குமம் இட்டான். தினமும் பூ கொண்டு வரச்சொல்லி சிவபெருமானுக்கும், உமையவளுக்கும் சாத்தினான்.

வீட்டில் வெகுநிச்சயமாய் மாற்றங்கள் தெரிந்தது. தாரிணிகூட இனிமையாகவும், அமைதியாகவும் பேச ஆரம்பித்தாள். அதுவரை சமையலறையே முக்கியம்' என்று கிடந்த அம்மா, காலையில் எழுந்தவுடனேயே பல் தேய்த்துவிட்டு, சிவபெருமான் சந்நிதிக்கு முன்பு தர்ப்பையால் விரித்து கண்மூடி உட்கார்ந்து கொண்டு 'ஓம் நமச்சிவாய' என்று 'பஞ்சாட்சர மந்திரம்' சொன்னாள். "எதற்கு திடீரென்று" என்று கேட்ட போது,

"சொல்லத் தோன்றுகிறதடா. சொல்ல இடைவிடாது ஒரு எண்ணம் உந்துகிறது. ஏன் சொல்ல மறுக்கிறாய் என்ற ஒரு கேள்வி எழுகிறது. மூன்று நாட்கள் வெட்கப்பட்டேன். அதற்குமேல் முடியவில்லை, உட்கார்ந்து விட்டேன்" என்று நெகிழ்ச்சியோடு சொன்னாள்.

பதிப்பகத்திற்கு அடிக்கடி வரும் வாடிக்கையாளர் ஒருவர், ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாராம் ஆண்டு எடுத்த திருப்பதி வெங்கடாஜலபதி மூலவர் படமொன்றை அவனுக்கு பரிசளித்தார். "இதை வீட்டில் வை. உனக்கு விரைவில் கல்யாணம் ஆகும். மிக நல்ல மனைவி அமைவாள். உன் குடும்பம் மிக நல்ல நிலைக்கு வரும்" என்று ஆசீர்வதித்தார்.

அவன் படத்தை வாங்கி சிரசில் வைத்துக்கொண்டு உடனே சட்டமிடக் கொடுத்தான். சட்டம் போட்டு வீட்டில் மாட்டி வைத்து மாலை சாற்றினான். இடப்புறம் பெருமாள் படமும், வலப்புறம் சிவன், பார்வதி சிலைகளும் வீட்டை இன்னும் பொலிவாகி மாற்றின. 'அரியும் சிவனும் ஒண்ணு' என்று அம்மா வெங்கடாஜலபதியையும் விழுந்து கும்பிட்டாள்.

சரியான லைப்ரரி ஆர்டர் ஒன்று கிடைத்தது. பரபரப்பாக வேலை செய்ய வேண்டி இருந்தது. கனடாவிலிருந்தும், ஆஸ்திரேலியா, சிங்கப்பூரிலிருந்தும் புத்தகங்கள் விற்கிற ஏஜென்டுகள் வந்து டாலரில் காசு கொடுத்துவிட்டு கட்டுக்கட்டாய் புத்தகங்கள் வாங்கிப்போனார்கள்.

அடுத்த பதிப்புக்கு அச்சகத்தாரை விரட்ட வேண்டி இருந்தது. பேப்பர் விற்பவர்களை கெஞ்சிக் கூத்தாடி வாங்க வேண்டியிருந்தது. காலை எட்டுமணிக்கு கதவு திறந்தால் இரவு ஒன்பது மணிக்குத்தான் கதவைப் பூட்ட முடிந்தது. அதுவரை வேலை இருந்தது.

இரவு வீட்டிற்கு வந்து தெலுங்கிலே அவர் சொன்ன வாஸ்து சாஸ்திரத்தை துணைக்கு ஒரு ஆங்கிலப்புத்தகத்தையும் வைத்துக்கொண்டு தமிழிலே மெல்ல மெல்ல எழுதினான். அவருடைய பெயரையே போட்டான். எழுதியதை அவருக்கு படிக்கக் கொடுத்து திருத்தங்கள் செய்தான். மிகப்பெரிய அளவில் அந்தப்புத்தகத்துக்கு விளம்பரங்கள் கொடுத்து சந்தையில் இறக்கினான். கோயம்புத்தூரிலிருந்து ஆயிரம் காப்பிகள்



ஆர்டர் வந்தது. மதுரை, திருச்சி எல்லா பக்கமும் ஃபோன் போட்டு விசாரித்தார்கள். அட்டைப்படத்தில் அதிக கவனம் செலுத்தி அழகாகப் போட புத்தகம் நல்ல முறையில் விற்பனையாயிற்று. புத்தகத்துறையில், புத்தகம் விற்பதற்கு முன்பு கட்டுக்கட்டாய் காசு இறக்கினாலொழிய புத்தகம் விற்காது என்பதை அவன் தெள்ளத்தெளிவாகப் புரிந்து கொண்டான். மூன்று மடங்காய் திரும்பி வரும் என்பதையும் அறிந்து கொண்டான்.

திருஞானம் தன்னை மறந்து அப்பாவினுடைய கோட்டைக்கு அதிபதியாகி, தன் கொடியை பறக்க விட்டான். அப்பா மெல்ல ஓய்வெடுத்துக் கொண்டார்.

தங்கையின் புருஷன் மூன்று முறை இடையே வந்து, மனைவியையும், குழந்தையையும் சீராட்டி விட்டுப் போனான். கட்டிலில் புருஷனை எதிரே உட்கார வைத்து, இரண்டு கால்களையும் அவன் இரண்டு தொடைமீது போட்டுக்கொண்டு, மார்பில் குழந்தையை பாலருந்தவிட்டு, புருஷன் ஐஸ்க்ரீமை ஸ்பூனில் வழித்து வாயில் ஊட்ட, மிக சொகுசாய் தங்கை சாப்பிட்டுக் கொண்டிருந்ததை ஒரு கணம் அவன் பார்க்க நேர்ந்தது. தான் பார்த்ததை அவர்கள் அறியாதவண்ணம் பின்னுக்கு வந்தான். ஆனாலும், மனதில் அந்தக்காட்சி தங்கிப்போய்விட்டது. அவன் மனதிலும், ஒரு பெண்ணோடு அமர்ந்து அவன் சிரிக்கின்ற காட்சிகள், மெல்ல வரத்துவங்கின. தனக்கு திருமண ஆசை தோன்றிவிட்டதை அவன் தெரிந்துகொண்டான். எப்படி அப்பாவிடம் சொல்வது என்று யோசித்தான். திருமணத்துக்கு முன்பு இன்னும் என்னென்ன செய்ய வேண்டும் என்று பட்டியலிட்டான்.

இப்போது வயது இருபத்தைந்து. இருபத்தாறு வயதில் திருமணம் செய்துகொள்வது நல்லது. இன்னும் ஒரு வருடம் தள்ளிப்போகலாம் என்று முடிவு செய்தான். இந்த ஒரு வருடத்தில் அவன் செய்யவேண்டிய வேலைகள் என்னென்ன என்று தீர்மானித்தான். அவன் வயது ஒத்த இரண்டு இளைஞர்களை அழைத்து, "இந்தியா முழுவதும் சுற்றிப்பார்க்க காசு தருகிறேன். கட்டுரை எழுதுவீர்களா" என்று கேட்க, அவர்கள் சந்தோஷமாய் ஒப்புக்கொண்டார்கள்.

முதலில் ஆந்திரப்பிரதேசம் மட்டும் போய் வாருங்கள் என்று ஒரு நல்ல தொகை கொடுத்தனுப்பினான். அந்தப்புத்தகத்திற்கு மனவாடு என்று பெயரிட்டான். ஆந்திராவிலுள்ள பல்வேறு திருத்தலங்களை, நதி தீரத்தை, கட்டிடச் சிறப்புகளை, கோட்டை கொத்தளங்களை, பொருட்காட்சிகளை, அருங்காட்சியகங்களை அவர்கள் விவரித்து பல போட்டோக்களோடு கட்டுரைகள் கொடுத்தார்கள். திருத்தி தொகுத்துப் போட, அந்தக் கட்டுரைத் தொகுப்பு மிக அற்புதமாக இருந்தது. புத்தகமாக வந்த அந்த கட்டுரைத்தொகுப்பை ஒரு வாரப்பத்திரிகை சுவீகரித்துக் கொண்டு வாராவாரம் போட்டது. அந்த பத்திரிகை வாராவாரம் கட்டுரைகள் போட, மொத்தக்கட்டுரையும் உள்ள புத்தகத்துக்கு மதிப்பு கூடியது. முதல்மாதமே ஆயிரத்து இருநூறு பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன. அடுத்த பதிப்பை இரண்டாயிரமாக்கினான். அதை தெலுங்கில் மொழி பெயர்த்துக் கொடுத்தான். அந்த இளைஞர்களுக்கு நல்ல சன்மானம் கொடுத்து இந்த முறை ஒரிசாவுக்கு போய் வாருங்கள் என்று அனுப்பினான்.

தங்கை புருஷனோடு அஸ்ஸாமுக்கு விமானமேறினாள். அங்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட குவார்டர்ஸில் குடித்தனம் செய்தாள்.

ஒரு வருடம் மாம்பலம் வீட்டில் குழந்தை தவழ்ந்து அந்த வாசனை மீதமிருந்தது. சட்டென்று குழந்தை ஊருக்குப்போனதும் அம்மா தவித்துப் போனாள். வீடு வெறிச்சோடிற்று. "டேய். நீ கல்யாணம் ப்ண்ணிக்கடா. இல்லைன்னா எனக்கு பைத்தியம் பிடிச்சுடும் போலருக்கு" என்று சொன்னாள்.

திருஞானம், 'ஒரு வருடம் போகட்டும்' என்று தன் திட்டங்களை விவரித்தான். அம்மா மௌனமானாள். ஆனாலும், உறவினர் ஒருவர் வற்புறுத்தியதின்பேரில் அவன் முதன்முதலாக ஒரு பெண்ணை போய் பார்த்துவிட்டு வந்தான்.

அது புத்தகம்பற்றி எந்த ஞானமுமில்லாத குடும்பம். புத்தகம் படிப்பது வாங்குவது வீண் என்று சொல்கின்ற குடும்பம். தினசரியைத்தவிர அவர்கள் வீட்டில் வேறு எந்த பேப்பர் வாசனையும் இல்லை. புத்தக ஷெல்ப் என்று ஒன்று இல்லவே இல்லை.

"டி.வியிலே தான் எல்லாம் காட்டறானே. என்னத்துக்கு பேப்பர் படிக்கணும். சும்மா துட்டு கொழுத்துப்போய் வாங்குறாரு" மனைவி பேப்பர் வாங்குவதற்கே அவள் புருஷனைக் கடிந்துகொண்டாள். அப்பா, அம்மா இரண்டு பேருக்குமே அது பிடிக்கவில்லை. அந்த வீட்டில்தான் ஒரு அபத்தமும் நடந்தது. "அவங்க சின்ன வயசா இருக்காங்க. நீங்க ரொம்ப வயசாளியா இருக்கீங்க. ஏன் அப்படி" என்று அந்த வீட்டு கிழவி கேட்க, அப்பா அந்தக் கேள்விக்கு திகைத்துப் போனார்.

"இவ என் ரெண்டார்வது ஒய்ப். சொல்லலீங்களா?"

"சொல்லலையே. ரெண்டாம் தாரம்னா அப்ப மூத்த சம்சாரம் எங்க."

"அவங்க இறந்துட்டாங்க."

"எப்படி இறந்தாங்க"

அப்பாவுக்கு அந்த கேள்வி பிடிபடவில்லை. முகம் சிறுத்துப் போனது.

"எல்லாரும் சாவறா மாதிரி செத்தாங்க" - அப்பா சொன்னார்.

"இல்லீங்க. ரெண்டாவது சம்சாரம் இருக்கும்போது செத்தாங்களா. இல்லை செத்தபிறகு ரெண்டாவது சம்சாரமா."

"ஏங்க. தெரிஞ்சி என்ன பண்ணப்போறீங்க."

"இல்லை மனுஷாள் யாருன்னு தெரிஞ்சிக்க வேணாமா. தெரியாம எப்படி பொண்ணை கொடுக்கறது."

"உங்க பொண்ணு வேணாங்க" - அப்பா சட்டென்று எழுந்தார். எழுந்த அந்த நேரம் அப்பாவுக்கு எங்கேயே வலித்துவிட்டது. உடலால் மனதோ, மனதால் உடலோ ஒரு பாதிப்பு ஏற்பட்டு விட்டது. வீட்டிற்கு மௌனமாகத் திரும்பி வந்தார்.

"எம்மா விசாரிக்காம கூட்டிட்டு போறே. எவ்ளோ முட்டாள் தனமா பேசறாங்க பாரு" அவன் அம்மாவைக் கடிந்து கொண்டான்.

நான் போகலைடா. என்னமோ சாயந்திரம் அந்தாள் வந்து தொந்தரவு பண்ணாரு".

"வரட்டும் நான் பேசிக்கறேன்" திருஞானம் பல்கடித்தான்.

மறுநாள், அந்த மனிதர் வந்தபோது அந்த வீட்டைப்பற்றி மூன்று



பேரும் ஆத்திரமாய்ப் பேசினார்கள்.

"இது யாரு வீடுன்னு உனக்குத் தெரியாதா. இது சரஸ்வதி குடியிருக்கிற வீடு. இந்த வீட்டினுடைய வாசனையே காகித வாசனை. நாங்க ஒருநாள் கூட படிக்காம இருக்கறதில்லை. எங்க வீட்டுல சகலரும் படிப்போம். ஏதோ ஒரு குப்பை மேட்டுக்கு கூட்டிக்கிட்டு போய் அங்க உட்கார்ந்து பொண்ணு பாக்க சொல்றியே" என்று. திருஞானம் கடுமையாக கடிந்து கொண்டான்.

அதுவும் தவறாகப் போயிற்று. அந்த வீட்டை குப்பைமேடு என்று சொன்னதாகவும், முதலியார்களை இழிவுபடுத்தியதாகவும் அந்த மனிதர் செய்தி பரப்ப பல்வேறு உறவினர்கள் போன் செய்து கோபப்பட்டார்கள்.

"சரிதான் போங்கடா" - அவர்களை திருஞானம் சீறினான். அப்பா மேலும் பாதிக்கப்பட்டார்.

ஒருவர் மரணத்தை நெருங்க அவருக்கு ஒரு காலம் ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்காலம் நெருங்கியவுடன் அவர் மரணத்தை மெல்ல மெல்ல தழுவத் துவங்குகிறார். அப்படி தழுவுவதற்கு ஒரு காரணமும் தேவைப்படுகிறது. அந்தக் காரணமாய் திருஞானம் பெண்பார்த்து வந்தது அமைந்துவிட்டது.

அப்பா, தன் உறுவகள் தன்னை அவமானப்படுத்துகின்றன என்று எண்ணி சற்று அயர்ந்துபோனார். புலம்பத்துவங்கினார். அவருடைய ரத்தக்கொதிப்பு அதிகரித்தது. கோபப்பட்டதாலோ அல்லது வேதனைப் பட்டதாலோ, மூளையில் இருந்து சுரக்கும் திரவம் நெஞ்சை நிறைத்து நெஞ்சுக்குள் அடைப்பு ஏற்படுத்தியது.

ஒரு இரவு, அப்பா மூச்சுத்திணற அவரை அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் துணையோடு அள்ளிப்போட்டுக்கொண்டு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துப் போனான். 'சரியான நேரத்தில் கொண்டு வந்து விட்டீர்கள்' என்று அவரை மூன்று நாள் பிராண வாயுவில் படுக்க வைத்து, உடம்பு தேற்றி அனுப்பினார்கள். 'கோபமே படக்கூடாது. இருதயம் பலவீனமாக இருக்கிறது' என்றார்கள். 'ஆனால், உடனடியாய் எந்த ஆபத்துமில்லை என்றார்கள்.

ஆபத்து உடனடியாய் இல்லை. ஆனால் அது வீட்டை மெல்ல மெல்ல நெருங்கி வரத் துவங்கியது.

அப்பாவால் பதிப்பகத்திற்கு வரமுடியவில்லை. திருஞானம் மட்டுமே எல்லா வேலைகளையும் செய்யும்படி இருந்தது. அப்பாவை மேற்பார்வை பார்க்க வைத்துவிட்டு, செய்ய வேண்டிய விஷயங்களை அவன் தனியொருவனாய் செய்ய திகைத்துப் போனான். வெளியே போவதும், உள்ளே வந்து பதிப்பக வேலையை பார்ப்பதுமாக ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளை செய்ய சிரமப்பட்டான்.

ஒரு மாதம் கழித்து, அப்பா பதிப்பகத்திற்கு வந்து பத்துநிமிடம் அமர்ந்திருந்தார். மெல்ல திருஞானத்தைப் பார்த்தார். 'முடியலைடா. நான் வீட்டுக்குப் போட்டமா' என்றார். 'என்ன செய்கிறது' என்று கேட்டதற்கு, 'நெஞ்சு வலிக்கிறது' என்று சொன்னார்.

திருஞானம் அவரை காரில் ஏற்றிக்கொண்டு நேரே தனியார் மருத்துவமனைக்கு அழைத்துப் போனான். சோதித்த டாக்டர்கள், 'ரத்தக் கொதிப்பு அதிகமாகி இருக்கிறது. ஓய்வுதான் முக்கியம். அவரை

பதிப்பகத்திற்கு இனிமேல் கூப்பிடாதீர்கள். தூசு, தும்பு ஆகாது. அவரை அநேகமாக படுக்கையிலேயே இருக்க வையுங்கள். மெல்ல நடக்க வையுங்கள்" என்று பல கட்டளைகள் போட்டார்கள். மருந்துகளை அதிகப்படுத்தினார்கள். அப்பா நோயாளியானார்.

ஒருவர் மேற்பரர்வை பார்க்க, இன்னொருவர், ஓடி, ஆடிச் செய்ய, இரண்டு பேர் செய்துகொண்டிருந்த பதிப்பக வேலை, ஒரே ஆள் தலையில் விழுந்தவுடன் திணறத் துவங்கியது.

அப்பா படுத்த படுக்கையானார். திருஞானத்துக்கு அவரைப் பற்றிய கவலை உள்ளுக்குள் சதா இருந்துகொண்டே இருந்தது. அம்மா, கண்ணும்கருத்துமாக அப்பாவைக் கவனித்துக்கொண்டாள். அப்பாவுக்கு அவருடைய மரணம் பற்றி உள்ளுக்குள் ஏதேனும் தெரிந்திருக்க வேண்டும். அம்மாவைக் கூப்பிட்டு ஒரு வாரத்தில் திருஞானத்தின் கல்யாணத்தை நடத்த முடியாதா என்று கேட்டார். அம்மா திருஞானத்தை விசாரித்தாள்.

'இப்படி ஒரு திருமணம் அவசியம்தானா' திருஞானம் யோசித்தான். 'என்னுடைய திருமணம் மிக முக்கியமா' என்று அவன் அப்பாவைக் கேட்க, அப்பா சிறிதுநேரம் யோசித்துவிட்டு, 'தேவையில்லை. உன் திருமணம் உன் சௌகரியத்திற்காகத்தான் நடக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டார்.

அப்பாவினுடைய ஆசையை நிறைவேற்றி வைக்கவில்லையோ என்ற ஒரு வருத்தம் திருஞானத்தின் அடிமனதில் எழுந்தது. ஆனால் வெகுநிச்சயமாக 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று திருமணத்தை நடத்திக் கொள்ள முடியாது என்பதும் அவனுக்கு புரிந்தது. அவன் அம்மாவை மறுபடியும் நச்சரித்தான். 'நான் தவறு செய்கிறேனா. அப்பாவின் ஆசையை பூர்த்தி செய்யவில்லையா' என்று விசாரித்தான்.

"ஒன்று புரிந்துகொள் திருஞானம். திருமணம் என்பது உனக்கு எப்போது நடக்க வேண்டுமோ யாரோடு நடக்க வேண்டுமோ, என்னவிதமாய் நடக்க வேண்டுமோ அப்பொழுது, அந்தவிதமாய் நடக்கும். அது உன்னாலோ, அப்பாவாலோ, என்னாலோ, வேறு எவராலோ நிகழ்வது அல்ல. அது நீ வாங்கி வந்த வரம். உன் திருமணம் என்பது உன் தலையெழுத்து. அது திடுமென்றும் நடக்கலாம். மெல்ல தள்ளிப்போய் ஒரு நல்லநாளில் மிக நல்ல முறையிலும் நடக்கலாம். இது எதுவுமே நம் திட்டங்களில் இல்லை. எனவே நீ தள்ளிப்போட்டாய் என்றோ, அப்பாவால் சீக்கிரம் நடந்தது என்றோ இதில் சொல்லவே முடியாது" என்று சொன்னாள். அவள் சமாதானம் அவனுக்குப் பிடித்திருந்தது.

ஒருநாள் அம்மா, கண்மூடி காலையில் நடராஜர் முன்பு அமர்ந்திருந்தவள், சட்டென்று திடுக்கிட்டு எழுந்து நின்றாள். பல்தேய்த்துக் கொண்டிருந்த திருஞானம் அம்மாவின் முதுகு தொட்டான். அவள் கண்கள் கலங்கியிருந்தன. முகத்தில் ஒரு கலவரம் படர்ந்திருந்தது.

"என்னம்மா. உடம்புக்கு ஏதாவது பிரச்சனையா?"

"ஒண்ணும் இல்லைடா. உங்கப்பா ரொம்பநாள் தாங்க மாட்டாருன்னு சாமி சொல்லிடுச்சி."

"என்னம்மா விளையாடறே?" - திருஞானம் சற்று அதட்டலாகக் கேட்டான்.

"இல்லைடா. சாமி குரல் காதுல விழுந்துது. உங்க வீட்டுக்காரரு



கிளம்பப் போறாரு. அதுக்கு உண்டானதை செய்யின்னு சாமி சொல்லிட்டாரு."

"உண்டானதை செய்யின்னா என்னம்மா அர்த்தம்?"

"தெரியலையடா."

"அம்மா. நீயா எதையாவது நினைச்சிக்கிட்டு எத்னா உளறாதே. அப்பா நல்லாதான் இருக்காரு. கொஞ்சம் ஓய்வா இருக்காரு. அவ்வளவுதான். ஏம்மா நீயா எதையாவது நினைச்சிக்கறே."

ஆனால், அன்று காலை பத்துமணிக்கு அப்பாவினுடைய இருதயம் தவறாகத் துடிக்கத் தொடங்கிற்று. டாக்டர் வந்து சோதித்தார்.

"ஆஸ்பத்திரியில் வைத்திருங்கள். ஒரு ஜாக்கிரதையான கண்காணிப்பில் மரணம் நேர்வதை தவிர்க்க முடியும். மற்றபடி இன்றில்லையாயினும் வெகுசீக்கிரம் இது நிகழும்" என்று சொன்னார்.

வீடு வருத்தத்தில் மூழ்கியது. அக்கம்பக்கத்திலுள்ளோர் வந்து ஆறுதல் சொன்னார்கள். பதிப்பக வேலை திண்டாடியது. ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாய் திருஞானம் அலைந்தான். அம்மா ஆஸ்பத்திரியே கதியாக இருந்தாள்.

ஒருமாதிரி அப்பா நடக்கத் துவங்கியதும் மறுபடியும் வீடு வந்தார். 'எல்லாம் சரியாயிடுத்து' என்று அக்கம்பக்கத்திலுள்ளோர் கைகுலுக்கினார்கள்.

ஆனால் மறுநாள் மாலை மறுபடியும் அவர் உடல்நிலை சரியத் துவங்கியது. வெகுவிரைவாய் அவர் புலன்கள் நழுவத் துவங்கின. பேச்சு குழறும் முன்பு அப்பா, 'ருக்மணி, ருக்மணி' என்று உரக்கக் கூப்பிட்டார். அம்மா வந்தவுடன் அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"அவனுக்கு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணி வை. அவனுக்குத் துணையா இரு. ரொம்ப முக்கியமான வயசுல உன்னை விட்டுட்டு போறேன். உன்னால நான் ரொம்ப சந்தோஷமா இருந்தேன். உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. நான் ரொம்ப சந்தோஷமா சாகறேன். எனக்கு எந்த வருத்தமுமில்லை. உன்னை நிர்க்கதியா விட்டுட்டு போறோமோ அப்படின்றதுதான் எனக்கு பெரிய வேதனையா இருக்கு."

"அதெல்லாம் இல்லீங்க. நான் நல்லாதான் இருக்கேன்."

"உனக்கு அம்பது வயசுதானே ருக்மணி. உன்கூட இன்னும் பல ஊர் சுத்திப் பாத்திருக்கலாம். எனக்கு ஒண்ணும் முடியலை. என்கூட நீ இருந்ததெல்லாம் ஆஸ்பத்திரியிலேதான்" அப்பா சொல்லும்போதே அழத் துவங்கினார்.

அம்மா மெல்ல அப்பாவை அணைத்துக் கொண்டாள். அவன் வெளியேறி அணில்களை வேடிக்கை பார்த்தான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. நாம நல்லா ஊர்சுத்தி இருக்கோம். நல்ல குழந்தைங்களை பெத்திருக்கோம். நான் நிறைவாதான் இருந்தேன்" என்று நெஞ்சு தடவி விட்டாள்.

அன்று காலை ஒன்பது நாற்பது மணிக்கு அப்பாவினுடைய உயிர் உடலைவிட்டு மெல்லப் பிரிந்தது. அவர் கண்கள் நிலைகுத்தி நின்றன. 'கண்களின் வழியே தான் உயிர் பிரிந்திருக்க வேண்டும்' என்று அம்மா சொன்னாள். கண்களை இழுத்து மூடினாள். நெஞ்சு அருகே அமர்ந்திருந்தாள்.

அக்கம்பக்கத்திலுள்ளோர் அனைவரும் மரியாதைக்காக வந்து பார்த்தார்கள். மேல்வீட்டிலுள்ளவர் என்ன செய்ய வேண்டும் என்பதை அழகாக எடுத்துரைத்தார்.

அப்பாவின் கைகளைக் கட்டி, கால்விரல்களைக் கட்டி, கூடத்திலுள்ள சோபா, நாற்காலிகளை அறைக்குள் போட்டு, கூடத்தை காலியாக்கி, நடுவே துணி விரித்து, அதில் அப்பாவைப் படுக்கப் போட்டார்கள். சட்டை மாற்றினார்கள். வேறு வேட்டி மாற்றினார்கள். கண்ணாடி அணிவித்தார்கள்.

அப்பா உறங்குவது போலவே இருந்தார். பன்னீரும், யூடிகலானும் சுற்றி தெளிக்கப்பட்டது. ஊதுவத்திப்புகை அறையில் நிரம்பியது. தலை மாட்டில் அகல்விளக்கு ஒற்றையாய் எரிந்தது. வீட்டிற்குள் ஒரு மரண வாசனை நிறைந்து காணப்பட்டது.

திருஞானத்துக்கு அழத்தோன்றவில்லை. திகைப்புதான் இருந்தது. யார் யாருக்கு என்னென்ன சொல்லணும் எப்படி சொல்லணும் என்று பட்டியல்கள் மனதிற்குள் ஓடின. இடையறாது பலருக்கு போன் செய்து அப்பாவின் மரணத்தை தெரிவித்தாள்.

"இவருக்கு ஒரு அண்ணன் உண்டு. ஒரு தம்பி உண்டு. அவங்களுக்கும் டெலிகிராம் கொடுத்துடு" அம்மா அருகே வந்து சொன்னாள்.

"வருவாங்களாம்மா."

"வராங்க. இல்ல தகவல் தெரிவிக்க வேண்டியது நம்ம முறை. செய்திரு" இருபது, முப்பது தந்திகளை போன் மூலம் அனுப்பினான். டெலிபோன் இலாகா நண்பர்கள் ஒத்துழைத்தார்கள்.

"அடடா. இன்னும் பத்துவருஷம் தர்மராஜன் இருந்திருக்க கூடாது. உன் உடம்பு தளர்ந்தபிறகு போயிருக்க கூடாதா. இப்படி உன்னை திடமா இருக்க விட்டுட்டு அவன் சுருண்டு செத்து போயிட்டானே" ஒரு பெண் வந்து அலறினாள். அவளை மெல்ல அடக்கினார்கள்.

"அவங்க சொல்றது கரெக்ட்டுதாங்க. ஐம்பது வயசுதாங்க ஆம்பிடையான், பொண்டாட்டி சந்தோஷமா இருக்குற வயசு. நாலு இடம் போறதுக்கு, நாலு சபைல நிக்கறதுக்கு, இதுதான் சரியான வயசு"

வேறொருவர் பேசினார். அம்மா அதிகம் அழவே இல்லை. அடிக்கடி ஆள்விட்டு அவனை கூப்பிட்டு என்னென்ன செய்ய வேண்டும் எனக் கூறிக் கொண்டிருந்தாள்.

நடுநடுவே அழுவதுபோல் நடித்துக் கொண்டிருந்தாள்.

"ஐயோ. வீணா போயிட்டியேடி" என்று ஒரு முதிர்ந்த பெண்மணி புலம்ப,

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லக்கா. நல்லா வைச்சிருந்தார். நல்லா வாழ்ந்தேன். இருபது வயசிலேருந்து ஐம்பது வயசு வரைக்கும், முப்பது வருஷம் குடித்தனம் பண்ணினதை விட வேற என்ன வேணும் சொல்லுங்க. எனக்கிது போறும்க்கா. நிறைவா இருக்கு. இருந்து அவர் கஷ்டப்படறத விட, எங்களையும் கஷ்டப்பட வைக்காத தூங்கறமாதிரி போயிட்டாரு" என்று இதமாகச் சொன்னாள்.

பெண்களுக்கு அவள் பேச்சு இரசிக்கவில்லை. அவள் அழாதது குறையாக இருந்தது. வராண்டாவில் அதை கேலியாக பேசவும் செய்தார்கள். இந்த பேச்சுக்களை தவிர்ப்பதற்கு திருஞானம் வாசலுக்கு வந்



தான். மறுபடி எதிர் கட்டிடத்தை பார்த்தபடி நின்றிருந்தான். அணில்கள் அங்கு கூடி விளையாடிக் கொண்டிருந்தன. மனிதர்களோடே வாழும் சில பிராணிகள், மனிதர்களைப் பற்றி எந்தவித அக்கறையுமில்லாமல் இருக்கின்றன அவைகளில் அணில்களும், குருவிகளும், காக்கையும், நாயும், மனிதனை அண்டி வாழ்பவை. குதிரையும், பசுவும் மனிதனுக்கு பிடித்தமானவை.

யானை மனிதனின் வியப்பு. கழுதை மனிதனுக்கு உழைப்பு. கிளிகளும், நாரைகளும் மனிதனின் வெளிவட்டத்தில் இருப்பவை. மனிதனின் உள்வட்டத்திலேயே இருந்து மனிதனை அதிகம் அலட்சியம் செய்பவை சிட்டுக்குருவிகளும், அணில்களும்தான். இதில் சிட்டுக்குருவிகூட சில சமயம் சில இடங்களில் நெருங்கி நெருங்கி வரும். ஆனால் அணில்கள் சோற்றுக்கு மட்டும் நெருங்கி வந்துவிட்டு மற்ற நேரங்களில் விலகிப் போகும். அணில்களில் ஒரு இடைவிடாத அலட்சியம் தெரிகிறது. 'உங்க வீட்டுல உங்கப்பன் செத்துப் போனா எங்களுக்கென்ன. எங்க ஆட்டம் தொடர்ந்து நடக்கும்' இரண்டு அணில்களும் சுற்றிசுற்றி வந்தன. நின்று இன்பம் துய்த்தன.

மனிதர்களிலும் சிலருக்கு அணில் புத்தி உண்டு. அருகில் இருந்து கொண்டே, சம்பந்தப்பட்டவரால் பலன்களை அனுபவித்துக்கொண்டே அலட்சியப்படுத்துவது என்கிற குணம் சில மனிதர்களிடம் உண்டு. 'தாரிணியிடம் இப்படி ஒரு அணில் குணம் இருக்கிறதோ' திருஞானம் தொடர்ந்து யோசனை செய்தான்.

அடுக்குமாடிக் கட்டிடத்தில் உள்ள நண்பர்கள் சகலமும் பொறுப் பேற்றுக் கொண்டார்கள்.

'நான் பாத்துக்குறேன். நீங்க பேசாத இருங்க' என்று சொன்னார்கள். தங்களுடைய பர்ஸை திறந்தார்கள். திருஞானம் அவர்களைத் தடுத்து, பத்தாயிரம் ரூபாய் கட்டெடுத்து ஒரு நண்பரிடம் கொடுத்தான். அவர் ஒரு நோட்டுப்புத்தகத்தில் பிள்ளையார் சுழி போட்டு கணக்கு எழுதத் துவங்கினார். மூன்று முக்கியமான நண்பர்கள் சகல உதவியும் செய்ய நாலாபக்கமும் பறக்க, உறவுகள் வந்து குவிய அன்று பிற்பகல் நேரம் அப்பா பயணப்பட்டார். அப்போதும் அணில்கள் ஒன்றின் மீது ஒன்று இறுக்கி இயங்கிக் கொண்டிருந்தன. அணில்களை மறந்துவிட்டு கையில் தீச்சட்டியோடு திருஞானம் அப்பாவுக்கு முன்னே நடந்தான். அப்பா பின்தொடர்ந்தார்.

திருஞானம் திரும்பி அம்மாவைப் பார்த்தான். அம்மா, அப்பாவைப் பார்த்து கைகூப்பிக் கொண்டிருந்தாள். 'அப்ப போய்ட்டு வாங்க, அப்ப போய்ட்டு வாங்க' என்று அழுகைக்குரலில் சொன்னாள். இப்படி எந்தப் பெண்மணியும், நடுத்தெருவில் நின்று இறந்துபோன தன் புருஷனைப் பார்த்து சொல்லியிருப்பாளா என்பது திருஞானத்திற்கு சந்தேகமாக இருந்தது. அவன் நடக்க, உறவுகளும் நண்பர்களும் அப்பாவை சுமந்தபடி பின்தொடர்ந்தார்கள். அப் பா தகனமானார்.

மறுநாள் காலை, குளிர்விக்கப்பட்டார். பொங்கும் வங்காளக் கடலில் கரைக்கப்பட்டார்.

"அடி சண்டாளி. எங்கப்பாவை என் கண்ணுல காட்டாம எரிச்சிட்டியேடி" இரண்டு நாள் கழித்து வந்த தாரிணி அம்மாவை அழுகையோடும், ஆத்திரத்தோடும் கடிந்து கொண்டாள். மாப்பிள்ளை கைகட்டி துக்கம் விசாரித்தார். இரண்டுமே போலியாக இருந்தன.




மூன்று நாள் பதிப்பகம் திறக்கவில்லை. நான்காவது நாள் ஊழியர்கள் சாவி வாங்கிக் கொண்டு போய் திறந்தார்கள். ஐந்தாம் நாளும், ஆறாம் நாளும் வீட்டிற்கு வந்து போகிறவர்கள் அதிகம் இருந்ததால் மாலையில் மட்டும் போய் கணக்கு பார்த்துவிட்டு வர முடிந்தது.

அம்மா அவனை தனியே அழைத்து, 'எல்லாம் சரியாக இருக்கிறதா. மொத்தமும் பெயர் மாற்ற வேண்டும். அப்பா பெயரிலிருக்கிற காசை உன் பெயருக்கு மாற்றும்படி பாங்க் மானேஜருக்கு சொல்லிவிடு. ஏதேனும் பிரச்சனை இருந்தால் என்னைக் கூப்பிடு' என்று சொன்னாள்.

"நீங்க முன்னாடியே ஒரு லெட்டர் அப்பாகிட்டே இருந்து எழுதி வாங்கி வைச்சிருக்கலாம் சார். அதில ஒண்ணும் தப்பு இருந்திருக்காது' எனக்குப் பிறகு பதிப்பகத்தினுடைய முழு பொறுப்பு என் மகனுக்கு' அப்படின்னு அவர் எழுதி வைச்சிருந்தா பல்வேறு விஷயங்களுக்கு சௌகர்யமா இருக்கும். இப்ப நீங்க ஒவ்வொரு அக்கவுண்ட்டுக்கும் தனித் தனியா பாண்டு கொடுக்க வேண்டியிருக்கும்."

வங்கியில் பல்வேறு நிபந்தனைகள் விதித்தார்கள். பதிப்பகம் அப்பாவின் பெயரில் இருந்ததை த்ன் பெயருக்கு மாற்றவும் அவன் ஆடிட்டார்களோடு பேசினான்.

தாரிணி மாமியார் வீட்டிற்கும், அம்மா வீட்டிற்குமாய் அலைந்து கொண்டிருந்தாள். சிலசமயம் குழந்தையை இடுக்கிக்கொண்டு அலைந்தாள். சிலசமயம் குழந்தையை விட்டுவிட்டு தனியே அலைந்தாள்.

"நமக்கெல்லாம் பதினாறாம் நாள்தான் விசேஷம். அதுக்கு நடுவுல ஒண்ணும் இல்லை. எதுக்கு பத்து கிலோ மீட்டர் மேலேயும் கீழேயுமா அலையறே?" - அம்மா கேட்டாள்.

"என்ன பண்றது. சாயந்திரமானா போன் பண்ணி, 'வாடி, வாடின்னு தொந்தரவு பண்றானே."

"சரி அங்கயே இருக்கவேண்டியதுதானே" அம்மா நொந்த குரலில் பேசினாள்.

"மனசு கேக்கலை. இங்க யாரு வர்றாங்க. என்ன பண்றாங்க, என்ன பேசறாங்கன்னு தெரிஞ்சிக்க ஆவலா இருக்கு."

"இங்க யாரு வந்து என்னடி கிழிச்சிடப் போறாங்க' பொத்தினா மாதிரி ஒரு இடத்துல இருக்கறதை விட்டுட்டு நீயும் அலைஞ்சு, குழந்தையையும் அலைய வைக்கிறியே."

"நான் எப்படியோ ஆட்டோவுல வரேன். கார்ல வரேன். அதுக்கு நீ ஏன் கஷ்டப்படறே" அவள் அம்மாவை அதட்டி அடக்கினாள்.

பதினாறாம் நாள் நிகழ்ச்சியில் மாப்பிள்ளையும், தாரிணியும்



கலந்துகொண்டார்கள். அவர்களுக்கு புது உடைகள் எடுக்கப்பட்டிருந்தன. மேற்கொண்டு ஐந்தாயிரம் ரூபாய் பணமும், கவரில் வைத்து தரப்பட்டது.

"ஏம்மா, இது எப்படி போதும். ரெண்டு பேரும் பிளைட் பிடிச்சி வந்திருக்கோம். அஞ்சாயிரம் ரூபா கொடுக்கறீங்களே செலவு என்ன ஆச்சு தெரியுமா. பதினைஞ்சு ரூபா கொடும்மா" - தாரிணி நடுக்கூடத்தில் உரக்கக் கத்தினாள்.

"சரி தரேன்" - அம்மா அவளை ஒரே வார்த்தையில் அடக்கினாள்.

கிளம்பும்போது தாரிணி இன்னொரு பத்தாயிரம் ரூபாய் தரச் சொன்னாள். லேசாய் ஒரு கோபம் திருஞானத்திற்கு எழுந்தது. 'எல்லாவற்றிற்கும் இந்த வீடுதான் செலவு பண்ண வேண்டுமா. தாரிணிக்கு அவர் அப்பா இல்லையா. அவள் இந்தப்பொறுப்பை ஏற்க வேண்டாமா. அவள் செலவு என்று எதுவும் கிடையாதா' எண்ணம் வந்தது. ஆனால் கேட்கவில்லை.

தாரிணி விடைபெற்றுக்கொண்டு மாமனார் வீடு போய், மாமனார் வீட்டிலிருந்து ரயில் பிடித்து அஸ்ஸாம் போனாள்.

நான்கு நாட்கள் கழித்து, அங்கிருந்து டெலிபோன் செய்து, "இனி இந்த ஜென்மத்தில் நான் டிரெயினில் போக மாட்டேன். இனி அஸ்ஸாமிலிருந்து வருவதாக இருந்தாலும், போவதாக இருந்தாலும் விமானத்தின் மூலம் தான் வருவேன், போவேன்" என்று எரிச்சலோடு சொன்னாள்.

அம்மா அதற்கும் 'சரி' என்று சொல்ல, சற்று ஆங்காரமாய் போனை துண்டித்தாள்.

தாரிணி இந்த வீட்டில் வளர்ந்ததை விட அவள் புருஷன் வீட்டில் வேகமாய் புத்திகெட்டு போயிருக்கிறாள் என்று திருஞானத்திற்குத் தோன்றியது. இவளிடம் என்ன இருக்கிறது என்று இவள் புருஷன் இவளை அடைகாக்கிறான் என்று ஆத்திரம் எழுந்தது. ஆனாலும் இது நம்முடைய வேலை அல்ல என்று திருஞானம் ஒதுங்கிக் கொண்டான். முழுமூச்சாய் பதிப்பக வேலையில் இறங்கினான்.

அம்மா, ஆட்டோ பிடித்து பதிப்பகத்திற்கு வந்தாள். சில பத்திரங்களில் சாட்சிக் கையெழுத்துப் போட்டாள். நிர்வாகத்தை திருஞானம் பெயருக்கு மாற்ற எந்த ஆட்சேபணையும் இல்லை என்று கடிதம் கொடுத்தாள். அவனுடைய அப்பா தர்மராஜனின் விருப்பமும் இதுதான் என்பதை தெளிவாக்கினாள். எழுத்தின் மூலமாய் விவரித்தாள்.

பல்வேறு கேள்விகளுக்குப் பிறகு, விசாரணைகளுக்குப்பிறகு நிர்வாகமும் திருஞானம் கைக்கு வந்தது. 'ஸ்தாபகம்: தர்மராஜன்' என்று, பதிப்பகத்தின் நடுக்கூடத்தில் பெரிய படம் மாட்டி, தினமும் அப்பாவுக்கு மாலையிட்டு அஞ்சலி செய்து வந்தான். என்னை வழிநடத்து என்று வேண்டினான்.

ஆனால் தனியாக பதிப்பகம் நடத்துவது எளிதாக இல்லை. சின்ன சின்னத் திருட்டுகள் இடைவிடாது நடந்தன. ஆயிரம் புத்தகத்தில் ஒரு இரண்டு புத்தகம் உருவிக்கொண்டு போனால் தெரிவதே இல்லை. ஒரு புத்தகத்தின் விலை அறுபது ரூபாய். இரண்டு புத்தகத்தின் விலை நூற்றி இருபது ரூபாய். நூற்றி இருபது ரூபாய் புத்தகத்தை எண்பது ரூபாய்க்கு விற்றுவிட்டு, அதில் சினிமாவுக்குப் போக ஊழியர்கள் முயன்றார்கள். பெண் ஊழியர்கள்கூட இடுப்புப் பாவாடைக்கு நடுவே இரண்டு புத்தகங்

களை சொருகிக் கொண்டு வெளியேறுகிறார்கள் என்பது அவனுக்குத் தெரிய வந்தது. எப்படி சோதிப்பது என்று தெரியாமல் அவன் தவித்தான். அம்மாவை வரச்சொன்னான். தான் இல்லாதபோது அம்மாவை கண்கொத்திப்பாம்பாக சுற்றிவரச் சொன்னான். ஆனாலும் திருடவேண்டும் என்று தெளிவாக இருக்கிற ஊழியருக்கு எப்படி திருடுவது, என்ன திருடுவதென்பதும் மிகத் தெளிவாகத் தெரியும். திருட்டைக் கண்டு பிடிப்பவர் திருடனைவிட மிக கெட்டிக்காரராய் இல்லாவிட்டால், திருட்டைப்பற்றி எந்த ஞானமும் இல்லாவிட்டால் திருட்டைக் கண்டு பிடிக்க முடியாது.

ஆனால், அம்மா வந்து உட்கார்ந்ததும் வெகுநிச்சயமாய் திருட்டுகள் குறைந்தன. வியாபாரம் அதிகரித்தது. அதுமட்டுமில்லாமல் அம்மாவை துக்கம் விசாரிக்க வந்தவர்கள், பதிப்பகம் நடத்த முழு ஒத்துழைப்பு தருவதாகச் சொன்னார்கள். குறிப்பாய் அப்பாவால் உயர்ந்த நிலைக்கு வந்த எழுத்தாளர்கள் அம்மாவை துக்கம் விசாரித்ததோடு மட்டுமில்லாமல் தன் படைப்புகளையும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

ஆனால், பதிப்பகம் பிரகாசமாக இருக்க பழைய எழுத்தாளர்களுடைய நாவல்கள் மட்டும் போதாது. புதுவிதமான புத்தகங்கள் வெளியிட வேண்டும் என்று திருஞானம் யோசித்தான். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான்.

"இப்ப, ஆன்மீகம் கொஞ்சம் போதுறா" அம்மா திடீரென்று ஒரு நாள் உணவு பரிமாறும்போது சொன்னாள்.

"சும்மா தேவாரம், திருவாசகம் திருத்தி பதிப்பிச்சா என்ன. சமயக்குரவர்கள்னு புத்தகம் போட்டா என்ன. இந்துமதம் என்ன சொல்கிறது அப்படின்னு கேள்விபதில் எழுதினா என்ன. அப்படி யாராவது ஆள் இருக்காங்களா பாரேன்."

அவன் வேகமாகச் சாப்பிட்டான். ஹாலில் உட்கார்ந்து சிறிது நேரம் யோசித்தான். இரண்டு, மூன்று பேருக்கு போன் செய்தான். மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவர்களைப் பார்க்கப் போனான்.

மேடைப்பேச்சாளர் ஒருவரும், எழுத்தாளர் ஒருவரும், பண்பட்ட சிந்தனாவாதி ஒருவரும் அவனுக்கு ஆன்மீகக் கட்டுரைகள் தருவதாக வாக்களித்தார்கள். அவர்களிடமிருந்து தொகுப்புகளை உடனடியாக வாங்கி வந்து அவைகளை அச்சில் ஏற்றினான். விளம்பரப்படுத்தினான். அம்மா சொன்னதுபோல அதற்கு நிறைய விசாரிப்புகள் இருந்தன.

பதிப்பகத்திற்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு பெரியவர் வழக்கமாக வருவார். வந்து சிறிதுநேரம் ஏஸிக்கு அருகே உட்கார்ந்து கொள்வார். ஏதேனும் அரட்டையடிப்பார். காபி வரவழைக்கச் சொல்லி சாப்பிடுவார். வாரத்திற்கு ஐநூறு, அறுநூறு ரூபாய்க்கு எளிதாக புத்தகங்கள் வாங்குவார். அநேகமாக எந்தப்புத்தகமாக இருந்தாலும் திருஞானம் அவருக்கென்று ஒரு பிரதி எடுத்து வைத்து விடுவான்.

"இந்த வாரம் உங்களுக்குன்னு தனிக்கட்டு இருக்கு சார். கொஞ்சம் பெரிய கட்டா இருக்கு" என்று அவர் முன்பு வைப்பார். அவர் சகலமும் பார்த்துவிட்டு எல்லாம் எடுத்துக்கறேங்க என்று சர்வசாதாரணமாகச் சொல்வார். இருப்பினும் பதிப்பகத்தைச் சுற்றி சுற்றி வருவார். பதிப்பகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களுடன் உரையாடுவார்.



"என்னால சட்டுன்னு எழுந்து வெளியே போக முடியலை. நான் இருக்கிறது மண்ணடி. அங்கேயிருந்து தபதபன்னு ஆட்டோ பிடிச்சி இங்கே வந்துர்றேன். வந்துட்டபிறகு ஒரு ஒருமணிநேரம் உக்காந்தாதான் திரும்பிப்போக முடியுது. தப்பா நினைச்சுக்காதீங்க தம்பி" - ஒருநாள் அவர் சொன்னார்.

"ஏங்க ஒரு மணி நேரம் இருக்கீங்க. ஒரு அரைநாள் இருந்துட்டு நிதானமா போங்களேன். முன்கூட்டியே சொல்லிட்டீங்கன்னா மத்தியானம் சாப்பாட்டுக்கும் நான் ஏற்பாடு பண்றேன்" என்று திருஞானம் அவரை உபசரித்தான். அவரோடு அரசியல் பேசினான். மருத்துவ விஷயம் பேசினான். வாழ்க்கையைப் பற்றி பேசினான். அவனுக்கு அவர் நல்ல பேச்சுத்துணையாக இருந்தார். அதுமட்டுமில்லாமல் வியாபாரம் சம்பந்தமான சிறிய தகவல்களும் தருவார்.

"பாண்டு பேப்பர் ஒண்ணு புதுசா மார்க்கெட்டு வந்திருக்கு தம்பி. அதை வாங்கிப் போடுங்க. கிட்டத்தட்ட ஆர்ட் பேப்பர் மாதிரி தடிமன். அதுல 'ரேப்பர்' போட்டா ரொம்ப நல்லா இருக்குன்னு சொல்றாங்க. நல்லபடியா டிராயிங் போட்டா பளிச்சுன்னு தெரியுதுன்னு சொல்றாங்க. விலை கொஞ்சம் கூடுதலா இருக்கு. ஒரு பேப்பர் சாம்பிள் கிடைச்சிது பாருங்க" - ஒரு வாரப்பத்திரிகை அளவுக்கு பேப்பர் கொண்டுவந்து காட்டினார். எங்கு கிடைக்கும் என்று அதில் எழுதிக் கொடுத்தார். பதிப்பகத்திலிருந்தபடியே அந்தக்கடைக்கு போன் செய்து, "எனக்குத் தெரிந்த பார்ட்டி பேப்பர் அனுப்புகிறீர்களா இங்கு காசு தயாராக இருக்கிறது" என்று சொன்னார். அவர் சொன்ன ஒருமணிநேரத்தில் அண்ணாசாலையிலிருந்து மூன்று ரீம் பேப்பர் வந்து கடையில் இறங்கியது. புரட்டி புரட்டி நன்கு சோதித்துவிட்டு அதற்குண்டான காசை திருஞானம் கொடுத்தான். அவர் சொன்ன தகவல் சரியாக இருந்தது.

அடுத்த மூன்று நாட்களில் அந்த பேப்பருக்கு பெரிய டிமாண்ட் ஏற்பட்டது. அவரிடம் மூன்று ரீம் இருக்கிறது என்று கேள்விப்பட்டு, 'ஒரு ரீம் கொடுங்க தம்பி' என்று கெஞ்சிக்கொண்டு பல பதிப்பகத்தார் வந்தார்கள். அவன் மறுத்துவிட்டான். ஒரு புத்தகத்தின் அட்டையை அதில் ஒட்டிப்பார்த்தான். அட்டை மிக ஜ்வலிப்பாக வந்தது. அவன் சந்தோஷமானான். அவருக்கு நன்றி தெரிவித்தான்.

"எப்படிங்க பேப்பர் பத்தியெல்லாம் உங்களுக்குத் தெரியுது?"

"யாரோ சொல்லி நான் உங்ககிட்டே சொன்னேன். மத்தபடிக்கு பேப்பர் பத்தியெல்லாம் அதிகம் தெரியாது. கற்றது கைம்மண் அளவு. கல்லாதது உலகளவு" என்று பழமொழியோடு அவர் அவனிடம் சொன்னார் "அடுத்து என்ன புஸ்தகம் கொண்டு வரப்போறீங்க" என்று விசாரித்தார்.

அவன் விவரிக்க, "நல்லா இருக்கு. ரொம்ப நல்லா இருக்கு. உங்க திட்டங்கள்லாம்" என்று பாராட்டினார்.

இரண்டு பேருக்குமிடையே அதிக வயது வித்தியாசம் இருப்பினும் அவர்கள் இரண்டுபேரும் நல்ல தோழர்களாக இருந்தார்கள். மனம் விட்டுப் பேசினார்கள். ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டார்கள். சனிக்கிழமை அவர் வரவில்லையென்றால் அவனுக்கு இருப்புக் கொள்ளாமல் போயிற்று. அவர் வீட்டிற்கு போன் செய்து என்ன சமாச்சாரம் என்று கேட்கின்ற ஆவல் எழுந்தது. கேட்டபோது, 'கொஞ்சம் தாமதமாகி

விட்டது. இப்போது உங்கள் கடையை நோக்கித்தான் வந்துகொண்டிருக்கிறார்' என்று வீட்டில் தகவல் தெரிவித்தார்கள். தாமதமாக வந்த அவரை இருக்கச் சொல்லி, அவனோடு மதிய சாப்பாட்டை சாப்பிடச் சொல்லி வற்புறுத்தி அவரைத் திக்குமுக்காட வைத்தான். அவன் அன்பிற்கு அவர் நெகிழ்ந்து போனார்.

"என்னமோ போங்க. உங்க சாப்பாட்டை சாப்பிட வைச்சுட்டீங்க. இனிமே உங்களோட நான் சண்டையே போட முடியாது" என்று அவர் கண்சிமிட்டினார்.

"சண்டை போடறதுக்கு நமக்குள்ள என்னங்க இருக்கு" - திருஞானம் கேட்டான்.

"சரி. நெருங்கி வந்தோம்னா அபிப்ராய பேதங்கள் இருக்காதா."

"தாராளமா இருக்கலாம். அபிப்ராய பேதங்கள் இருக்கறவங்க சண்டை போடணும்னு அவசியமே இல்லை. உங்க அபிப்ராயத்தை நான் மதிச்சா போதும். பேதமா இருந்தாலும் பேதம் இல்லாட்டாலும் நாம ஒத்துமையா இருக்கலாம்" என்று சொன்னான்.

அன்றைக்கும் அவர் முந்நூறு ரூபாய் 'புத்தகங்கள் வாங்கிக் கொண்டு ஆட்டோ ஏறிப் போனார்.

'ஒரு வருடம் ஆகவில்லை. அதனால் உறவினர்கள் வீட்டிற்கு போவதில்லை' என்று சொன்ன அம்மா பதிப்பகத்திற்கு வருவதும் லைப்ரரி ஆர்டருக்காக மாவட்ட நூலகத் தலைமை செயலகத்திற்கு போய் நிற்பதும், ஒரு புத்தக ஏஜெண்ட்டின் வீட்டிற்குப் போய் வெளிநாடுகளுக்கு கூடுதலாய் ஆர்டர் பிடித்துத் தரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டதும் நடந்தது.

அவர்கள் அம்மாவை நன்றாக உபசரித்தார்கள். 'இதுக்கெல்லாம் நீங்க வரணுமா' என்று அனுதாபப்பட்டார்கள்.

'ஒத்தைப்புள்ள. தனியா லோல்படறான். அதனாலதான் இந்த மாதிரி சின்ன சின்ன உதவிகளைச் செய்யலாம்னு.நானே வந்திருக்கேன். அப்பா இல்லேன்னு ஒரு குறையா அவன் உக்காந்துடக்கூடாது பாருங்க. அவன் ஆறுதலுக்காகத்தான் வந்திருக்கேன். அவன் தானா முன்னுக்கு வந்திருவான். எனக்குத் தெரியும். கூடமாட ஒத்தாசையா யாராவது இருந்தா பதிப்பகம் இன்னும் நல்லா ஓடுமில்லையா?" அம்மா சமாதானமாகச் சொன்னாள்.

அப்போது பிரபலமாக இருந்த எழுத்தாளர்கள் இரண்டு, மூன்று பேரின் வீட்டிற்குப் போய் அவர்களுடைய புத்தகங்கள் வேண்டுமென்று சொன்னாள். பெண் எழுத்தாளர்களிடம் போய் அவர்களுக்கு பட்டுப் புடவை பரிசளித்து வீட்டிற்கு வருமாறு அழைத்தார். கிட்டத்தட்ட பத்து, பன்னிரெண்டு எழுத்தாளர்கள் வெள்ளைத்தாமரைப் பதிப்பகத்தில் புதிதாகச் சேர்ந்தார்கள். அவர்களின் தரமான புத்தகங்களை பதிப்பகத்திற்கு தந்தார்கள்.

அவர்களிடமிருந்து எழுத்து வாங்கி, அதை புத்தகமாக்கி, வெளியே கொண்டு வந்து விற்பனைக்கு வைப்பது என்பது ஒரு பிரசவம் பார்ப்பது போல் கடினமான செயலாக இருந்தது. ஆனால், பார்த்து பார்த்து பழக்கப்பட்டதால் அது எளிதாகக் கைகூடிற்று. பிசிறில்லாமல் நிறைவேறிற்று.

எழுத்தாளர்களுக்கு வெள்ளைத்தாமரையின் தயாரிப்பு மிகவும்



பிடித்துப் போயிற்று. இன்னும் புதிதாக பல எழுத்தாளர்கள் வெள்ளைத் தாமரைக்கு எழுத ஆவல் காட்டினார்கள். 'சிறந்த பதிப்பகம்' என்ற அந்த ஆண்டின் தமிழ்நாடு அரசு பரிசு வெள்ளைத் தாமரைப் பதிப்பகத்திற்கு தரப்பட்டது.

"தம்பி. நீங்க போய் நிக்கறதை விட, அம்மாவை ஏத்தி மேடைக்கு அனுப்புங்க. அவங்களுக்கும் சந்தோஷமா இருக்கும். பரிசு கொடுக்கற அரசாங்கத்துக்கும் நிறைவா இருக்கும். மத்த பதிப்பாளர்களும் பொறாமையடையாம இருப்பாங்க. நீங்க ஏறினா, அவனைவிட நான் பெரிய ஆளு இல்லையா அப்படின்னு சீறுனாலும் சீறுவாங்க. அம்மா மேடை ஏறினா, 'ஐயோ பாவம்' புருஷன் இல்லாத பொம்பளைன்னு அவங்க கோபம் இறங்கி, அடுத்த வருஷம் அவங்க பரிசு வாங்க உழைக்க ஆரம்பிச்சிடுவாங்க. நீங்க மேடை ஏறாதீங்க. அம்மா ஏறட்டும்."

அதேபோல, பரிசு வாங்க அம்மாவோடு போயிருந்தான். அம்மா பளிச்சென்று புடவையில் படியேறி முதலமைச்சரை வணங்கி, பாராட்டுப் பத்திரமும் ரொக்கப்பரிசும் பெற்றுக்கொண்டாள். முதலமைச்சர் தர்மராஜனின் மரணம் பற்றி ஒரு நிமிடம் விசாரிக்க, அம்மா மௌனமாக நின்று, அவரை நோக்கி கைகூப்பி 'மிக்க நன்றி' என்று சொல்லிவிட்டு வந்தாள்.

அப்பா இருக்கும்போது கிடைக்காத அந்தப்பரிசு அப்பா இறந்த பிறகு கிடைத்தது. சற்று வேதனையாக இருந்தாலும், ஒரு சந்தோஷம் அதில் இருந்தது. அப்பாவின் படத்துக்கு இணையாக அந்த பாராட்டுப் பத்திரத்தை பெரிய பிரேமில் அலங்காரமாக வைத்து மாட்டினான். அதற்கு பூமாலை சாற்றினான். கீழே 'யாவும் உன்னருள்' என்று எழுதினான்.

பதிப்பகம் சூடு பிடித்தது. வெளிநாட்டு ஆர்டர்கள் நன்கு போயின. உள்நாட்டில் பணம் வசூல் கொஞ்சம் தாமதமானாலும், அடுத்த புத்தகத்திற்கு வரும்போது அவர்கள் மீதி பணமும் சேர்த்து கட்டிவிட்டு புதிய புத்தகங்கள் வாங்கிப் போனார்கள்.

"அம்மாவுக்கு வயசாயிடுச்சி. இந்த வயசுல அவங்களை ஏன் தொந்தரவு பண்றே. அவங்க கொஞ்சம் ராமா, கிருஷ்ணான்னு இருக்கட்டும். நீ கொஞ்சம் நம்பிக்கையான ஆளா ஒருத்தனை போட்டுக்கணும். ஒரே ஒரு ஆளுக்கு நல்ல சம்பளம் கொடுத்தா, அவன் கீழே வேலை செய்யற எல்லா ஆளுங்களையும் கவனமா பார்ப்பான். உனக்கு அப்படி ஆள் கிடைக்கலைன்னா சொல்லு. நான் நம்பிக்கையான ஆள் அனுப்பறேன்" என்று சொல்லி அந்த வயதான நண்பர் இரண்டு, மூன்று பேரை அனுப்பினார். அதில் ஒரு மனிதரை அவன் தேர்ந்தெடுத்தான்.

அவர் ஓய்வுபெற்ற ஒரு அதிகாரி. அவர் ஓய்வுபெற்றபோது என்ன சம்பளம் வாங்கினாரோ அதே சம்பளம் தருகிறேன் என்று சொல்ல அவர் சந்தோஷமாக ஒத்துக்கொண்டார். காலையில் எட்டு மணிக்கு அவர்தான் கதவு திறந்தார். மாலை ஒன்பது மணிக்கு அவர்தான் கதவு மூடினார். பல்வேறு விஷயங்களை நேர் செய்தார். எல்லா கணக்குகளையும் சரிபார்த்தார். பைண்டர்களிடம், அச்சகத்தாரிடமும் திடுமென்று போய் நின்று சோதனை செய்தார். 'கொடுக்கும் காகிதங்களை வீணாக்காமல் இருக்கிறார்களா' என்று கண்காணித்தார். "நாப்பது புஸ்தகத்துக்கு பேப்பர் குறையுது. மீதி எங்கே?' என்று அதட்டினார்.

முதலாளியைப் பார்க்காத. அவர் பேசமாட்டாரு.' அவருக்கு பதில் நான் தான் பேசுவேன். இது முதல் தடவை இருக்கிறதுனால விட்டுடறேன். அடுத்த தடவை தப்பு செஞ்சா நீ இந்த பில்டிங்குக்கு உள்ளே வரவே முடியாது" என்று தீவிரமாகப் பேசினார்.

அவருடைய அதட்டலில் திருஞானம் தலையிடாமல் இருந்தான்.

"கருப்பையா சார்தான் எல்லாம். என்ன பிரச்சினையா இருந்தாலும் காசு ஏதாவது வேணும்னாலும் அவரைப் பார்த்துக்குங்க. அவருகிட்ட கேளுங்க. எனக்கு வேற வேலை இருக்கு" என்று ஊழியர்களை அவரின் கீழே அனுப்பினான்.

கருப்பையா அங்கே தன் கொடியைப் பறக்க விட்டார். பதிப்பகம் இன்னும் பலப்பட்டது.

வயதின் உற்சாகத்தால், இளமையின் வேகத்தால் திருஞானத்தை காமம் அவ்வப்போது தொந்தரவு செய்தாலும், வேலைப்பளுவும், வேலையின் மீது இருக்கிற காதலும் அந்த வேகமான சுழற்சியும் இந்த தொந்தரவை சிதற அடித்து, உடம்பையும், மனதையும் ஆரோக்கியமாக மாற்றிக் கொண்டிருந்தன.

உலகத்தில் பல இளைஞர்களுக்கு பிடிக்காத, நிர்ப்பந்தமான, வேலைசெய்வது தான் தலையெழுத்தாக இருக்கிறது. ஆர்வமும், துடிப்பும் உள்ளவர்கள் வெறும் கணக்கர்களாய், எடுபிடி ஆட்களாய், திரும்ப திரும்ப ஒரே வேலை செய்கின்ற தொழிலாளர்களாய் தள்ளப்பட்டு, மனம் சோர்ந்துபோய் மனதின் உற்சாகத்திற்காகக் கற்பனை செய்து காமத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். வெளியே ஒரு ஆளும், உள்ளே ஒரு ஆளுமாய் வாழ்கிறார்கள். உள்ளே இருக்கிற ஆள் மிக சுந்தர புருஷனாய், பல பெண்களோடு கூடுபவனாய் பெரும்பணக்காரனாய் எல்லா வசதிகளும் உடையவனாய் இருக்கிறான். அவன் வெளிப்புற வாழ்க்கை அதற்கு நேர்மாறாய் இருக்கிறது. வாழ்க்கையின் நிஜம் தகிக்க, கற்பனைக் குகைக்குள் போய் மனம் அடிக்கடி பதுங்கிக் கொள்கிறது. இப்படிக் கற்பனைக்குள் மாட்டிக் கொள்கிறவர்கள் தான் காமத்தால் அவஸ்தைப் படுகிறார்கள். மனம் கற்பனையில் பெண்களை அவிழ்த்துப்பார்க்க பழக்கப்பட்டபிறகு, நேரில் பார்க்கிற பெண்களையும் துகிலுரிதல் நடந்து விடுகிறது. மனதால் துகிலுரிதல் நடக்கிறபோது, அது கற்பனைக்கு உடனே அழைத்துப் போகிறது.

இப்படி மாட்டிக்கொண்டே இளைஞர்கள் செய்தொழிலில் சிறிதளவும் சிரத்தை இல்லாமல் வெறும் குப்பையாக இருக்கிறார்கள். ஆர்வம் இல்லாததின் காரணமாகவும், அலட்சியத்தின் காரணமாகவும் அந்தக் குப்பை வேலையையே மிகக் கேவலமாக செய்கிறார்கள். அந்த வேலைக்காக பிறரால் இழிவுபடுத்தப்படுகிறார்கள். அந்த இழிவு படுத்தலின் விளைவாக சோர்வாகிறார்கள். அந்த சோர்வின் காரணமாய் மீண்டும், நிஜத்தின் வெம்மை தாங்காமல் கற்பனைக் குகைக்குள் போய் விடுகிறார்கள். காமம் தொடர்கதையாகிறது. மனமும், உடம்பும் உளுத்துப் போகின்றன.

மனதுக்குப் பிடித்த வேலை கிடைத்துவிட்டால், அல்லது செய்கிற வேலையை மனதுக்கு பிடித்த வேலையாக மாற்றிக்கொண்டு விட்டால், அந்த வேலை மீது காதல் ஏற்பட்டு விட்டால் காமம், தொந்தரவாக இருப்பதில்லை. 'அடுத்து என்ன' என்று இறக்கை கட்டிப் பறக்கின்ற



அந்த வேலை போதை காமத்தைக் காணாமல் அடித்து விடுகிறது. வேலை போதையால் வெற்றிகள் குவிகின்றன. வெற்றிகள் குவிந்தவருக்கு எல்லா வித சிறப்புகளும் கிடைக்கின்றன. செல்வத்தின் அருகாமை ஏற்படுகிறது. புகழ் கிடைக்கிறது. செல்வமும், புகழும் வர, பெண் என்கிற சுகமான விஷயமும் எளிதாய் வசப்படுகிறது.

வேலையில் வெற்றிபெற்றுதான் பெண்ணை அடைய வேண்டுமென்று பல இளைஞர்களுக்குத் தெரியவில்லை. பெண்ணின் காலில் விழுந்து கெஞ்சி காதலைக் கேட்கிறார்கள். பின்னே இடைவிடாது தொடர்ந்து போய் மனதை மாற்ற முயல்கிறார்கள்.

வில்லை வளைத்து, நாண் இழுத்து, வில் பளீரென்று இரண்டாய் ஒடிய, பூமி நடுங்க சகலரும் ஆவலாய்ப் பார்ப்பார்கள். எந்தப் பெண்ணுக்கு மனம் ஆசைப்பட்டதோ அந்தப்பெண் ஆயிரம் பார்க்க நடு சபையில் ஓடிவந்து, தானாக மாலையிடுவாள் என்பது இந்த இளைஞர்களுக்கு புரியவில்லை.

'இப்ப எதுக்கு கல்யாணம். இப்ப எதுக்கு பொம்பளை சுகம். முதல்ல ஜெயிப்போம் என்று திருஞானம் மனதைத் திருப்பினான். முழுவதுமாய் பதிப்பகத்தில் ஈடுபடுத்தினான். பதிப்பகத்தை காதலிக்கத் துவங்கினான். காமத்தோடு அந்த வேலைகளைச் செய்தான்.

அவனுக்கு அவன் தொழிலில் உள்ளவர்களோடு நல்ல பரிச்சயம் ஏற்பட்டது. அவனை மதிப்போடு அவர்கள் பார்த்தார்கள். அவன் தொழிலில் இல்லாதவர்களும் அவனை மதித்தார்கள்.

"தர்மராஜன் எட்டடி பாஞ்சா, திருஞானம் முப்பத்துரெண்டு அடி பாயறான்யா. எங்கயோ போயிட்டான் போ" என்று அச்சகத்தார்கள், பைண்டிங் ஆட்கள் எழுந்து நிற்க, பேப்பர் விற்பவர்கள் மரியாதை செய்ய, எழுத்தாளர்களும், பிரபலமானவர்களும், தானே முன்வந்து குசலம் விசாரிக்க, புத்தக வியாபாரிகள் பிரியமாய் பேச, வெளியூர் ஏஜெண்டுகள் அவ்வப்போது வந்து விசாரித்துவிட்டுப் போக, விவரம் புரிந்த அம்மா வீட்டில் அவனை மனமார வாழ்த்த, அவன் கம்பீரமாய் அரசமரம் போல் வளர்ந்தான்.

ரோட்டரி சங்கம் அவனை விருந்துக்கு அழைத்து 'பதிப்பகச் செம்மல்' என்று அவனுக்கு பட்டம் அளித்தது.

'யார்யா பேரு வைச்சா. உன் பதிப்பகத்துக்கு வெள்ளைத் தாமரைன்னு. ரொம்ப அற்புதமான பேரு. சொல்ல சொல்ல மனசில பெரிய தாமரை விரியுது. சரஸ்வதியினுடைய முகம் தெரியுது. ஒரு பதிப்பகத்துக்கு, ஒரு அலுவலகத்துக்கு, ஒரு கடைக்கு பேர் ரொம்ப நல்லா இருக்கணும்யா. பேர்ங்கறது முகம் மாதிரி. அந்த முகம் லட்சணமா இருந்தா மத்த விஷயங்கள்லாம் தானா லட்சணமாயிடும். நீர் இனிமேல் வெறுமே திருஞானம்னு சொல்லாத 'பதிப்பகச் 'செம்மல்' வெள்ளைத் தாமரை திருஞானம்னே சொல்லுங்கையா. இப்ப இந்த சபையில நான் மூணுதடவை அவருடைய பெயரை முழுசா கூப்பிடறேன். எல்லாரும் சேர்ந்து அந்த இளைஞனை 'வாழ்க' என்று மனமார வாழ்த்துங்கள். 'பதிப்பகச் செம்மல் வெள்ளைத்தாமரை திருஞானம் வாழ்க' அவர் மூன்று முறை சொல்ல, அனைவரும் மூன்று முறை கோரஸாக வாழ்த்தினார்கள்.

திருஞானத்திற்கு உடம்பு நடுங்கியது. அப்பாவை நோக்கி மனம்

குவித்து நன்றி சொல்லியது. 'உழைத்தால் உயர்வு உண்டு. கடுமையாகப் பாடுபட்டால் பலன் உண்டு என்பதை திருஞானம் இளம்வயதிலேயே தெளிவாகத் தெரிந்துகொண்டான். அவனுக்கு கிடைத்த புகழுக்கு இறைவனுக்கு நன்றி சொன்னான். அப்பாவை தினமும் வணங்கினான்.

ஒருநாள் விடியற்காலையில், தாரிணியிடமிருந்து போன் வந்தது.

"நாளைக்குக் காலையிலே நானும், குழந்தையும் பிளைட்ல கிளம்பி மெட்ராஸுக்கு வர்றோம். அவருக்கு டிரான்ஸ்பர் ஆயிடுச்சி. எல்லைப் பகுதியிலே சுத்தி அஸ்ஸாம்ல இத்தனை நாள் இருந்ததுக்காக அவரைத் தெற்கே மாத்தியிருக்காங்க. குறிப்பா, மெட்ராஸ்தான் வேணும்னு கேட்டு, ஒத்தக்கால்ல நின்னு மாற்றல் வாங்கிட்டோம். நான் நாளைக்குக் காத்தால நாலஞ்சு பொட்டியோட ஏர்போர்ட்டுக்கு வரேன். திருஞானத்தை கார் எடுத்துட்டு வரச்சொல்லு. அவர் மத்த மூட்டை, முடிச்செல்லாம் கட்டிக் கிட்டு ரயில்ல மெட்ராஸ் வந்துடுவாரு. மெட்ராஸ்ல ஒரு வீடு பார்க் கணும். இனி ஆறு வருஷத்துக்கு மெட்ராஸ் தான். திருஞானத்துக்கு ஏதாவது ஒரு வரன் கிடைச்சுதா."

"இல்லைடி. ஒண்ணும் மும்முரமா தேடவே இல்லை."

"ஒண்ணும் தேடாதீங்க நான் வரேன். நான் வந்து தேடி அண்ண னுக்கு கல்யாணம் முடிச்சு வைக்கறேன்" என்று போன் துண்டித்தாள்.

திருஞானம் லேசாய் கவலையானான். அதேசமயம் மருமகனைப் பார்க்கலாம் என்று சந்தோஷமானான்.

தளர்நடையாலும், ஓட்டத்தாலும், சிரிப்பாலும், கூச்சலாலும் மருமகன் சரவணன் ஏர்போர்ட்டையே கலக்கினான். குழந்தை கொழு கொழுவென்றிருந்தது. பெரிய விழிகளை உருட்டி நாலாபக்கமும் பார்த்தது. வெள்ளைத்தோலாய் யார் போனாலும் கீச்சென்று கத்தியது. கைநீட்டி சுட்டிக்காட்டியது. உதறி இறங்கி ஓடி உற்றுப்பார்த்தது. புடவை கட்டிய பெண்களுக்கு அருகே போய் முகம் புதைத்துக் கொண்டது. யாரோ கைநீட்டி அழைக்க ஓடிப்போய் விரலுக்கு முத்தம் கொடுத்து விட்டு திரும்பி வந்துவிட்டது. பெட்டிகளை எடுத்துக்கொண்டு, கார் ஏறி வீட்டிற்கு வருவதற்குள் திருஞானத்திடம் மருமகன் சரவணன் நெருக்கமாய் ஒட்டிக்கொண்டான். 'மம்மா, மம்மா' என்று கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமழை பொழிந்தான். அந்த வாசனையிலும், அன்புப்பிடியிலும் கண்கள் கிறங்கின. நெஞ்சு நெகிழ்ந்தது. 'பதிப்பகத் திற்கு லீவு போட்டுவிட்டு இன்று முழுவதும் மருமகனோடே இருக்க வேண்டும்' என்ற பேராவல் பொங்கியது.

'பெண் எத்தனை சுகம் என்று பலபேர் சொல்கிறார்களே. பெண்ணை விட குழந்தைதான் மிகப்பெரிய சுகம் அற்புதமான இதம்' என்று திருஞானத்திற்குத் தோன்றியது.

"எனக்கு ஒரே கவலை" தாரிணி வழியில் வரும்போது பேசினாள்.

"என்ன கவலை தாரிணி?"

"இவனுக்கு நல்லபடியா கல்யாணம் ஆகணுமேன்னு."

"எவனுக்கு?"

"எம்புள்ளைக்குத்தான்."

"தே. இப்பத்தான் ரெண்டு வயசு ஆவுது. அதுக்குள்ளே அவனுடைய கல்யாணத்தைப் பத்திப் பேசறே. அவன் வளர்ந்து, படிச்சி, பெரிய ஆளாகி..."



"அதெல்லாம் ஆட்டோமேட்டிக்கா நடக்கும். நல்ல பொண்ணா கிடைக்கறதுதான் கஷ்டம்."

"என்ன சொல்றே தாரிணி?"

"உங்க உறவு விட்டுப் போகக்கூடாதுண்ணே. எப்பவும் நீ அண்ணனா இருக்கணும். நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணி பொண்ணு பெத்து கொடு. நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து இவங்க கல்யாணத்தை நிச்சயம் பண்ணிடலாம்."

"யப்பா" - திருஞானம் சிரித்தான். "எனக்கு கல்யாணம் ஆகி, அவளுக்கு வயித்துல குழந்தை உருவாகி, அது பொண்ணா இருந்து, அதுக்கப்புறம் நடக்க வேண்டிய விஷயத்தை இப்பவே என்னவோ முடிச்சுடலாம். முடிச்சுடலாம்னு பேசறே."

"என் மனசுல இருக்கற எண்ணத்தை சொன்னேன். எங்கயோ அஸ்ஸாமுக்கும், டெல்லிக்கும், கல்கத்தாவுக்கும் தூக்கி அடிக்கறாங்க. தினம் தினம் உங்க நினைப்பு பக்கத்துலயே இருக்கணும்னு ஆசை. ஆனா முடியலை. அதனாலதான் எப்படியாவது, ஏதாவது ஒரு தொடர்பு இருக்கணும்னு ஒரு ஏக்கம் வந்திடிச்சு."

"புரியுது தாரிணி. இனிமே நீ தான் மெட்ராஸை விட்டு போகப் போறதில்லையே" - திருஞானம் அவளை சமாதானப்படுத்தினான்.

"சர்வநிச்சயமா போகமாட்டேன். அப்படி இன்னொரு டிரான்ஸ்பர் இருந்துதுன்னா, 'வேலையை தூக்கி அடிங்க. நீங்களும் பதிப்பகத்தோடயே உக்காந்துக்குங்க அப்படின்னு சொல்லிட்டேன்."

திருஞானத்துக்கு அவள் பேச்சு திக்கென்று இருந்தது. அவள் மன தில் பல திட்டங்கள் வைத்திருக்கிறாள் என்பதை அவள் தொலைதூரப் பார்வை சொல்லியது. திருஞானம் பதில் பேசாமல் வந்தான்.

"இவரு இப்ப வாங்கற சம்பளம் எவ்ளோ தெரியுமா. இருபத்து மூணாயிர ரூபா. அந்தக்காசு கையில வாங்கறதுக்கு நாய் படாத பாடு பட வேண்டி இருக்கு. காலையில போனா நடுராத்திரியிலே வர்றாரு. சிலசமயம் தீவிரவாதிகள் இருக்கற இடத்துக்கு கூட்டிக்கிட்டு போயிட றாங்க. தீவிரவாதிகளோட பேட்டின்றாங்க. சிலசமயம் தீவிரவாதிகள் இவங்களை நாலுநாள் மடக்கி உட்கார வைச்சிடறாங்க. இவரு வந்து சொல்றபோது குலை நடுங்குது.

"கேமரா எடுத்துகினு போற இடம்லாம் எப்படி. ஒண்ணு கொலை நடந்த இடம். இல்லே, கொள்ளை நடந்த இடம். நெருப்பு புடிச்ச இடம். கப்பல் கவுந்த இடம். அப்படி எதுவுமே இல்லைன்னா, அரசியல் வாதிகளும், ரௌடி பசங்களும் அட்டகாசம் பண்ற இடம். இது மாதிரி இடத்துக்குத்தானே போக வேண்டியிருக்கு."

"ஆமா. எனக்கு புரியுது. மாப்பிள்ளை செய்யற வேலை கஷ்டம் தான்."

"அதேசமயத்துல அதில நிறைய சௌகர்யமும் இருக்கு. இப்ப மெட்ராஸுக்கு டிரான்ஸ்பர்ன்றதையே ஒரு பெரிய எம்.பி தான் பண்ணிக் குடுத்தாரு. அவர் அஸ்ஸாம் வந்தப்ப அவருக்கு சாப்பாடு சரியா கிடைக்கலை. இவர் பொண்டாட்டி, புள்ளையோட இருக்கறது தெரிஞ்சி, 'எனக்கு ஏதாவது சாம்பார் சாதம் கிடைக்குமான்னு கேட்டிருக் காரு. நான் வக்கணையா அவருக்கு கறிசோறு ஆக்கிப்போட்டேன். காட்டுக்கோழி வதக்கல், கறிக்குழம்பு, மீன் பொரியல்னு செய்து

போட்டேன். மூக்கைப் பிடிக்க சாப்பிட்டு, உனக்கு 'என்ன வேணும் சொல்லு' அப்படின்னாரு. 'ஒண்ணும் இல்லீங்க இங்கயே ரொம்ப நாளா இருக்கோம். தெற்கே மாத்திடுங்கன்னு கேட்டேன். நாலாம் நாள் மாத்திட்டாங்க" என்று தலை சிலுப்பிக்கொண்டு தாரிணி சொன்னாள்.

தாரிணியை வீட்டில் வைத்து எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று திருஞானத்திற்கு பயமாக இருந்தது.

"சரி. இங்க வீடு பாக்கட்டுமா"

"அவசரப்படாதே. கொஞ்சநாள் நான் நம்ம வீட்லயே தங்கிக்கறேன்."

திருஞானம் பேசாதிருந்தான்.

"ஏன் பேசமாட்டேன்ற. நம்ம வீட்டுல நான் தங்கலாம் இல்லை."

"இல்லைம்மா. சாமான் செட்டெல்லாம் எடுத்துன்னு வர்றியே. அதெல்லாம் எங்க போடறது."

"அதையெல்லாம் இங்க எதாவது ஒரு கோடௌன்' பிடிச்சி போட்டுரலாம். அவரும், நானும் ஒரு மாசம் இங்க தங்கறோம்."

"நல்லா தங்குங்க. குழந்தைகூட இருக்கறது பெரிய சந்தோஷம் இல்லை."

"அப்ப நான் இருக்கறது தொந்தரவுன்றியா."

"என்ன தாரிணி எடக்குமடக்கா பேசிக்கிட்டு இருக்கே"

திருஞானம் நொந்து போன குரலில் பேசினான்.

"நீ ஒண்ணும் வீடு பாக்க வேணாம். அவருக்கு அன்னாம்லை குவார்ட்டர்ஸ் கிடைச்ச மாதிரி இங்கயும் எதனா அரசியல்வாதிங்க குவார்ட்டர்ஸ் கிடைக்கும். அதுக்கு ஒரு மாசம் டைம் ஆகும். மேலேயும் ஆகலாம். அதனாலதான் அதுவரைக்கும் வேற வீடு தேடாம நம்ம வீட்டுலயே இருந்துக்கலாமான்னேன்."

"சரி இருந்துக்க."

"நம்ம வீட்டுக்கு கீழே ஆறேழு கார்ஷெட் இருக்கே. எல்லா ஷெட்லயுமா கார் இருக்கு."

"தெரியலை தாரிணி. விசாரிச்சுப் பாரேன்."

"அதுல எதுனா காலியா இருந்தாக்க கொண்டு வர்ற சாமானை அங்க போட்டுறலாம்."

இத்தனை வேகமாக தாரிணி பேசவேண்டும் என்றால் அவள் எத்தனை யோசித்திருக்க வேண்டும் என்று திருஞானத்திற்கு கேள்வி வந்தது. இவ்வளவு யோசிக்கற பெண் ஆபத்தானவள் என்ற எண்ணமும் வந்தது.

வெண்கலக்கடையில் பசு புகுந்ததுபோல் தாரிணி வீட்டிற்குள் புகுந்தாள். வீட்டினுடைய அமைதியை, அமைப்பை அலைக்கழித்தாள். தாரிணியும், அவள் புருஷனும் நடுக்கூடத்தில் கட்டிக்கொண்டு முத்தமிட்டுக் கொண்டார்கள். அவள் புருஷன் மாறவே இல்லை. தாரிணி என்ன சொன்னாலும் கேட்கிற ஒரு சின்னப்பையனாகவே அவன் இன்னமும் இருந்தான்.

"எனக்கு உன் ரூமை கொடுத்துடேன். நீ அம்மாவோட ரூம்ல தங்கிக்கயேன்" வந்த அன்றே கட்டளையிட்டாள்.

அவனுடைய அறை சிறிதாக இருந்தது. வாசல் பார்த்து இருந்தது. காலையில் எழுந்து அவன் இடுப்பு ஜட்டியோடு சூரியனைப் பார்த்து



நமஸ்காரங்கள் செய்ய முடிந்தது. உடற்பயிற்சி செய்து உடம்பை கட்டாக வைத்திருக்க முடிந்தது.

"வெறுமனே கொடுத்தா போதாது திருஞானம் அந்த ரூமை ஏஸி பண்ணணும். அவரு ஏஸி மிஷினும் கொண்டு வர்றாரு."

மறுநாள் ஏஸி மிஷினோடு தாரிணியின் புருஷன் வந்து இறங்கினான். ஏஸி மிஷின் வைப்பதற்காக ஜன்னலை கழற்றி மாட்டி, கீழேயிருந்து தனித்த ஒயர் முதல்மாடிக்கு கொண்டு வந்து, தனி அமைப்பு செய்து ஏகப்பட்ட செலவுகள் ஏற்பட்டது.

ஏஸி அன்று ஓடியது. மறுநாள் ஓடவில்லை. ஒரு மெக்கானிக்கை கொண்டு வந்து பார்த்தபோது, "இது குப்பை மிஷின் சார். லோக்கல் மேக். இது நல்லா ஓடும்னு கேரண்டியா சொல்ல முடியாது" என்று சொல்லிவிட்டுப் போனான்.

"அங்க மூணு வருஷமா ஓடிக்கிட்டிருந்தது. அதைப்போய் இவன் குப்பைங்கறானே. இவனுக்கு வேலை தெரியலை" தாரிணி கடுகடுத்தாள். "இத்தினி செய்தாச்சு. புது ஏஸி போட்டுடலாமே" யோசனை சொன்னான்.

இருபத்தோராயிரம் ரூபா செலவு செய்து புது ஏஸி மிஷின் வாங்கி அங்கே மாட்டினார்கள். இன்னும் என்னென்ன செலவுகளெல்லாம் இவள் வைப்பாளோ என்ற கவலை திருஞானத்துக்கு எழுந்தது.

அவள் சொன்னதுபோல, ஒரு கார்ஷெட் வாடகைக்குப் பிடித்து அவள் அன்னாமிலிருந்து கொண்டு வந்த சில சாமான்களை அங்கே போட்டு வைத்தார்கள். மூன்று பெட்டி நிறைய அரைகிலோ, ஒரு கிலோ டித்தூள் கொண்டு வந்திருந்தாள். அதை அடுக்குமாடி குடித்தனம் முழுவதும் விநியோகித்தாள். 'அன்னாம் - ' அன்னாம்' என்று ஆறேழு நாட்கள் பேசிக்கொண்டிருந்தாள்.

"அன்னாம்பத்தி தமிழர்கள் யாருக்கும் தெரியலை. அது ஒரு அற்புதமான இடம்" என்று எதிர்வீட்டிற்குப் போய் பேச ஆரம்பித்தாள்.

"ஆமாம் ஆமாம். நேத்துகூட பதினாறு பேரை நடுரோட்ல கட்டுக் கொன்னானாம்" எதிர்வீடு கேலி செய்தது. வேகமாய் கோபமாய் திரும்பினாள்.

"தமிழ்நாட்டுல கொலையே நடக்கலையா. என்ன பேசறான் அந்த பாப்பான்" என்று சீறினாள்.

அம்மா பயந்துபோய் கதவுசாத்த வேண்டியதாயிற்று. 'அடக்கிப் பேசடி' என்று அதட்ட வேண்டியதாயிற்று.

எதிர்வீடு முன்பெல்லாம் மிக மிக மரியாதையாய் திருஞானத்தை நடத்தும். அவன் அப்பாவைப் பற்றி உயர்வாய்ப் பேசும். ஆனால் தாரிணியின் வருகைக்குப்பிறகு எதிர்வீடு புன்னகைகூட செய்வதில்லை ஒதுங்கியே இருந்தார்கள்.

"திருஞானம் நான் உனக்கு பொண்ணு பாக்கப்போறேன். அந்தப் பொண்ணை எனக்குப் பிடிச்சிருந்தா நீ அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்" கிட்டத்தட்ட ஒரு முட்டாள் குழந்தைபோல தாரிணி பேசினாள்.

"தாரிணி, அந்த மாதிரி எதனா நடிக்குன்னு பண்ணி வைக்காதே. எனக்கு பிடிச்சிருந்தாதான் கல்யாணம்."

"உனக்குப் பிடிக்காத பொண்ணை நான் செலக்ட் பண்ணுவேனா"

தாரிணி அவனைப்பற்றி சகலமும் தெரிந்தவள் போல பேசினாள்.

"எனக்குப்பிடிக்கும். பிடிக்காதுன்றது உனக்கு தெரியாது. அது நான் பாத்து முடிவு பண்ணவேண்டிய விஷயம். எங்கயாவது, எதாவது வாக்கு கொடுத்துட்டு வந்தே, நான் ரொம்ப கடுமையா இருப்பேன்" என்று திருஞானம் எச்சரித்தான்.

அவள் உடனே, போய் அம்மாவிடம் புகார் செய்தாள்.

"ஒரு ஆர்வத்துல சொல்லியிருப்பாடா. தவறா எடுத்துக்காத" அம்மா அவளுக்குப் பரிந்து வந்தாள்.

அம்மா, தாரிணிக்குப் பரிந்து வந்தது திருஞானத்திற்கு எரிச்சலாக இருந்தது.

தாரிணி வந்த இருபது நாளில், நிஜமாகவே ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்து 'ஆஹா ஓஹோ'வென்று குதித்தாள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை அவனை அழைத்துக்கொண்டு பெண் பார்க்கப் போனாள்.

அந்தப்பெண் பேரழகியாக இருந்தாள். எல்லா பெண்களையும்விட ஒரு பிடி கூடுதல் உயரமாக இருந்தாள். சுருள்சுருளாக தலைமுடி, வளைவான உதடுகள், சிறிய மூக்கு, மாநிறம்தான் என்றாலும் அழுத்தமான உடல்வாகு. புடவையில் நிற்கிறபோது அவள் உருவம் சிலைபோல் தெரிந்தது. கைகள் நீண்டிருந்தன. ஏகப்பட்ட அலங்காரங்கள் செய்து அவளை அனுப்பியிருந்தார்கள். பொங்கலுக்கு வருகிற பசுமாடு போல் ஊதுவத்தி வாசனையோடு அவள் விளங்கினாள்.

'அம்மா பாடத்தெரியுமா' என்று கேட்டதற்கு 'நல்லா பாட்டு கேட்பேங்க. பாட்டு கத்துக்கலை' என்று பதில் சொன்னாள். மற்றபடி நகம் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நகங்கள் மிகச்சீராக வெட்டப் பட்டு, வளைவாக்கப்பட்டு அதில் வண்ணம் தீட்டப்பட்டு இருந்தன.

'மற்றபடி, என்ன படிச்சிருக்கீங்க' என்று கேட்டபோது, அவளுக்குப் பதில் அவள் வீடு பதில் சொல்லியது. ப்ளஸ் டூ படிப்பும், கொஞ்சம் சமையலும் தெரியும் என்று சொன்னது. செல்லமாய் வளர்த்தோம் என்று பெருமைப்பட்டது.

"அக்கவுண்ட்ஸ், கம்ப்யூட்டர் எதனா படிக்கக் கூடாதா?" என்று திருஞானம் கேட்க, அவர்கள் பேசாதிருந்தார்கள்.

"நாங்க அந்த மாதிரியெல்லாம் ஒரு வரன் எதிர்பார்க்கலை. ஒரு வீட்டில போயி ராணி மாதிரி குடித்தனம் பண்ணனும்னுதான் பொண்ணை வளர்த்துருக்கோம். உங்க வீட்டுல வந்து குடித்தனம் பண்றதுக்கு எதுக்கு அக்கவுண்ட்டன்ஸி" என்று பதிலுக்கு கேட்டார்கள்.

"ஒண்ணும் தேவையே இல்லை" என்று திருஞானத்தின் தங்கை தாரிணி பதில் சொன்னாள்.

அவர்கள் கிளம்பி வந்தார்கள்.

"உனக்குப் பிடிச்சிருக்கா அண்ணா" தாரிணி கேட்டாள்.

"இல்லை தாரிணி. எனக்கு இந்த பொண்ணுல்லாம் சரிப்பட்டு வராது."

"ஏன்"

"அது உக்காந்து நகம் பாத்துக்குனு இருக்கு. பளபளன்னு நகத்தை வளையம் வளையமா வெட்டிகிட்டு இருக்கு. அது மாதிரி பொண்ணு எப்படி சமையல் பண்ணும். குடும்பத்தைக் கவனிக்கும். தலையைச்



சொறிஞ்சா கூட நகம் ஒடிஞ்சுருமோன்னு அது ரொம்ப நாசூக்கா கையை வைச்சிகிட்டு இருக்கு. அவங்க சொன்னா மாதிரி, இது ராணி மாதிரி வாழவேண்டிய பொண்ணு. எனக்கு கட்டிவைக்காதே."

"ஏன். உனக்கு ராணியை வெச்சு குடித்தனம் பண்ணமுடியாதா?"

"எனக்கு வேலைக்காரிதான் வேணும். வேலை செய்யத் தெரிஞ்சவ தான் வேணும். வெறும் தளுக்கு சுந்தரிங்களெல்லாம் என் தலையில கட்டிடாதே. எனக்கு தாங்காது."

"வீட்டுக்கு வர்ற ஒய்ப் என்ன செய்யணும்னு நினைக்கிறே. சமையல்தான் கொஞ்சம் செய்யத் தெரியும்றாங்களே. வீட்டுக்கு வந்த பிறகு மிச்சத்தை கத்துக் கொடுத்துட்டா போச்சு."

"சமைச்சா போறாது. என்கூட பதிப்பகத்துக்கு வரணும். பதிப் பகத்து வேலையும் செய்யணும். நான் வெளியூர் போனா கவனிச்சிக் கணும்."

"இதுக்கு ஆள்வைச்சா சரியா வராதா திருஞானம்."

"வராது தாரிணி. ஆளை நம்பி விட முடியாது. இப்ப இருக்கிற ஆள் நம்பிக்கையான ஆளா இருந்தாலும் சீக்கிரம் வீட்டுக்குப் போயிடு வாரு. அவர் வேலை செஞ்சது போதும்னு ஒரு மனநிலைல இருக்காரு. எனக்கு துணைக்கு இளமையா ஆள் இருந்தா தான், எனக்கு ஈக்வலா ஆள் இருந்தா தான், நமக்கு தெரிஞ்ச ஆள் இருந்தா தான் சரியா வரும்" என்று அவன் தன்னுடைய நிலைமை பற்றி தெரிவித்தான்.

"அவங்க வீட்டுக்கு என்ன சொல்றது?"

"வேணாம்னு சொல்லு."

"அவங்க ரொம்ப வருத்தப்படுவாங்க."

"வந்தா நம்ம வீடு ரொம்ப வருத்தப்படும் வேண்டாம்."

"இவ்ளோ அழகான பொண்ணை வேணான்னு சொல்றதுக்கு உனக்கு எப்படி மனசு வந்தது?"

"நான் அதை வெச்சுக்கிட்டு என்ன பண்றது. படுக்கையில போட்டு புரட்டறதுக்கு மட்டுமா பொண்டாட்டி. பொண்டாட்டிங்கறவளுக்கு நிறைய வேலை இருக்கு தாரிணி. நான் மறுபடியும் சொல்றேன். அவ் தளுக்கு சுந்தரி. அவளுக்கு வேற இடத்துல கல்யாணம் ஆகட்டும். நல்லா இருக்கட்டும். நம்ம வீட்டுக்கு வந்தா அவளுக்கும் கஷ்டம், நமக்கும் கஷ்டம்."

"நீ என்னம்மா சொல்றே?" - தாரிணி அம்மாவைக் கேட்டாள்.

"அவன் என்ன சொல்றானோ அதுதான்டி நம்ம முடிவு."

"அவன் சொல்றது இருக்கட்டும். உனக்கு பொண்ணு பிடிச்சிருக்கா?"

"பாக்க லட்சணமாதான் இருந்தா" அம்மா சொன்னாள்.

"லட்சணமான மாட்டுப்பொண்ணு உனக்கு வரணும்னு ஆசையா இல்லையா. அப்படி ஒரு மருமக உனக்கு தேவையில்லையா"

"வந்தா நல்லாதான் இருக்கும்."

"சொல்லேன் அதை வாயைத் திறந்து."

"அவன்தான் வேணான்னு சொல்றானடி."

"அம்மா. என் கல்யாணத்தை என் இஷ்டத்துக்கு விடுங்க. தாரிணி பொறுப்பாக வேண்டிய அவசியம்கூட இல்லே" திருஞானம் சட்டென்று சொன்னவுடன், தாரிணி முகம்சுருங்கிப் போனாள்.

"எக்கேடோ கெட்டு ஒழி. உனக்குப் போய் பொண்ணு பார்த்தேன்

பார். என் புத்தியை ஜோட்டால அடிச்சுக்கணும்" என்று அதிரடியாய் பேசிவிட்டு போனாள்.

அவர்கள் நாற்பது சவரன் போடுகிறேன் என்று செய்தி அனுப்பினார்கள். வீடு திகைத்தது.

அம்மா, "என்னடா இது. இவ்ளோ போடறேன்றாங்க். இன்னும் ஒரு தடவை யோசனை பண்ணி பாக்கறியா" என்று கேட்டாள்.

அவன் அவர்களிடம் வேண்டாம் என்று டெலிபோனில் நாசுக்காக மறுத்தான்.

இரண்டு நாள் கழித்து அறுபது சவரன் போடுகிறேன் என்று வந்தார்கள். அவனுக்கு கோபம் வந்துவிட்டது.

"நான் சொல்வது உங்களுக்கு ஏன் புரியவில்லை. எனக்கும் உங்கள் மகளுக்கும் சரியானபடி தோதுபட்டு வராது என்று நினைக்கிறேன். நான் சாதாரண அரை டிராயர் பையன். உங்கள் மகள் ராணியைப் போல் இருக்க வேண்டியவள். அவளை இன்னும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுங்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்" என்று சொல்லி போனை வைத்துவிட்டான்.

அம்மாவும், தாரிணியும் மிகவும் மனம் நொந்தார்கள்.

"அறுபது சவரன் போடறேன்றாங்க. என்னடா கொஞ்சமாவது யோசிக்க வேணாமா?" அம்மா சொன்னாள்.

"யோசிக்கறதுக்கு இடமே இல்லை. ஒரு மாதிரி பொண்ணை விக்கறாங்க. எனக்கு அதெல்லாம் பிடிக்கலை" - திருஞானம் கடுகடுத்தான்.

அன்றிலிருந்து அண்ணனும், தங்கையும் அதே வீட்டிலிருந்தும் இருவரும் முகங்கொடுத்த பேசிக்கொள்ளவில்லை.

கணவனும், மனைவியும் இரண்டு நாட்கள் எங்கெங்கோ அலைந்து மத்திய அரசாங்கத்தின் பப்ளிக் ஓர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் அடையாறு குவார்ட்டர்ஸில் முதலாவது ப்ளோர் வாடகைக்குப் பிடித்தார்கள். யாரோ மத்திய மந்திரியின் சிபாரிசு பிடித்து அந்த குவார்ட்டர்ஸை சட்டென்று வளைத்துப் போட்டார்கள்.

மூன்று ரூம், ஒரு ஹால் பெரிய சிட் அவுட் சுற்றிலும் மரங்கள் உள்ள அந்த குவார்ட்டர்ஸ் அற்புதமாக இருந்தது. அந்த குவார்ட்டர்ஸுக்கு தாரிணி இடம்பெயர்ந்தாள். அந்த குவார்ட்டர்ஸ் சுத்தி உள்ள வீடுகளில் தன்னுடைய கொடியை பறக்க விடுவதற்கு மும்முரமாக இருந்ததால் வீட்டிற்கு அடிக்கடி வராமல் இருந்தாள். எப்போதாவது ஒருமுறை போன் செய்தாள்.

மீண்டும் 'இன்னொரு பெண் பார்க்கலாமா' என்று திருஞானத்திடம் கேட்டபோது, 'இத்தோட நிறுத்திக்க' என்று திருஞானம் கடுகடுக்க மறுபடியும் அவனிடம் பேசுவதைத் தவிர்த்தாள். ஆனால் அம்மாவும், பெண்ணும் மட்டும் குசுகுசுவென்று பேசிக்கொள்வார்கள். 'ஏதேனும் பேசிக்கொண்டு போகட்டும்' என்று திருஞானம் ஒதுங்கிக் கொண்டான்.

சனிக்கிழமைகளில் பதிப்பகத்திற்கு வருகிற அந்த வாடிக்கையான வயசாளி அன்றும் வந்திருந்தார்.

"என்ன தம்பி. வீட்ல ஏதோ கல்யாணப் பேச்சு அடிபடறா போல இருக்கே. ஒண்ணும் சரியா வரலையா?" - திடீரென்று கேட்டார்.

"எப்படிங்க உங்களுக்குத் தெரியும்?" என்று அவன் ஆச்சரியத்



தோடு அவரை வினவினார்.

"உங்க மேனேஜர்தான் சொன்னாரு. பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு முந்தாநேத்து உங்களைப்பத்தி டெலிபோன்ல விசாரிச்சேன். அதுக்கு உங்க மேனேஜர், 'எங்கயோ வெளிய போயிருக்காரு, எங்கன்னு தெரியலை. ஞாயித்துக்கிழமை பொண்ணு பார்த்து வந்தாரு போல இருக்கு. அந்த விஷயமா அலையறாரோ, என்னமோன்னு சொன்னாரு. இதைக்கேட்டதும் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. சட்டு புட்டுன்னு கல்யாணத்தை முடிங்க தம்பி."

"அது ஒண்ணும் முடியறா மாதிரி தெரியலீங்க" அவன் பதிலுக்கு நொந்த குரலில் சொன்னான்.

"ஏன் என்ன ஆச்சு?"

"அதைப்பார்த்து செய்யறதுக்கு சரியான ஆள் இல்லை. அம்மாவுக்கு வெளியிலே நடமாட முடியலை. தங்கச்சி கத்துக்குட்டித்தனமா நடந்துக்குது."

"என்ன. கத்துக்குட்டித்தனம்னா எதைச் சொல்றே" - அவர் ஆதரவாகக் கேட்டார்.

"ரொம்ப அழகான பொண்ணுங்க. அதை கொண்டாந்து நிறுத்தி இதைதான் கட்டிக்கணும்ற மாதிரி உரத்த குரல்ல பேசுது. முதல்ல அந்த விஷயம் எனக்குப்பிடிக்கலை. அழகான பொண்ணைக் கல்யாணம் பண்ணி நான் என்ன பண்ணப்போறேன். எனக்கு உபயோகமாக இருக்கணும்னு விளக்கிச் சொன்னேன். அது அவளுக்கும் புரியலை. அம்மாவுக்கும் புரியலை. பொண்ணு வீட்டில என்னடான்னா, நாற்பது சவரன் போடறேன். அறுபது சவரன் போடறேன்னு பொண்ணுக்கு கூட வரசீரை ஏத்திகிட்டே இருக்காங்க. நான் காசுக்காக பொண்ணை வேண்டாம்னு சொல்றேன்னு நினைச்சிட்டாங்க போலருக்கு."

"அப்படி இருக்காது தம்பி. உன்னைப்பத்தி 'ஆஹா, ஓஹோ'ன்னு சொல்லியிருப்பாங்க. எப்படியாவது இந்த சம்மந்தத்தை முடிச்சிடுங்கன்னு உன்னைப்பத்தி உயர்வா விளக்கியிருப்பாங்க. அதனால எப்படியும் உன்னை பிடிச்சிடணும்னு சொல்லிட்டு நாப்பது, அறுபதுன்னு அவங்க ஏத்தி கேட்டிருப்பாங்க. நீ இதுக்கு மயங்காட்டியும் உன் வீடு இதுக்கு மயங்காதான்னு முயற்சி செய்து பாத்திருப்பாங்க. பொண்ணை பெத்தவன் நாலு விதமாவும் முயற்சி பண்ணத்தான் செய்வான். அதை ரொம்ப தப்பா எடுத்துக்க முடியாது. நீங்க என்ன சொன்னீங்க கடைசியா?"

"வேண்டவே வேண்டாம்னுட்டேன்."

"ஏங்க தம்பி அழகான மனைவி இருக்கறதுலே என்ன தப்பு. உங்க தங்கச்சிகூட நல்ல அழகுதானே."

"அதை வெச்சுகிட்டுதானே மாப்பிள்ளையை முந்தானையில முடிஞ்சு வைச்சிருக்கா."

"அதுக்குதான் பயப்படறீங்களா?"

"அந்தமாதிரி பயம் மட்டும் இல்லீங்க. இங்க வந்து நம்ம பதிப்பகத்துல உக்காந்து வேலை செய்யணும். அது நகத்தைப் பார்த்துகினு உக்காந்திருக்கு. புருவமும், தலைமுடியும் நல்லா இருக்கான்னு அதே யோசனையா இருக்கு. பதிப்பகத்துக்கு வந்து புஸ்தக கட்டை தூக்கி ஆட்டோவுல வைச்சு கொண்டுபோய் டெலிவரி பண்ணிட்டு வர ஆளா

இருந்தா தான் நமக்கு சௌகரியமா இருக்கும். நான் இல்லாதபோது
வர்ற போன்காலை அட்டெண்ட் பண்ணி, வர்ற கஸ்டமர்கிட்டே பேசி,
என்ன வேணும்னு கேட்டு, அவங்க கேக்கற புத்தகத்தை ஸ்டூல் போட்டு
மேல ஏறி எடுத்துக் குடுக்கற ஆளா இருந்தாதான் நமக்கு சரியா வரும்.
நகம் வட்டமா, வளையமா வெட்டிகிட்டு இருந்தா அவங்களால புஸ்தகம்
எடுத்து கொடுக்க முடியாது."

"அதாவது கூட நின்னு உழைக்கற மனைவி வேணும்னு சொல்
றீங்க."

"ஆமாங்க."

"அப்ப அப்படி ஒரு பொண்ணு பாக்க சொல்ல வேண்டியது
தானே."

"அவங்களுக்கு என்னமோ அப்படி ஒரு பொண்ணு பாக்கறது
இழிவா தோணுது."

"நான் பாக்கட்டுங்களா" - சட்டென்று அந்த பெரியவர் கேட்டார்.

"புரியலீங்களே"

"எங்க வீட்டுல என் பொண்ணு ஒண்ணு இருக்கு வந்து பாக்க
றீங்களா."

இந்த முறை திருஞானம் அதிகம் மிரண்டான்.

"என்னங்க திடுக்குன்னு இப்படி பேசறீங்க. நாம நட்பா பழகிகிட்டு
இருக்கோம். உங்க பேருகூட இன்னும் வேகமா என் மனசுல பதியலை.
எங்க வயசாளி வரலே அப்படின்னு தான் நான் கேப்பேனே தவிர,
உங்க பேரு நடேசன்னு தெரிஞ்சும் அதை நான் சொல்றதே இல்லை.
என்னை திடீர்னு இப்படி பொண்ணு பாக்க கூப்பிடறீங்களே?"

"வந்து பாரு திருஞானம். உனக்கு பிடிச்சிருந்தா செய்துக்கோ.
என் பொண்ணு ரொம்ப உழைப்பாளி. அதை நான் உக்காந்து சொல்லிக்
கிட்டு இருக்க முடியாது. என் கடைக்கு வா. வந்து பாரு."

"என்ன கடைங்க உங்களுது."

"பேப்பர் கடைங்க."

"சொல்லவே இல்லீங்களே."

"எதுக்கு சொல்றதுன்னு சும்மா இருந்துட்டேன். உனக்குன்னு
ஆறேழு பேப்பர் கடைக்காரங்க வைச்சிருக்கே. அவங்கள்லாம் உனக்கு
தேவையான நேரத்தில் பேப்பர் ஒழுங்கா கொடுக்கறாங்க. அப்படி
இருக்கச்சொல்ல நான் வந்து தேவையில்லாத, உனக்கு ஒரு பேப்பர்
கடைக்காரனா எதுக்கு அறிமுகமாகணும். உனக்கு நட்பாவே இருந்துட்டு
போயிடலாம்னு சைலண்ட்டா இருந்துட்டேன். ஒருவேளை எனக்கு
பேப்பர் விக்கலைன்னா, உன் தலையில கட்டறதுக்காக நான் யாருன்னு
சொல்லி இருக்கணும். நல்லவேளை என் பேப்பரும் நல்லா விக்குது."

"உங்க டாட்டர் என்ன பண்றாங்க."

"உன்னைமாதிரிதான் பி.ஏ. ஆங்கிலம் படிச்சா. கடையில வந்து
உக்காந்துட்டா. நீ சொன்னியே இப்ப, அந்த வேலையெல்லாம் கடையில
அவதான் செய்யறா. ரொம்ப அழகா இருக்க மாட்டா. சுமாராதான்
இருப்பா. ஆனா பாக்கறதுக்கு பளிச்சுன்னு இருப்பா. நீ வந்து பாரு திரு
ஞானம். நான் சைவ முதலியார். நீ செங்குந்த முதலியார். பெரிய
வித்தியாசமில்லை. நல்லா செய்துக்கலாம். உனக்குப் பிடிச்சிருந்துதுன்னா
நான் வீட்டுக்கு வந்து அம்மாகிட்ட பேசறேன்."



"எவ்வளவு பேப்பர் வியாபாரம் செய்வீங்க ஒரு வாரத்துல."

அவர் தனது டர்ன் ஓவர் சொன்னபோது திருஞானம் அதிசயித்
தான்.

"இவ்வளவு பெரிய வியாபாரம் செய்யறீங்க. பாக்க ரொம்ப
சாதாரணமா இருக்கீங்களேய்யா."

"என்ன பண்றது. வியாபாரம் அதிகம் பண்றோம்கறதுக்காக
ரொம்ப ஆட முடியுமா. சனிக்கிழமை சனிக்கிழமை என்னுடைய
டிரைவர் லீவு கேப்பான். ஆனா ஞாயித்துக்கிழமை வேலைக்கு வந்துரு
வான். சனிக்கிழமையில அவன் நோன்பு இருக்கிறவன். வெங்கடாஜல
பதிக்கு விரதம் இருக்கிறவன். நானும் சனிக்கிழமை அவனுக்கு லீவு
கொடுத்துட்டு ஞாயித்துக்கிழமை வாடான்னு சொல்லிடுவேன். அதனால,
சனிக்கிழமை உன்னை நான் பாக்க வர்றதுனா கார்ல வர முடியற
தில்லை. ஆட்டோவுல வந்துடுறேன். வீட்ல ரெண்டு கார் இருக்கு. ஒரு
ஆட்டோ இருக்கு. கடையில நல்ல வியாபாரம் நடக்குது. சொந்த இடம்.
ஒரு புள்ளை ஜப்பான்ல கம்ப்யூட்டர் கம்பெனியிலே வேலை செய்து
கிட்டு இருக்கான். அவனுக்கு கல்யாணம் ஆயிடிச்சி. அவனுக்குப் பிறகு
ஏழு வருஷம் கழிச்சி இவ பிறந்தா. ஆம்பளை இல்லாத வீடுன்றதால
இவளே எல்லா இடத்துக்கும் ஆம்பளை மாதிரி போவா. அதனால
உடம்புல ஒரு லேசான முரட்டுத்தனம் வந்திடிச்சி. நீ சொன்னியே
தளுக்குப்பொண்ணு. அப்படி இருக்கறவளைக் கண்டா அவளுக்குப்
பிடிக்காது. அப்படி இருக்கவும் தெரியாது. நீ எப்ப வரே திருஞானம்?"

"இன்னிக்கே வரேன் ஸார். சனிக்கிழமை பொண்ணு பாக்கலாமா.
எனக்கு நாள், கிழமைல்லாம் ஒண்ணும் இல்லை ஸார். என்னத்துக்கு
அவ்வளவு தூரம் ஆட்டோவுல போறது. வாங்க என் மோட்டார்
சைக்கிள்ல போலாம்."

இரண்டு பேரும் உச்சிவெய்யிலில் கிளம்பிப் போனார்கள்.

"நான் வரேன்னு உங்க வீட்டுல சொல்லவே இல்லையே ஸார்."

"வேணாம். அவ எப்படி இருக்காளோ அப்புடியே பாரேன்.
சொன்னாக்க டக்குன்னு அவங்கம்மா பட்டு உடுத்தி, பூவை வைச்சு
ஒரு ஓரமா உட்கார வைச்சிருவா. அப்படி பொண்ணு பாக்கறது உனக்கும்
இஷ்டமிருக்காதுன்னு நினைக்கிறேன். நான் இதை ஒரு பொண்ணு பாக்
கற விஷயமாவே யோசிக்காம, சாதாரணமா ரெண்டுபேரும், பேப்பர்
வியாபாரியும், புஸ்தகக்காரனுமாவே போகலாம்."

"எதுக்கு ஸார் இத்தனை நாள் என் கடைக்கு வந்திருந்தீங்க?"

"நீ வியாபாரம் பண்றது நல்லா இருந்துது. நீ கொண்டார்ற
புஸ்தகம்லாம் நல்லா இருந்துது. எனக்கும் ஒரு பதிப்பகம் ஆரம்பிக்க
ணும்னு ஆசை இருந்தது. இந்த மெட்ராஸ்ல ஒரு பதிப்பகத்தை குறைஞ்ச
வருஷத்துலே தபதபன்னு பெரிசா வெளியே கொண்டாந்தது நீதான்னு
எல்லோரும் பேசிக்கிட்டாங்க. நீ என்ன பண்றே. என்னென்ன புக்
வெளியிடறே. எப்படி விக்கறே. அப்படின்னு நோட்டம் பாக்கறதுக்
காகவும் நான் சனிக்கிழமையில உன் கடைக்கு வந்தேன்.

அதுமட்டுமில்லாம நீ போடற புத்தகங்களெல்லாம் படிக்கறதுக்கு
ரொம்ப சுவாரஸ்யமா இருந்தது. தொடர்ந்து அத்தினி புத்தகமும் படிச்
சுட்டு, என்ன மாதிரியான புத்தகங்கள் போடலாம்ற எண்ணத்தை
வளர்த்துக்கறதுக்காகவும் இங்கே வந்தேன்" - அவர் பொய்யின்றி பேசி

திரும்பிப் பார்த்தான்.

அவர் வீட்டு வாசலில் மோட்டார் சைக்கிள் நின்றது. இருவரும் உள்ளே போனார்கள்.

"பாலாம்பிகா எங்கே"

"தெரியலையே" - கடையில் உள்ளவர்கள் அவர் கேள்விக்குப் பதில் சொன்னார்கள்.

"உள்ளே இருக்காளா"

"இல்லீங்க. எங்கயோ இறங்கி போனாங்க. எங்கேன்னு தெரியலை."

"ஸ்கூட்டர்ல போனாளா"

"இல்லீங்க. நடந்து எதிர்ப்பக்கம் போனாங்க."

"எங்கனா கடைக்குப் போனாங்களா?"

"இல்லீங்க. அந்த கம்ப்யூட்டர் சென்டருக்கு போகணும்னு சொல்லிகிட்டு இருந்தாங்க. அதுக்குத்தான் போயிருப்பாங்கன்னு நினைக்கிறேன்."

"கம்ப்யூட்டர் சென்டர்ல என்ன வேலை."

"தெரியலையே."

"கொஞ்சம் இரு திருஞானம். நான் விசாரிச்சுகிட்டு வரேன்" அவர் வீட்டிற்குள் போனார்.

கடை பெரிதாக இருந்தது. இடைவிடாத வியாபார விசாரிப்புகள் வந்து கொண்டிருந்தது. அவர் சொன்னதைவிட அதிகமாகவே வியாபாரம் ஆவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று அவனுக்குத் தெரிந்தது.

அப்போது அங்கே கிட்டத்தட்ட ஒரு பெண் ஓடி வந்தாள். சாதாரணமான காட்டன் புடவையில் இருந்தாள். ஒற்றைப்பின்னல் பின்னியிருந்தாள். நெற்றிக்கு திலகமிட்டு இருந்தாள். கண்களில் மையில்லாமல், காதுகளில் வெறும் தோடு மட்டும் போட்டஇருந்தாள். இடது கையில் இரண்டு வளைகளும், வலது கையில் ஒரு வாட்ச்சும் இருந்தது. ஹவாய் செப்பலை கடைவாசலில் கழட்டிவிட்டு தாவி ஏறினாள்.

"எடுத்துடு. எல்லா பேப்பரையும் எடுத்துடு. கொண்டுபோய் பின்னாடி அடுக்கி வை."

"என்னம்மா திடீர்னு இப்படி சொல்றீங்க?"

"பேப்பர் விலை ஏறப்போகுது. அப்பாவைக் கூப்பிடு. அப்பா எங்க இருக்காரு."

இன்டர்காமில் அப்பாவைக் கூப்பிட்டாள். அப்பா கீழிறங்கி வந்தார். அப்பா வந்தவுடன் அவரை பேசவிடாமல் எதிரே போய் நின்று கொண்டாள்.

"பேப்பர் விலை அதிகரிக்கப் போகுதுப்பா. பிரிட்டன்ல ரெண்டு குரூப் ஸ்ட்ரைக் பண்ணப்போறாங்க. அப்படி ஸ்ட்ரைக் இன்னைக்கு சாயந்திரம் ஆரம்பிச்சுடுச்சின்னா, நாளைக்கு காத்தால பேப்பர் விலை ஜாஸ்தியாயிடும்.

ஸ்ட்ரைக் நிச்சயமா நடக்கும்னு பிபிசியில சொன்னான். நான் எதிர்ல இருக்கிற இன்டர்நெட் சென்டர்ல போய் விசாரிச்சுட்டு வந்தேன். அந்த பேப்பர்மில்லோட காண்டாக்ட் பண்ணேன் 'ஸ்ட்ரைக்' அப்படின்னு ஆன்சர் வருது. ஸ்ட்ரைக் ஆரம்பிச்சிடுச்சி. ஸ்ட்ரைக்



ஆரம்பிச்சதை பிபிசி நியூஸ்ல இன்னும் சொல்லலை. ஆக, இதுதான் சரியான நேரம். எல்லா பேப்பரும் உள்ளே எடுத்து வைச்சுடுங்க. நியூஸ் பேப்பர் வாங்கணும்னு சொன்னீங்களே. அவங்களுக்கு செக் கொடுத்துட்டீங்களா."

"மூணு ரீமுக்கு கொடுத்திருக்கேன்மா."

"இன்னும் ஒரு மூணு ரீம் வாங்கிடலாம். டக்குன்னு இன்னொரு செக்ல கையெழுத்துப் போடுங்க" - அவள் அப்பாவிடம் கையெழுத்துப் போட்ட செக்கை வாங்கிக்கொண்டு, அதில் பணம் குறித்து எதுவும் எழுதாமல் ஆட்டோ ஏறி பறந்தாள்.

"இதுதான் பொண்ணு திருஞானம். இதுதான் கடையே மூச்சா உக்காந்திருக்கு."

அவர் திருஞானத்திற்கு வீடு சுற்றி காண்பித்தார். மனைவிக்கு அறிமுகப்படுத்தினார்.

மாடியில் வீடு விசாலமாக இருந்தது. கீழே கோடவுன்கள் உறுதியாகக் கட்டப்பட்டிருந்தன. காற்றும், தண்ணீரும் உள்ளே அதிகம் புகாதபடி அழுத்தமான கண்ணாடி ஜன்னல்களும், மர ஷெல்ப்களுமாய் இருந்தன. இரண்டாவது கோடவுனில் பேப்பர்கள் வேகமாய் அடுக்கப்பட்ட முதல் கோடவுன் சுத்தமாய் காலியாயிற்று. அதை பெருக்கத் துவங்கினார்கள்.

திருஞானமும், நடேசனும் வாசலில் போய் நின்றுகொண்டார்கள்.

அவள் ஆட்டோவில் வந்து இறங்கினாள். பின்னாலேயே டெம்போ லாரி வந்தது.

"அப்பா ஒரு நானூறு ரூபா கொடுங்க"- என்று நடேசனிடம் வந்து நின்றாள். நானூறு ரூபாய் வாங்கி டெம்போவிற்கு கொடுத்தாள். ஆறு ரீம் பேப்பர் மறுபடியும் உள்ளே அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட பேப்பரை பின்பக்கம் உருட்டிக்கொண்டு போனார்கள்.

"ஒரு வேளை விலை ஏறலைன்னு வைச்சுக்குங்க. தேவையில்லாம முடங்கினா மாதிரி ஆயிடும்" - அவர் திருஞானத்திடம் சொன்னார்.

"ரொம்ப நிச்சயமா விலை ஏறும்பா" என்று அவள் சொன்னாள்.

"இன்னைக்கு நைட் நாம சாப்பிட்டு முடிக்கறதுக்குள்ளே நமக்கு என்கொயரி வந்துடும். பிபிசியிலே சொல்லிட்டா போதும். அத்தனை பேரும் பேப்பர் வேணும்னு கேக்க ஆரம்பிச்சிடுவாங்க."

"சாப்பிட்டியா பாலாம்பிகா."

"இல்லைப்பா. வா சாப்பிடலாம்."

திருஞானம் டைனிங் டேபிளில் உட்கார்ந்து அவர்களோடு சாப்பிட்டான். நடேசன் பாலாம்பிகாவுக்கு திருஞானத்தை அறிமுகப்படுத்தினார். அவள் எந்த கூச்சமுமில்லாமல், எந்த சங்கோஜமுமில்லாமல் மிக எளிமையாய் பேசினாள். அவன் பதிப்பகத்தின் புத்தகங்களைப் பாராட்டினாள். குறைகளை விளக்கிச் சொன்னாள்.

"தயவுசெய்து புக்குக்கு ஜாக்கெட் போடாதீங்க. ரேப்பர்ல சலபன் ஒட்டி, ரேப்பர்லய படம் இருக்கற மாதிரி பண்ணுங்க. அதான் நல்லா இருக்கும். முதுகு பெரிசா இருந்தா பைண்டிங்கை ரெண்டு தடவை பண்ணச்சொல்லுங்க. நல்லா காயவைக்கச் சொல்லுங்க. உங்க புக்ஸ்ல, பெரிய புக்கெல்லாம் பைண்டிங் லூஸாதான் இருக்கு. தயவுசெய்து கொரியன் பேப்பர் வாங்காதீங்க. ஒரு வருஷத்துக்கு அப்புறம் ஒடியும். நல்ல

பேப்பர் வேணும்னா ஜப்பான் பேப்பர் வாங்குங்க. இல்ல அமெரிக்கன் பேப்பர் வாங்குங்க. பிரிட்டிஷ் பேப்பர் கூட சுமாரான விஷயம்தான். அதுக்கு நம்ம ஊர் பேப்பரே ரொம்ப நல்லாருக்கும். நீங்க ஏன் கண்ட இடத்திலே பேப்பர் வாங்கறீங்க. எங்ககிட்ட வாங்கறதுதானே. நாங்க கிரெடிட்ல தர்றோம் சார்'' என்று உற்சாகமாகப் பேசினாள்.

"பாலாம்பிகா. அவரை பேப்பர் வாங்கறதுக்காக நான் கூட்டிக் கிட்டு வரலை உன்னைப் பெண் பாக்கறதுக்காக கூட்டிக்கிட்டு வந்திருக் கேன்" அப்பா மெல்ல சொன்னதும் திடுக்கிட்டாள். பளிச்சென்று வெட்கப்பட்டாள்.

அந்த வெட்கம் திருஞானத்திற்குப் பிடித்திருந்தது. வெட்கம் என்பது மின்னலைப்போல சில நொடிகளே இருக்க வேண்டும். வெகு நேரம் வெட்கப்படுகிற பெண் ஒரு வேடிக்கைப் பொருளாக இருப்பாளே தவிர, அவளை வேறொன்றும் விசாரிக்கத் தோன்றாது. பாலாம்பிகா முகத்தில் வெட்கம் பளிச்சென்று மின்னிவிட்டு போயிற்று. சுதாரித்துக் கொண்டாள்.

"மன்னிச்சுக்குங்க. நீங்க ஏதோ பேப்பர் வாங்கறது வந்திருக்கீங் கன்னு உங்ககிட்டே நிறைய பேசிட்டேன். உங்களைப்பத்தி அப்பா நிறைய சொல்வார். உங்க டைட்டில்ஸ் ஒண்ணுவிடாம அப்பா படிச் சிருக்கார். கிட்டத்தட்ட முக்கால் பங்கு நானும் படிச்சுட்டேன். உங்க மருத்துவ நூல்கள்லாம் ரொம்ப நல்லாருக்கு. சமையல் குறிப்புகூட, அந்த சாலட் செய்யும் முறை நான் முதல்ல ஏனோதானோன்னுதான் படிச்சேன். அப்புறம் ரெண்டு சாலட் செய்து பார்த்தேன். சாப்பிட்டு பார்த்தேன். ரொம்ப நல்லாயிருந்துச்சி. இன்னைக்கு நீங்க உக்காந்துட் டீங்களேன்னு நானும் சாப்பாட்டு உக்காந்துட்டேன். இல்லைன்னா நான் மத்தியானம் சாலட்தான் சாப்பிடற வழக்கம்."

"பசி தாங்குங்களா"

"எல்லாரும் கேக்கற முதல் கேள்வி இதுதான். நல்லா தாங்கும் நாளைலேர்ந்து ஆரம்பிங்க."

அவர்கள் உணவு பற்றியும், உடைபற்றியும் பழக்க வழக்கங்கள் பற்றியும் பேசினார்கள். அவன் இடையில் கடைக்கு இரண்டு முறை டெலிபோன் செய்து என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள பிற்பகல் நான்கு மணிக்கு அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான். வாசற் படியில் இறங்கினான். மோட்டார் சைக்கிளுக்கு அருகே வந்தான். நடேச னும் வந்தார்.

"உங்க பொண்ணை புடிச்சிருக்கு சார். இவங்களை திருமணம் செய்துக்கணும்னு ஆசையா இருக்கு. ஆனா என்னுடைய சம்மதம் மட்டும் போதாதுன்னு நினைக்கிறேன். வீட்டுக்கு ஒரு வார்த்தை சொல்ல ணும். எங்கம்மாவுக்கு பிடிக்கணும். அதனால நீங்க முறைப்படி வந்து அம்மாகிட்ட பேசுங்க. நான் மறுபடியும் அம்மாவோட வரேன். அம்மா வரும்போது இவங்க வீட்டோடய இருக்கட்டும். ஒரு ஞாயித்துக் கிழமையா இருந்தா ரொம்ப நல்லாருக்கும்."

"நீ சூசகமா சொல்றது புரியுது திருஞானம். அம்மா வரும்போது. பேப்பர் வாங்க போயிட்டு வரவேண்டாம். டெலிபோன்ல வியாபாரம் பண்ணவேண்டாம்னு சொல்ற."

"நான் அவ்வளவு ஸ்ட்ரிக்டா சொல்லலை சார்."





"ஆமாம். அப்படி இருந்தாதான் நல்லது. அப்படி இருந்தாதான் அம்மா மாதிரி இருக்கறவங்களுக்கு புடிக்கும். நான் புதன்கிழமை வரேன்" நடேசன் கைகூப்பினார்.

அவன் விடைபெற்றுக்கொண்டு வந்தான். அவன் மனதிற்குள் பாலாம்பிகாவின் அசைவுகளும், கேள்விகளும், விழி உயர்த்தல்களும் மெல்லிய சிரிப்புகளும் அடிக்கடி தோன்றிக்கொண்டே இருந்தன. அவன் கடைக்கு வந்து கணக்கு பார்க்க ஆரம்பித்த ஒரு கால்மணி நேரத்தில் டெலிபோன் வந்தது. பாலாம்பிகா பேசினாள்.

"என்னங்க போய் சேர்ந்தீங்களா?"

"சேர்ந்துட்டேனுங்க. ஏன் கேக்கறீங்க?"

"ஒரு போன் பண்ணவேண்டாமா?"

"எதுக்குங்க?"

"போன் பண்றதுன்றது ஒரு மரியாதை. வந்து சேர்ந்துட்டேன்னு சொன்னாக்கா எங்களுக்கு ஒரு நிம்மதியா இருக்கும். அப்பா எப்பவும் அப்படித்தான் பண்ணுவாரு."

"நீங்க சொல்றது நல்லாதான் இருக்கு. இந்த இடத்துல இன்னார் இருக்காருன்னு தெரிஞ்சுட்டா தொடர்பு கொள்றதுக்கு நல்லாதானே இருக்கும். இனிமே இந்த பழக்கத்தை நானும் கத்துக்கறேன்" என்று திருஞானம் சொன்னான்.

"பேப்பர் விலை ஏறிடுச்சிங்க. பாத்தீங்களா?"

"பாக்கலையே. எவ்ளோ ஏறியிருக்கு?"

"ரீமுக்கு நூற்று நாப்பது ரூபா."

"அடேயப்பா"

"உங்க பேப்பர் ஆளுங்ககிட்ட கேளுங்க. யாருக்கு விவரம் தெரியாதோ அவங்ககிட்ட உடனடியா செக் கொடுத்து ஒரு பத்து ரீம் வாங்கிப் போடுங்க."

அவனுடைய வியாபாரிகள் ஏழுபேரில் மூன்று பேருக்கே விலை உயர்வு பற்றி தெரிந்திருந்தது. ஒருவர் சந்தேகமாகக் கேட்டார். மற்றவர்களுக்குத் தெரியவில்லை. தெரியாதவர்களிடம் காசோலை அனுப்பி பேப்பர் அனுப்புமாறு அவன் உத்தரவிட்டான். நடேசனால், நடேசனுடைய மகள் பாலாம்பிகாவால், விலைஉயர்வுக்கு முன்பு அவனுடைய கோடவுனில் பேப்பர்கள் வந்து இறங்கின. கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபாய் நஷ்டம் பாலாம்பிகாவால் தவிர்க்கப்பட்டதை அவன் உணர்ந்தான்.

"நடேசன்னு ஒருத்தர் உன்னை பாக்க வருவாரும்மா" அம்மாவிடம் திருஞானம் முன்னெச்சரிக்கையாய் பேசினான்.

"யாருடா அவரு"

"அப்பப்ப கடைக்கு வருவாரு. உன்னைப் பார்த்து பேசணுமாரு."

"எதுக்கு என்னைப்பாத்து பேசணும்"

"என் கல்யாண விஷயமா உன்கிட்ட வந்து கேப்பாருன்னு நினைக்கிறேன். அவருக்கு ஏதோ பொண்ணு இருக்குன்னு நினைக்கிறேன்" அவன் பட்டும் படாததுமாய் பதில் சொன்னான்.

"எப்ப வருவாரு"

"ஒரு பதினோரு மணிக்கு வரேன்னு சொல்லிருக்காரு."



"நான் மட்டும் தனியா இருப்பேனடா"

"நான் வேணா இருக்கட்டுமா"

"வேணா. நீ இருக்க வேணா. நான் உன் தங்கச்சியை வரவழைக்கிறேன்"

அம்மா உடனடியாய் தங்கைக்கு போன் செய்தாள். திருஞானத்தால் அதை தடுக்கவும் முடியவில்லை. அதற்கு மாறு சொல்லவும் முடியவில்லை.

பதினோரு மணிக்கு நடேசன் வந்தார்.

"எங்க பையனோட எப்படி பழக்கம். பேப்பர் விக்கறதுதானலயா" அம்மா ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"இல்லீங்க. இதுவரைக்கும் ஒரு துண்டு பேப்பர்கூட அவரு நம்ம கடையில வாங்கினதில்லை."

"பிறகு"

"நான் வருவேன். வந்து கொஞ்சம் புஸ்தகம் வாங்குவேன். அப்ப பேசி பழகியிருக்கோம். அவ்வளவுதான்"

"என்ன செய்வீங்க. எவ்ளோ போடுவீங்க" தாரிணி தடுக்கென்று கேட்டாள்.

"அதை அப்புறம் பேசிக்கலாம்மா. முதல்ல வந்து பொண்ணு பாருங்க."

"அந்த ரேஞ்சு தெரிஞ்சாதான் வரமுடியும். பொண்ணு பார்த்துட்டு பிடிக்கலைன்னு வர்றதுக்கு என்னன்னு தெரிஞ்சிகிட்டு போறது நல்லது இல்லையா" தாரிணி, பெரிய மனுஷி போல் பேசினாள்.

"எவ்வளவு வேணா செய்யலாம்மா"

"அறுபது பவுன் செய்யறேன்னு சொல்லி ஒருத்தர் வந்தாங்க. நாங்க வேணான்னு சொல்லிட்டோம்"

"ஏம்மா அப்படி சொன்னீங்க"

"எங்களுக்கு பொண்ணு பிடிக்கலை"

"ஏதாவது காரணம் இருக்கும் இல்லே"

"பொண்ணு ரொம்ப அலட்டலா இருந்தது. ரொம்ப தளுக்கா இருந்தது. ராணி மாதிரி இருக்கற பொண்ணை வெச்சிகிட்டு நாங்க எப்படி குடித்தனம் பண்ண முடியும் சொல்லுங்க" மறுபடியும் தாரிணி வேஷமிட்டுப் பேசினாள்.

நடேசன் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

"என் குழந்தை கொஞ்சம் சகஜமா இருப்பாம்மா. சாதாரணமா நடந்துக்குவா. அழகின்னு சொல்ல முடியாது. அதுக்காக அவலட்சணமும் இல்ல. வந்து பொண்ணு பாத்தீங்கன்னா அறுபது என்ன, எழுபது சவரன் கூட போடலாம்"

"எழுபது சவரனா போடுவீங்க"

"முதல்ல அது முக்கியமான்னு பாருங்க. தங்க நகை வாங்கி என்ன பண்ணப்போறோம். அதுல போய் வீணா காசை முடக்கறதுக்கு பேப்பர் வாங்கி போடலாம்லே" - அவர் சாதாரணமாக பேசினார்.

அவர்கள் இருவருக்கும் மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

"நாங்க, திருஞானத்தை ஒரு வார்த்தை கேட்டுக்கறோம். பிறகு உங்க வீட்டுக்கு வர்றோம்" என்று சொன்னார்கள்.

திருஞானம் அன்று இரவு 'சரி'யென்று சொன்னான். அவர்கள் அடுத்த ஞாயிறு பெண் பார்க்கப் போகலாம் என்று முடிவு செய்தார்கள். பெண் பார்க்கப் போனார்கள்.

அவள் சோபாவுக்கு எதிரே தனித்த நாற்காலியில் உட்கார்ந்தாள். உட்கார்ந்தபடியே தாரிணியைப் பார்த்துக் கும்பிட்டாள். 'ரொம்ப அழகா இருக்கீங்க' என்று வாயார பாராட்டினாள். தாரிணிக்கு சட்டென்று ஒரு கர்வம் பற்றிக் கொண்டது.

"நீங்க கூட கொஞ்சம் மேக்கப் பண்ணிகிட்டா நல்லா இருப்பீங்க" ஏன் ஐப்ரோ கரெக்ட் பண்ணிக்கவே இல்லை"

"நேரமே இல்லைங்க. கடை வேலையே கரெக்டா இருக்கு"

"நீங்கதான் கடைய கவனிச்சிக்கிறீங்களா"

"கடை, வீடு ரெண்டுமே நான்தாங்க கவனிச்சுக்கறேன்"

"யார் சமைப்பா"

"பாதி நேரம் அம்மா சமைப்பாங்க. அம்மாவால முடியலையா நான் சமைப்பேன்"

"ரெண்டும் கவனிச்சிக்கறதுக்கு கஷ்டமா இல்லை"

"ரெண்டும் நம்ம விஷயம்தானுங்களே. எப்படி கஷ்டம்னு சொல்ல முடியும் செய்துதானே ஆகணும்"

"சமையலுக்கு ஆள் போட்டுக்கறதுதானே"

"ஆள் போட்டு சமைச்சு அதை நம்மாலே சாப்பிட முடியும்னு தோணுதா. நம்ம வீட்டு சமையலை நாமதான் செய்யணும்."

"அப்ப நல்லா சமைப்பீங்கன்னு சொல்லுங்க"

"சுமாராதாங்க சமைப்பேன். நல்லா சமைக்கத் தெரியாது. நிறைய பலகாரங்கள் செய்யத் தெரியாது. சாம்பார், குழம்பு, ரசம், கறி, கூட்டு இதை செய்துருவேனே தவிர, முறுக்கு சுட்டு, பணியாரம் செய்யுன்னா எனக்கு கொஞ்சம்கூட தெரியாது."

"அதுவும் தெரிஞ்சிக்கணும். இல்லையா"

"அதுக்கு ஆள்வைச்சு பண்ணிக்கலாங்க. இதை நாமளேதான் செய்யணும்" - என்று தாரிணியை சட்டென்று மடக்கினாள். தாரிணிக்கு முகம் சுருங்கிப் போயிற்று.

"முகத்துக்கு நீங்க ஆயில் பேலன்ஸ் போடலாமே"

"ஆமாங்க. வாங்கி வைச்சிருக்கேன். போடணும்" - அவள் மிருதுவாகச் சொன்னாள்.

"நாங்க பூ வாங்கிகிட்டு வந்திருக்கோம். அதை தலையில வைச்சுக்கயேன்மா" அம்மா சொன்னாள்.

"இருக்குங்களே. இந்த பூ போதும்" என்று பாலாம்பிகா மறுத்தாள்.

"அரைமுழம் கூட இருக்காது போல இருக்கே"

"நிறைய பூ தலையில வைச்சுகிட்டா இழுக்குங்க. எனக்கு கொஞ்சமா பூ வைக்கறது பிடிக்கும். அதுதான் வேலைசெய்யறதுக்கு வாட்டம்"

"எந்நேரமும் வேலைதான் செய்வீங்களா. வெளிய வாசலுக்கு போகும்போது நிறைய பூ வைச்சுக்க மாட்டீங்களா" - தாரிணி கேட்டாள்.



"இல்லீங்க. வெளிய வாசலுக்கு போகும்போதும் அரைமுழம் பூதான் வைச்சுக்கறது. பவுடர் போடறதே இல்லை" - பாலாம்பிகா தன்னிலை விளக்கம் கொடுத்தாள்.

"திருஞானத்துக்கு பிடிச்சிருந்தா நாங்க மேற்கொண்டு பேசறோம்" என்று தாரிணி எழுந்தாள். உடன் அம்மாவும் எழ வேண்டியதாயிற்று.

அவர்கள் வீடு முழுக்கச் சுற்றிப்பார்த்தார்கள். கீழிறங்கினார்கள்.

"என்னடா உனக்குப் பிடிச்சிருக்கா" - அம்மா படியிறங்கும்போது கேட்டாள்.

"ரொம்ப பிடிச்சிருக்கும்மா" - திருஞானம் சொன்னான். தாரிணி திகைத்தாள். கார் ஏறி அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

"குரங்கு குசலா போல இருக்கா. இவனைப் போய் பிடிச்சிருக்குன்னு சொல்றியே. நான் பாத்த பொண்ணை வேணாம்னு சொல்லிட்டு கரெக்டா தேவாங்கு மாதிரி இருக்கற ஒரு பொண்ணை புடிச்சிருக்குன்னு சொல்றான் பாரேன். வேணும்னே செய்றான்மா"

"இத பார் நீ ஒரு பொண்ணு, இன்னொரு பொண்ணைபத்தி அப்படி பேசவே பேசாதே. உன்னை மாதிரி புசுபுசுன்னு தலைமுடி இல்லாம இருக்கலாம். உன்னை மாதிரி நல்லா டிரஸ் பண்ணாத இருக்கலாம். ஆனா அந்த பொண்ணு லட்சணமா இருக்கா. அந்த லட்சணம் போதும். இதுக்காக மோசமான வார்த்தையெல்லாம் அவங்க மேல விடாத. முதல்ல அவங்க யாருன்னு தெரிஞ்சுக்க. அவங்க என் கடைக்கு அடிக்கடி வர்றவங்க. அவங்க என் பிரெண்டு. அந்த எண்ணத்தோட எது பேசினாலும் பேசு" திருஞானம் அவளை அதட்டி அடக்கினான்.

"எனக்கு அந்த பெண்ணைப் பிடிக்கலைப்பா"

"எனக்கு பிடிச்சிருக்கு"

"அப்ப நீ பண்ணிக்க. என்னை ஒண்ணும் கேக்காத."

"உன்னைக் கேட்டு இங்க என்ன நடக்கணும் தாரிணி. உன்னை கேக்க வேண்டியது உன் புருஷன். உன் புருஷனைக் கேக்க வேண்டியது நீ. எனக்கு இந்த பொண்ணைப் பிடிச்சிருக்கு, நீ என்னம்மா சொல்றே?" - திருஞானம் கேட்டான்.

அம்மா பேசாமல் இருந்தாள்.

"சொல்லேன் உனக்குப் பிடிச்சிருக்கா, பிடிக்கலையா" தாரிணி கோபமாகக் கத்தினாள்.

"நல்லாதான் இருக்கு" - அம்மா சொன்னாள்.

"அப்புறம் என்னம்மா. அவரை வந்து பேசச் சொல்றேன்" திருஞானம் பளிச்சென்று முடித்துவிட்டு வெளியே போனான்.

அம்மாவும், பெண்ணும் அவன் காலில் செருப்பு மாட்டிக் கொண்டு வெளியே போவதற்குள், அறைக்குள் புகுந்து குசுகுசுவென்று பேசத்துவங்கினார்கள். அம்மாவை தாரிணி ஏதோ ஒருவிதமாய் மிரட்டத் துவங்கினாள்.

"டேய், எழுபது சவரன் பண்ணுவாங்களாடா?" அம்மா டெலிபோனில் கேட்டாள்.

"தெரியலையே"

"எழுபது சவரன் பண்றேன்னு சொல்விட்டு அப்புறம் பண்ண

"எழுபது சவரன் முக்கியமில்லம்மா. அந்தப்பொண்ணை எனக்கு பிடிச்சிருக்கு. அப்படி பாரு"

"என்னடா பிடிச்சிருக்கு. பிடிச்சிருக்குன்னே பேசறானே" அம்மா அலுப்பான குரலில் சொல்ல, இப்போது தாரிணியில் குரல் டெலிபோனில் ஒலித்தது.

"அந்தப்பொண்ணை நீ லவ் பண்றியா" தாரிணி அதட்டலாகக் கேட்டாள். "இதுக்கு முன்னாடியே பழக்கமுண்டா" என்று விசாரித்தாள்.

"ஒருதட்வை பாத்திருக்கேன் தாரிணி. லவ்வெல்லாம் ஒண்ணும் இல்லை. நம்ம பதிப்பகம் நடத்தறதுக்கு அந்தமாதிரி பொண்ணுங்கதான் ரைட். நீ பார்தத பொண்ணை வைச்சுக்கிட்டு என்னால குடித்தனமும் பண்ணமுடியாது. பதிப்பகமும் நடத்தமுடியாது. இந்தப்பொண்ணு தனி ஒரு ஆளா பேப்பர் கடை நடத்துது. பேப்பர் பத்தி அத்தினி சமாச்சாரமும் தெரிஞ்சுகிட்டிருக்கு. உலக மார்க்கெட் முழுக்க விரல் நுனியில இருக்கு. ஒரு பேப்பர் கடைக்காரர் பொண்ணும், ஒரு பதிப்பகம் நடத்தற பையனும் ஒண்ண்ா சேர்ந்தா நல்லா இருக்கலாம். இதுதான் என் எண்ணம். மற்றபடி பெண் நல்லா சமைக்குதா, நல்லா உடுத்துதா, புருவம் வளைவா இருக்கா தலைமுடி அதிகமாக இருக்கா. தலைநிறைய மல்லிகைப்பூ வைச்சிருக்கா. நகம் வெட்டிருக்கா இதெல்லாம் நான் பாக்கலை. எனக்குத் தேவை கெட்டிக்காரப் பொண்டாட்டி. உனக்குப் புரியுதா. உனக்குப் புரியலைன்னா விட்டுடு. என் கல்யாணத்தை நான் பாத்துக்குறேன்"

திருஞானம் கடுமையாக கூற, அம்மாவும், பெண்ணும் அதிகநேரம் தனிமையில் பேசத் துவங்கினார்கள். தாரிணி அம்மாவை மூளைச்சலவை செய்யத் துவங்கினாள்.

"இன்னொரு தடவை போய் நாங்க பார்த்துட்டு வரலாமாடா" அம்மா டெலிபோனில் கேட்டாள்.

"நீ மட்டும் போறியா. அவளும் போறாளா"

"அவ இல்லாம நான் மட்டும் எப்படிறா போவேன்"

"நீ மட்டும் போறதா இருந்தா போ. தாரிணி வரவேண்டாம். தாரிணி போய் எதாவது எக்குதப்பா பேச, அது எனக்கு கஷ்டத்தைக் கொடுக்கும்"

"தாரிணி என்ன எக்குதப்பா பேசற பொண்ணா"

"அது என்கிட்டயே தப்பா பேசுது. அங்கபோய் தப்பா பேசாதுன்னு என்ன நிச்சயம்"

"தாரிணி, நீ இல்லாத போ சொல்றாண்டி" அம்மா டெலிபோனை மூடாமல் பேசினாள். தாரிணி அங்கே டெலிபோனை பிடுங்கி சடக்கென்று கோபமாக வைப்பது தெரிந்தது.

ஐந்துநிமிடம் கழித்து அம்மா மறுபடியும் போன் செய்தாள். 'நானும் போவடா' என்று சொன்னாள்.

திருஞானம் கவலையானான்.

"என் முகம் நல்லா இல்லையே. சோர்வா இருக்கியே. என்ன காரணம் திருஞானம்" - நடேசன் எதிரே வந்து உட்கார்ந்தார்.



"வீட்டில கொஞ்சம் பிரச்சனைங்க"

"நான் காரணமாயிட்டேனோ"

"இல்லீங்க. அவங்க திமிரு தான் எல்லாத்துக்கும் காரணமா இருக்கு"

"என்ன...என்ன சொல்றாங்க அம்மா"

"அம்மாவுக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. அம்மாவை இத்தச் சொல்லு. அத்தச் சொல்லுன்னு தங்கச்சி திசைதிருப்பறா"

"என்ன பிரச்சனைன்னு தெளிவா சொல்லு திருஞானம்"

"தான் பார்த்த பொண்ணை வேணான்னு சொல்லிட்டே. இந்தப் பொண்ணை பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டே. இது லவ்வா. முன்னாடியே காண்டாக்ட் உண்டா அப்படின்னு முட்டாள்தனமா கேக்கறா. எழுபது சவரன் நகை போடறேன்னு சொல்லிட்டீங்க இல்லே. அதையே திரும்பத் திரும்ப அம்மாவும் பொண்ணும் பேசிக்கிட்டிருக்காங்க. எனக்கு அது முக்கியமில்லே அப்படின்னு சொன்னாலும் அவங்களுக்குப் புரியலை. எழுபது சவரன் ஜோட்டே ஆகணும் அப்படின்னு சொல்றாங்க"

"போட்டுறலாம் திருஞானம். அது ஒண்ணும் பெரிசில்லை"

"ஐயா நீங்க சும்மா இருங்க. காசை கொண்டுபோய் இந்த நேரம் எவனாவது தங்கத்துல கொட்டுவானா? தங்கத்தைவிட பெரிய விஷயமா இருக்கு பேப்பர். அதிலதான் காசை போடணுமே தவிர, முட்டாள் தனமா நாம தங்கத்துல காசை செலவு பண்ணக்கூடாது. திருமணம் கூட பெரிசா செய்ய வேண்டியதில்லைங்க. வெறும் ரிசப்ஷன் வைச்சா போதும்றது என்னோட அபிப்ராயம்".

"இதுல ஒண்ணும் நீங்க பெரிசா கவனம் செலுத்தாதீங்க தம்பி. அம்மா எப்படி ஆசைப்படறாங்களோ அப்படி திருமணத்தை நடத்த வேண்டியது என்னுடைய கடமை. தங்கச்சி செல்லமா வளர்ந்த பொண்ணு. செல்லமா வாக்கப்பட்ட பொண்ணு. எல்லாருக்கும் இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்காது. வாழ்க்கையினுடைய வலி, வேதனை அதிகம் தெரியாததுனால கொஞ்சம் துடுக்கா இருக்கு. போகப்போக சரியாப் போயிடும். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு நேரத்துல பாடம் கிடைக்கும். உங்க தங்கச்சி வாழ்க்கையைப் பத்தி கொஞ்சம் லேட்டா தெரிஞ்சிக்கப் போகுது. அவ்வளவுதான். இதில நீங்க அதிகம் கலந்துக்காம என்கிட்ட விட்ருங்க. அம்மாவுக்கு சம்மதமா அப்படின்ற விஷயம் தான் இப்ப முக்கியம்" அனுபவத் தெளிவோடு நடேசன் பேசினார்.

அம்மா சம்மதம் என்று சொன்னாள். நல்லபடி திருமணம் நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டாள். அந்தப்பெண்ணை மறுபடியும் பார்க்க வேண்டும் என்று ஆவல் தெரிவித்தாள்.

தங்கை அவளுடைய வீட்டிற்கு போயிருந்த நேரத்தில், பாலாம்பிகா வந்து இறங்கினாள். அம்மாவை நமஸ்கரித்தாள். 'நல்லா இருக்குங்க வீடு' என்று சுற்றிவந்தாள். காபி குடித்தாள். போட்டோ ஆல்பம் பார்த்தாள்.

"இதுதான் உங்க பொண்ணா. கல்யாணத்துக்கு முன்னாடி எடுத்த போட்டோவா. யப்பா. சினிமா ஸ்டார் மாதிரி இருக்காங்க. புருஷன் உள்ளங்கையில வைச்சு தாங்கறாராமே. தாங்காத என்ன செய்வாங்க

இல்ல. எனக்கு அவங்களை ரொம்ப பிடிச்சிருக்கு" புகழ்ந்தாள்.

அம்மாவின் மனம் சந்தோஷமாகியது. அவர்கள் வீடு, வாசலைப் பற்றி அவளிடம் விசாரிக்க, அவர்கள் இவர்களைவிட நிச்சயம் இரண்டு மடங்காவது உயர்ந்தவர்கள் என்று தெரிந்துபோயிற்று. பரம்பரை பணக்காரர்கள் என்பது தெள்ளத்தெளிவாய் விளங்கியது. ஆனால் காசு இருந்தும், கர்வமில்லாத ஆட்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அம்மா புரிந்துகொண்டாள்.

"என் பொண்ணுக்கு கொஞ்சம் பேசத்தெரியாது. தான்தான் எல்லாம் அப்படிங்கிற ஒரு சின்ன அகம்பாவமும் இருக்கு. அப்பாகிட்ட, இதை பெரிசா மதிக்க வேண்டாம்னு சொல்லிடு."

"இந்தக் குடித்தனத்துல எத்தனை பேர் வீட்டுல கல்யாணம், நாம எவ்ளோ பேருக்கு போயிருப்போம். அவங்கள்லாம் நம்ம வீட்டு கல்யாணத்துக்கு வரவேண்டாமா. அதனாலதான் கொஞ்சம் விமரிசையா நடத்தணும்னு ஆசை. இந்தப்புள்ளை ஒண்டியா நின்னு வியாபாரத்தை தூக்கி நிறுத்தியிருக்கு. அவனுக்கு நாலுபேர் வந்து ஆசீர்வாதம் பண்ண வேண்டாமா. அதனாலதான் பெரிய சத்திரம் வேணும்னு கேட்டேன்" அம்மா பவ்யமாகச் சொன்னாள்.

அவர்கள் சகலத்திற்கும் ஒத்துக்கொண்டார்கள். திருமணம் பெரிய சத்திரத்தில் கோலாகலமாய் எல்லாவித ஆடம்பரங்களோடும் நடந்தது. பாலாம்பிகா திருஞானத்திற்கு மனைவியானாள்.




"திருஞானம் சார். நாம விவாக மந்திரம்னு புத்தகம் போட்டிருக்கோம். ஆறு பதிப்பு வெளிவந்திருக்கு. ஞாபகமிருக்கா?" மேனேஜர் ஐயர் கேள்வி கேட்டார்.

"இருக்கே" திருஞானம் பதில் சொன்னான்.

"அதைப் படிச்சுருக்கேளா"

"முழுக்கப் படிச்சதில்லே. சில விஷயங்கள் படிச்சிருக்கேன். என்ன சமாச்சாரம்"

"அதில கடைசியிலே கர்ப்பதானம்னு ஒரு விஷயம் போட்டிருக்கான். அதைமட்டும் கொடுக்கறேன். கொஞ்சம் படிங்களேன்"

"என்ன சார் சாயந்திரம் ரிசப்ஷன் இருக்கு. இப்ப போய்..."

"பதினைஞ்சு நிமிஷத்தில படிச்சுடலாம். சிரமம் பார்க்காம படிங்க" மேனேஜர் ஐயர் அவனுக்கு ஜெம் கிளிப்பால் இருபத்துமூன்று பக்கத்தை பிணைத்துக் கொடுத்தார்.

திருஞானம் அதைப்புரட்ட ஆரம்பித்தான். கர்ப்பதானம் அல்லது சாந்தி முகூர்த்தம் என்கிற பெயரில் ஒரு தனி அத்தியாயம் எழுதப்



பட்டிருந்தது.

'தம்பதிகள் எடுத்தவுடனேயே கலவியில் ஈடுபடுவது நல்லதல்ல. சிலசமயம் அது ஆணுக்கும், பலசமயங்களில் அது பெண்ணுக்கும் மிகுந்த தொந்தரவைக் கொடுக்கும். வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே பயத்தையும், வெறுப்பையும், அருவெறுப்பையும் உண்டுபண்ணக்கூடிய விஷயமாக கூடல் போய்விடும். எனவே, நமது முன்னோர்கள் இந்த விஷயத்தை மரியாதையுடனும், பொறுப்புடனும், கவனத்துடனும், இன்முகத்துடனும் அணுகவேண்டும் என்று சில விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள்.

திருமணமான அன்று இரவே சாந்தி முகூர்த்தம் வைத்துவிட வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதற்கு நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹோமத்தில் உட்கார்ந்து கடவுளை மனமார பூஜித்ததின் விளைவாக அன்று தம்பதிகள் இருவருமே பரிசுத்தமாக இருக்கிறார்கள்.

தம்பதிகளை அன்று தனியாக ஒரு கட்டிலில் படுக்க வைத்து சுற்றிலும் கடவுள் படங்களை வைத்து, குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பால் பழம் போன்ற உணவுப்பொருள்களை வைத்து தனியே விட்டுவிட வேண்டும். அப்படி விட்டுவிட்டபிறகு அந்த தம்பதிகள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் முகமன் கூறிக்கொண்டு, நன்கு அறிமுகப்படுத்திக் கொண்டு, குத்துவிளக்கு ஏற்றப்பட்டு படங்கள் வைத்திருக்கும் இடத்துக் கருகே அமர்ந்துகொண்டு பிள்ளையார் பூஜை துவங்கி சில நாமஜபங்கள் செய்துவிட்டு பிறகு கட்டிலுக்கு வரவேண்டும்.

எடுத்தவுடனேயே தனியாக இருக்கும்போது தம்பதிகள் வேறு எதுவும் சொல்லாமல் கடவுளை நோக்கி பூஜை செய்வது உத்தமம். பிறகு தொடாமல் இருவரும் தங்களுடைய வாழ்க்கையைப்பற்றி விவரமாய் பேசிக்கொள்ள வேண்டும். உறவினர்கள் பற்றியும், தங்கள் அபிலாஷைகள் பற்றியும், பரஸ்பரம் சொல்லிக்கொள்ள வேண்டும். அன்று அயர்ச்சியாக இருக்குமாதலால் அருகருகே படுத்து கண்மூடி தூங்கிவிட வேண்டும். பிறகு* காலையில் எழுந்திருந்து மறுபடியும் இனிமையாய் பேசிவிட்டு பிரிந்துவிட வேண்டும். இது நடுவீட்டில் இருப்பது போன்றது.

மறுநாள் இரவு மீண்டும் தனியே படுக்கை அறைக்கு போகும் போது அதேவிதமாய் கடவுள் நாமாக்களை சொல்லிவிட்டு, கட்டிலில் அமர்ந்து கைபற்றிக்கொண்டு பேசலாம். லேசாக ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்ளலாம். தலைவாரி விடலாம். உணவு, ஊட்டலாம். அருகருகே உட்கார்ந்து அணைத்துக்கொண்டு பாட்டுக்கள் பாடலாம். சிருங்காரமான பாட்டுகள் அவர்களின் உடல்கொதிப்புகளை அடக்கி, மனதிற்கு ரம்மியமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வாறு நள்ளிரவு வரை பாடிவிட்டு தூங்கிவிட வேண்டும். இது நந்தவனத்தில் இருப்பது போன்றது. நந்தவனத்தில் தனியாக இருக்கும்போது கைகளை பிணைத்துக்கொள்ளலாமே தவிர, வேறு எதுவும் செய்ய முடியாதல்லவா, அதைப்போன்ற விஷயம் இது.

மூன்றாம் நாள் இரவு இன்னும் நெருக்கமாக இருக்கலாம். ஒருவர் மற்றொருவரின் அந்தரங்கமான உடல்உறுப்புகளைத் தடவிக்கொள்வதும், அதன்மூலம் கிளர்ச்சியுறுவதும் செய்துகொள்ளலாம். ஆசையான வார்த்தைகளைப் பேசலாம். இப்பொழுதும், பாட்டுப்பாடி இதழோடு

இதழ்வைத்து முத்தமிட்டு ஒருவர் எச்சிலை இன்னொருவர் உண்டு, மடியில் படுத்துக்கொண்டு, நின்றபடி தழுவிக்கொண்டு உடற்சூட்டைக் குறைத்துக் கொள்ளலாம். இது வனத்திலே இருப்பது போன்றது. வனத்திலே எவரும் வரமாட்டாரெனினும், பறவைகளும் மிருகங்களும் பார்க்குமல்லவா. அந்தக் கூச்சம் பெண்ணிற்கும், ஆணிற்கும் இருக்குமல்லவா. ஆகவே, அரைகுறையாய் கலவியில் ஈடுபட இது ஒரு உத்தமமான நேரம்.

நான்காம் நாள் இரவு, இன்னும் சற்று அருகே இன்னும் சற்று அதிகமாய் இந்த செயல்களைச் செய்யலாம். அரை நிர்வாணமாகி இருக்கலாம். ஒருவரையொருவர் தடவிக்கொள்ளலாம். தழுவிக்கொள்ளலாம். ஆசைதீர பார்த்துக் கொள்ளலாம். நெருக்கமாய் பின்னிப்பிணைந்து கொள்ளலாம். கண்ணாடி முன்பு நின்று சிருங்காரமாய் பேசலாம். சுற்றி வந்து ஒருவரையொருவர் நன்கு பார்த்துக் கொள்ளலாம். இதனால் பரஸ்பரம் ஆண், பெண் பற்றிய பிரமிப்பு போய் அந்த அறிவு விருத்தியாகி, அது என்ன என்று புரிந்து மனமும், உடம்பும் சூடு குறையத் துவங்கும். இது குகையிலே இருப்பது போன்றது. இருட்டாகவும், குளுமையாகவும் இருக்கும். அந்த ஒரு வாயிலை மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டு, கலவியைத் தவிர்த்துவிட்டு மற்ற எல்லா விஷயங்களிலும் அந்த நான்காம் நாள் ஈடுபடலாம்.

ஐந்தாம் நாள் தான் மிகவும் உத்தமமான நேரம். இப்போது கணவனும், மனைவியும் கலவிக்குத் தயாராக இருப்பார்கள். சிறிய தொடல்களாலும், அணைப்பினாலும், பாட்டினாலும் மனம் மனோகரத்தில் லயித்துக் கிடக்கும். எப்போது உறவு ஏற்படும் என்று ஏக்கத்தோடு இருக்கும். அதற்கு உடம்பும், மனதும் தயாராகி விடும். அன்று பரஸ்பரம் பல விஷயங்கள் பேசவேண்டும். பல விஷயங்களில் ஈடுபட வேண்டும் என்ற கற்பனைகள் அதிகம் இருக்கும். அப்போது ஒரு உச்சகொதிநிலைக்குப் போய் அளவாக நடந்துகொள்ளுதல் என்பது அவர்களுக்கு கைவந்து விடும்.

ஆண், பெண் உடல் சூடு பழக்கப்பட்டு விட்ட நிலையில் இதே போல் பகவத் பூஜை முடித்துவிட்டு, பேசி சிரித்தபடி, பாடி ஆடியபடி முழுமையான கலவியில் ஈடுபடலாம். அப்போது உடல்நிலையும், மனோநிலையும் அதற்குத் தயாராக இருக்கும். மிக சுந்தரமான ஒரு நேரத்தை அவர்கள் முழுவதுமாய் அனுபவிப்பார்கள். இந்த அனுபவிப்பு வாழ்க்கை முழுவதும் நல்ல ரசமாக மனதில் தங்கி இருக்கும். எப்போது மனைவியை நினைத்தாலும் ஒரு பிரியமும், எப்போது கணவனை நினைத்தாலும் ஒரு அன்பும் பரஸ்பரம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

இம்மாதிரி நிதானத்தைக் கடைபிடித்து வந்தால் பிறக்கின்ற பிள்ளைகள் நல்ல புத்தியோடு இருப்பார்கள். நல்ல மனோநிலையில் வளர்வார்கள் என்று அந்தப்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது.

இவ்விதமாகவே தானும் ஆரம்பிக்கவேண்டும் என்று திருஞானம் நினைத்தான். அந்த அத்தியாயத்தை ஒரு கவரில் போட்டு பாலாம்பிகாவுக்கு படிக்கக் கொடுத்தான். 'இதை படித்துவிட்ட பிறகு நாம் பேசலாம்' என்று காதோரம் சொன்னான்.

இரவு ஒன்பது மணிக்கு பாலாவை கொண்டு வரும்போது அவள் மிகவும் வெட்கப்பட்டிருப்பாள் என்று நினைக்க அவள் சாதாரணமாக இருந்தாள்.



"படிச்சியா" திருஞானம் கேட்டான்.

"இதை முன்னாடியே படிச்சிருக்கேன்ங்க. அப்பா இதை வாங்கிட்டு வந்தவுடனே, ஆரம்பத்திலேர்ந்து கடைசி வரைக்கும் படிச்சுட்டேன். இது ஒரு ரொம்ப நல்ல விஷயங்க" சாதாரணமாகச் சொன்னாள்.

திருஞானத்துக்கு அவளுடைய பேச்சு உண்மையும், மென்மையும், ஒளிவுமறைவற்ற தன்மையும் மிகப்பிடித்திருந்தது. அங்கேயே அந்த கூட்டத்திற்கு எதிரேயே அவளை கைகுலுக்கி 'வெரிகுட்' என்று பாராட்டினான். எதற்கு என்று தெரியாமல் மற்ற பெணகள் விழித்தார்கள். கேலிசெய்ய ஆரம்பித்தார்கள். லேசாய் பாலாம்பிகா வெட்கப்பட்டாள்.

திட்டமிடல் என்ற ஒரு விஷயம் வாழ்க்கையில் இருந்துவிட்டால் வெற்றியை நோக்கி எளிதாக நகரமுடியும். திட்டமிடலுக்கு நிதானம் அவசியம். ஒருவர் நிதானமாக இருக்க தெளிவு முக்கியம். தெளிவு வேண்டுமெனில் ஒருவன் ஆழ்ந்து தனிமையில் சிந்திக்க வேண்டும்.

இப்படி தனிமையில் சிந்திக்கிற பழக்கம் திருஞானத்திற்கும், பாலாம்பிகாவுக்கும் இருந்ததால் அவர்கள் சேர்ந்திருக்கும் நேரங்களில் சந்தோஷமாக இருந்தார்கள். புத்தகத்தில் சொன்னது போலவே சுக்லாம் பரதரம் என்று தலையில் குட்டிக்கொண்டு பிள்ளையார் பூஜை முடித்து பிறகு ராம நாமம் சொன்னார்கள். 'அருணாச்சால சிவ அருணாச்சல சிவ' என்று ஜபம் செய்தார்கள்.

'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி' என்று அவள் பாட்டுப்பாட அவன் கண்மூடிக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு கட்டிலுக்கு வந்தார்கள். அவர்களுடைய படிப்பு பற்றியும், இளவயது பற்றியும், உணர்வுகள் பற்றியும் பேசினார்கள். தூக்கம் வர தூங்கிப் போனார்கள்.

ஐந்து நாட்களும் புத்தகத்தில் எப்படி எழுதியிருந்தார்களோ அப்படியே கழிந்தன.

"தேன்நிலவுக்கு அஸ்ஸாம் போய்ட்டு வா" என்று தாரிணி சொன்னாள்.

"அவ்வளவு தொலைவெல்லாம் என்னால போக முடியாது"

"பிறகு எங்க போகப்போறே"

"திருச்சி, ஸ்ரீரங்கம்தான்"

"வெக்கையாக இருக்குமேடா"

"ஓட்டல்ல ஏஸி ரூம்ல தான தங்கப்போறோம்" திருஞானம் பதில் சொன்னான்.

"தம்பி, நீங்க கவலைப்படாத போய்ட்டு வாங்க. கடையை நானும், மேனேஜரும் பாத்துக்கறோம். மேனேஜருக்கு வேலைதெரியும். நான் மேற்பார்வையா இருந்துக்கறேன்" நடேசன் சொல்ல, அடுத்து ஐந்துநாட்கள் அவன் தேனிலவுக்காகக் கிளம்பினான். திருச்சியில் 'ஜென்னீஸ் ரெசிடென்ஸி'யில் அழகிய ரூமில் தங்கினான். சமயபுரம் போய் ஆத்தாளைக் கும்பிட்டான். திருவானைக்காவல் போய் அகிலாண்டேஸ்வரியை வணங்கினான். மலைக்கோட்டை மாணிக்க விநாயகர் கோயிலையும், உச்சிப் பிள்ளையார் கோவிலையும், பிறகு தாயுமான சுவாமிகளையும் தரிசித்து விட்டு, அவர்கள் நல்ல குழந்தைகள் வேண்டுமென்று வேண்டினார்கள்.

அதற்கு மறுநாள் ஸ்ரீரங்கம் போய் ரங்கநாத சுவாமியை தரிசித்தார்கள். அந்தக் கோயிலைச் சுற்றி சுற்றி வந்தார்கள். வியாசராயர் ஸ்தாபித்த ஹனுமானை படியேறி வலம்வந்து நமஸ்கரித்தார்கள். நல்ல உடல் ஆரோக்கியம் கொடுக்க வேண்டும் 'என்று வேண்டிக்கொண்டார்கள். கருப்புசாமியிடம் போய் எங்கள் குடும்பத்தை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். பிரகாரம் சுற்றி தாயார் சந்நிதிக்குப் போய் குறையறாத செல்வம் கொடு என்று வேண்டிக்கொண்டு வட கிழக்கு ஈசான்ய மூலையிலிருக்கும் ராமருடைய சந்நிதிக்குப் போய் அங்கு வேதம் ஓதுபவர்களோடு அரைமணி நேரம் அமர்ந்துவிட்டு, அவர்கள் கலைந்து போனதும் ராமருக்கு தனியாக அர்ச்சனை செய்து, இடை யறாது உன்நாமம் மனதில் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். ராமருக்கு பதக்கத்தோடு கூடிய முத்துமாலை சார்த்துவ தாக சங்கல்பம் செய்துகொண்டார்கள்.

காவிரிக்கரையோரம் அமர்ந்து நீரோட்டத்தை ரசித்தார்கள். கார் ஏற்பாடு செய்துகொண்டு தஞ்சாவூருக்குப் போய் புன்னைநல்லூர் மாரி யம்மன் கோவிலைப் பார்த்தார்கள். பிரகதீஸ்வரர் கோயிலைக் கண்டு வியந்தார்கள். விஜயாலயர் நிர்மாணித்த நிசும்ப சூதனி என்ற காளி கோயிலுக்குப் போய் வணங்கினார்கள். தியாகராஜர் சமாதிக்குப் போய் வாழ்க்கை முழுவதும் நல்ல பாட்டுக்கள் பாட வரம் தருமாறு கேட் டார்கள். திருவையாறு சுவாமிக்கு சாம்பிராணி தூபம் போட்டார்கள். திருவையாறிலிருந்து காவிரி ஓரமாகி பல ஊர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு திருச்சிக்குத் திரும்பினார்கள்.

மறுநாள், திருவாரூர் போனார்கள். ஹாடகேஸ்வரம் என்ற சந்நிதி யில் வெகுநேரம் தியானத்தில் அமர்ந்தார்கள். பிறகு குடந்தை பக்கம் காரில் போய், உப்பிலியப்பன் கோயிலுக்கும், கர்பரக்ஷாம்பிகை கோயி லுக்கும், அய்யாவாடி பிரத்யங்கரா கோயிலுக்கும், நாகசாமி கோயிலுக் கும் போய்வந்து இரவு வண்டியேறினார்கள். சென்னைக்கு வந்தார்கள்.

"எப்படி இருந்துது ட்ரிப்?" - தாரிணி பாலாம்பிகாவைக் கேட்டாள்.

"ஏ கிளாஸ். பரம திருப்தி" - என்று பாலாம்பிகா பதில் சொன் னாள்.

எந்தப்பெண்ணும் இப்படி ஒரு பதில் சொல்ல மாட்டாள் என்று தாரிணி நினைத்துக்கொண்டாள்.

பரமதிருப்தி, ஏ கிளாஸ் என்பது கூடலைப்பற்றிய சந்தோஷத்தை மட்டும் சொல்லுகின்ற வார்த்தை இல்லை. ஒட்டுமொத்தமாய், அந்த ஐந்து நாளைப் பற்றி, அந்த ஐந்து நாள் அனுபவத்தைப் பற்றி அந்த கணவன் மனைவிக்கு இருந்த சந்தோஷத்தை அது வெளிப்படுத்தியது. அதைப்புரிந்துகொள்ள பெரிய மனம் வேண்டும். தாரிணிக்கு அந்த மனம் இல்லை.

இரண்டு, மூன்று சிறிய தவறுகளைத்தவிர, பதிப்பகத்தில் எந்தவித கோளாறும் நடந்திருக்கவில்லை. திருஞானம் இல்லாமலேயே நடேசனும், மேனேஜர் ஐயரும் மிக அழகாக பதிப்பகத்தை நடத்திவைத்து இருந் தார்கள்.

அவன் போன் செய்து பாலாம்பிகாவை பதிப்பகத்துக்கு வரவழைத் தான். "இதுவரைக்கும் கார் இல்லாத வெறும் மோட்டார்பைக்ல சுத்திட்டேன். மெட்ராஸ்ல கார் ஓட்டறது கொஞ்சம் எரிச்சலான விஷ யம். மோட்டார் சைக்கிளா இருந்தா புகுந்து புறப்பட்டுடலாம். மோட்டார் சைக்கிளை விக்கறதா இல்ல. ஆனா கார் வாங்கறதா இருக்கேன். காஞ்சிபுரம், திருவேற்காடு, திருவிடந்தை, மகாபலிபுரம்னு சின்னச்சின்ன ட்ரிப்பா பல ஊர்களுக்குப் போறதுக்கு கார் சௌகரியம்.



பழசு வாங்கட்டுமா, புதுசு வாங்கட்டுமா" அப்பாவையும், பெண்ணையும் ஆலோசனை கேட்டான். "புதுசு வாங்கினா வேணான்றபோது வித்துட லாம். நல்ல விலை போகும். பழசை பாதி விலைக்கு வாங்கி, நாம உபயோகப்படுத்தி, கால் விலைக்கு விக்கறதை விட புதுசு நல்லதில்லையா. கோளாறும் குறைவா இருக்கும்" அவள் மறுபடியும் தெளிவாகப் பேசி னாள். அவன் புது கார் வாங்குவதென்று முடிவுசெய்தான்.

ஒரு நல்ல நாளில், 'தனக்குப்பிறகு தன்னுடைய பதிப்பகத்திற்கு உரிமையார் தன் மனைவியே' என்று ஒரு பத்திரம் எழுதி, அதை ஆடிட்டருக்கும் அவனது வக்கீலுக்கும் அனுப்பினான். மாமனாரிடம் ஒரு பிரதியும், மனைவியிடம் ஒரு பிரதியும் கொடுத்தான். கடையில் மூலத்தைப் பத்திரப்படுத்தினான்.

"எடுத்தவுடனே ரொம்பநேரம் இங்க உட்கார வேணா. நான் சாயந்திரம் அஞ்சு மணிக்கு கிளம்பிடுறேன். ஆறு மணிக்கு விளக்கேத்தற போது அம்மா நான் வீட்டில் இருக்கணும்னு எதிர்பார்ப்பாங்க" பாலாம்பிகா விடைபெற்றுக்கொண்டு கிளம்பினாள்.

"ஏம்மா உன்னைத்தேடி இங்க விருந்தாளிக்கு வந்திருக்காங்க. நீ எங்கயோ போய் உக்காந்திருக்கியே என்னம்மா இது" - தாரிணி எகத் தாளமாய் பாலாம்பிகாவிடம் பேசினாள்.

"அவர் கூப்பிட்டாரு. போனேன். அவர் வேணாம்னா இங்க இருக்கப்போறேன். நீங்க எதுக்கும் அவங்கிட்டயே ஒரு வார்த்தை சொல்லிடுங்க" பாலாம்பிகா நிதானமாய் தாரிணிக்கு பதில் கொடுத்தாள்.

"நீங்கதான் சொல்லணும். 'என்னை இப்படி கூப்பிடாதீங்க. வீட்டுக்கு விருந்தாளிங்க வருவாங்க. அவங்களை கவனிக்க வேண்டி யிருக்கும்'னு சொல்லணும்."

"சரி. இன்னைக்கு சாயந்தரம் வரட்டும். உடனே சொல்லிடறேன்" - பாலாம்பிகா அதையும் சமாளித்தாள்.

"இன்னைக்கு எங்க மாமனார் வீட்டுலேர்ந்து நாலைஞ்சு பேர் வந்தாங்க. உன்னைப் பார்க்க முடியாமயே திரும்பிட்டாங்க"

"அதுக்கென்ன. நாம போய் பார்ப்போம். எந்த இடம்னு சொல் லுங்க போய் பார்த்துட்டு வந்துடறேன்"

"நீ மட்டும் போனா நல்லா இருக்குமா"

"நல்லாதான் இருக்காது. அவரோடயும் போறேன்"

"அவன் வரமாட்டான்"

"இல்லீங்க. எப்படியாவது நான் கூட்டிகிட்டு போயிடறேன்"

"என்ன அதுக்குள்ளேயும் கைக்குள்ளே போட்டுக்கிட்டயா எங்க அண்ணனை..."

"அப்படி சொல்ல முடியாது. ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சு கிட்டோம். எது முக்கியம்னு ரெண்டுபேரும் பேசி முடிவுபண்ணுவோம்" பாலாம்பிகா இடைவிடாது பதில் சொன்னாள்.

"அப்பா. ரொம்ப பேச்சு சாமர்த்தியம்தான்" தாரிணி கொஞ்சம் சிறலாய் பேச, பாலாம்பிகா அவளை முறைத்துப்பார்த்தாள். எதுவும் பேசாது உள்ளே போனாள்.

வீட்டில் இருக்கும் பெண்ணுக்கும், வீட்டிற்கு வந்த பெண்ணுக்கும் வந்த சில நாட்களிலேயே பற்றிக்கொண்டது. பகைமை தொற்றிக் கொண் டது.

"நான் எனக்குன்னு ஏஸி ரூம் போட்டேன். இப்ப நீ அனுபவிக் கிறயா. நல்லா அனுபவி. உங்க வீட்ல ஏஸி இருக்கா" - தாரிணி குத்த

லாகக் கேட்டாள்.

"இல்லை இங்க வந்துதான் ஏஸி, பிரிட்ஜ், வாஷிங் மிஷின், மிக்ஸி எல்லாம் பார்த்தேன்" பாலாம்பிகா குத்தலாய் பதில் சொன்னாள்.

"என்ன நான் சாதாரணமா கேக்கறேன். நீ கேலியா பேசிறியே"

"என்னங்க கேள்வி இது. எழுவது சவரன் நகை போட்டு வரணும்னு சொன்னீங்க. வந்திருக்கிறேன். எங்க வீட்டுல ஏஸி இருக்கான்னு கேட்டா, அது கேலி தானே. நீங்க கேலி செய்யலாம். நான் செய்யக்கூடாதா?"

"இருக்குன்னு சொல்லிட்டு போக வேண்டியது தானே. இத்தினி எடக்கு பேச்சு எதுக்கு?"

"நீங்க எடக்கா பேசலையா. உங்க வீட்டுல ஏஸி இருக்கான்னா என்ன அர்த்தம். எங்க வீட்டுல இருக்கு. நீ எங்கயோ குப்பை மேட்டு லேர்ந்து வந்திருக்க அப்படின்னு சொல்றதுக்குதானே ட்ரை பண்றீங்க. நான் குப்பை மேட்டுலேர்ந்து வரலை. என் சொத்து பத்து பத்தி சொன்னாக்கா உங்களுக்கு ரொம்ப கவலையாயிடும். அதனால சும்மா இருக்கேன்" என்று பாலாம்பிகா பதிலுக்கு பதில் கொடுத்தாள்.

அம்மாவுக்கு இந்தப் பேச்சுக்கள் கவலையளித்தன.

புது கார் வீட்டு வாசலுக்கு வந்தது.

"புது காரா மாருதி ஜென்னா. எப்ப வாங்கினீங்க. என்கிட்ட சொல்லவே இல்லையே. கார் வாங்கப்போறேன்னு ஒரு தடவை கூட ஒருத்தரும் பேசவே இல்லையே." தாரிணி படபடத்தாள்.

"கார் நான் வாங்கலீங்க. உங்க அண்ணன் வாங்கினாரு. நான் உக்கார்ந்து [illegible]த்திட்டு வந்தேன். அவ்வளவுதான்."

"நான் ஒரு ஏஸி போட சொன்னதுக்கு அத்தினி யோசனை பண்ணான். தடு[illegible]ன்னு மூணுலட்ச ரூபாய்க்கு கார் வாங்கினு வந்து நிக்கறானே. [illegible] மட்டும் முடியாதா. அப்படியே கார் வாங்கினாலும், ஒரு லடசம், [illegible]ரை லட்சத்துக்கு பழைய கார் வாங்கக் கூடாதா. புத்தம் புது [illegible] என்னத்துக்கு வாங்கணும்".

பாலா[illegible] மறுத்து ஏதும் பேசவில்லை.

"நீங்க [illegible]றதும் சரிதான். அவருகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு உங்களுக்கு பதில் சொல்றேன்" என்று அமைதியாகப் பேசினாள்.

"இதெல்லாம் போய் சொல்லிடாதம்மா. நான் என்னமோ பொறாமைப்படறதா நினைச்சிக்கப் போறான்."

"உங்களுக்கு என்னத்துக்கு பொறாமை. நீங்க நெனைச்சா இது மாதிரி கார் வாங்க முடியாதா: சரி மத்தியானம் என்ன வேலை. வாங்க வெளிய போயிட்டு வரலாம்." பாலாம்பிகா தாரிணியை அழைத்தாள்.

"எங்க போறது"

"தி.நகர் போய்ட்டு வரலாம். உங்களுக்கு புடவை வாங்கி கொடுக்கணும்னு எனக்கு ஒரு எண்ணம் இருக்கு."

எதுக்கு எனக்கு புடவை?" தாரிணி வியப்பும் சந்தேகமும் பார்த்தாள்.

"அடுத்த வாரம் உங்களுக்கு பிறந்தநாள் வருது இல்லையா. அதனாலதான் உங்களுக்கு ஒரு நல்ல புடவை வாங்கித் தரலாம்னு நினைக்கிறேன். உங்களுக்கு பிடிச்ச புடவையா வாங்கித் தரணும்னு ஆசை. அதனால தான் உங்களை கூப்பிடறேன்."

தாரிணிக்கு அவளின் சாமர்த்தியம் வியப்பாக இருந்தது. வந்தவள் பெரிய வேலையெல்லாம் செய்கிறாளே என்ற எண்ணம் வந்தது.



"நான் எதுக்கும்மா நீயே போய் ஏதாவது வாங்கிட்டு வந்திடு. நிறைய புடவை இருக்கு. புடவை புடவையா சேத்து வைச்சு என்ன புண்ணியம் சொல்லு."

"முத்து மாலை வாங்கித் தரட்டுங்களா."

"ஏதேது சரியான காசு புரளுது போலருக்கே." தாரிணி வேறிடத்திற்குத் தாவினாள்.

"நாத்தனாருக்கு ஒண்ணு செய்யணும்னா அதை நல்லா செய்ய வேணாமா. அதில காசு பார்த்தா முடியுமா" - பாலாம்பிகா கண்சிமிட்டிய படி சொன்னாள்.

"எப்படி போகப் போறோம்?"

"கார்ல போகப் போறோம்"

"யார் கார் ஓட்டுவா. திருஞானம் வர்றானா?"

"அவர் எதுக்கு. நான் கார் ஓட்டுவேன்"

அங்குதான் தாரிணிக்கு ஆத்திரம் அதிகமாயிற்று - தான் எதற்குமே தகுதியில்லாதவள் என்று தோன்றியது.

நாத்தனாருக்கு ஐந்தாயிரம் ரூபாய் புடவையும், தங்க மோதிரமும் பரிசாக வாங்கிக் கொடுத்ததுதான் தவறாகப் போய் விட்டது. 'இவ்வளவு காசா. ஏது ஏது' என்று தாரிணிக்கு கேள்வி வந்தது.

"உங்க அப்பா கொடுத்தாரா எனக்கு செலவு பண்ணன்னு சொல்லி."

"இனிமே அப்பாகிட்டேல்லாம் ஏன் கேக்கணும். அப்பா எவளோ செலவு பண்ணனுமோ பண்ணிட்டாரு. எங்க வீட்டுக்காரரை கேட்டேன். அவர் கொடுத்தாரு."

"அண்ணாவா. அண்ணன்கிட்ட அவ்ளோ காசு இருக்கா என்ன?"

"எனக்குத் தெரியாது. இந்த செலவு இருக்குன்னு சொன்னேன். டக்குன்னு பதினைஞ்சாயிரம் ரூபா கொடுத்தாரு."

அவள் கார் ஓட்டுகிற அழகும், வியாபாரம் செய்யும் நேர்த்தியும், அவள் கம்பீரமும் தன்னுடைய அழகை விட மிக உயர்வாக இருப்பதை தாரிணி தெரிந்து கொண்டாள்.

நகைக்கடையில் பாலாம்பிகா சரளமாய் ஆங்கிலம் பேசினாள். அங்கு அவளுக்குப் பெரிய மரியாதை இருந்தது.

"வாங்க பேப்பர்காரம்மா. எப்படி... நல்லபடியா இருக்கீங்களா. கல்யாணம் அற்புதமா நடந்தது. நானே போன் பண்ணி சொல்லணும்னு நினைச்சேன். வாங்க. வாங்க."

கடை முதலாளியே வந்து உட்கார்ந்தார்.

நாத்தனாருக்கு மோதிரம் வேண்டுமென்றதும் அவரே மோதிரங்களை எடுத்துக் காட்டினார். கடை மொத்தமும் அவர்களை திரும்பிப் பார்த்தது. மூன்று நிமிடத்தில் மோதிரம் தேர்ந்தெடுத்து, அவள் விரலில் மாட்டி அழகு பார்த்து 'இப்படியே இப்பவே இருக்கட்டும்' என்று கைகுலுக்கினாள். மறுபடியும் கார் ஏறி ஐஸ்கிரீம் பார்லருக்கு வந்து கண்ணாடிச்சட்டி நிறைய இரண்டு ஐஸ்கிரீம் வரவழைத்து, அதை உட்கார்ந்து ருசித்து சாப்பிட்டுவிட்டு வீட்டிற்கு வந்தார்கள்.

பாலாம்பிகாவின் இந்த செய்கைகளால் தாரிணிக்கு நட்பு வளரவில்லை. மாறாய், ஆத்திரமும் பொறாமையும் வளர்ந்தது. தானும் கார் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும். தானும் கார் வாங்க வேண்டும் என்ற ஆத்திரம் வளர்ந்தது. இருபத்து மூன்றாயிரம் ரூபாய் சம்பாதிக்கின்ற புருஷன் கார் வாங்குவதற்கு லாயக்கில்லாதவன் என்று தெரியாத

போது கோபம் வந்தது.

அப்ப திருஞானத்துக்கு என்ன சம்பளம். இதுவரை நாம் ஏன் அதைக் கேட்கவே இல்லை என்று எண்ணம் எழுந்தது. அவள் அம்மா விடம் கேட்டாள். அம்மா தனக்குத் தெரியாது என்று சொன்னாள். எனவே அவள் திருஞானத்திடம் கேட்டாள். 'ஒரு மாசம் பதிப்பகத்துல எவ்ளோ வருது' என்று தனியே கூப்பிட்டு விசாரித்தாள்.

"அது உழைப்பை பொறுத்து இருக்கு. ஒவ்வொரு + மாசமும் ஒவ்வொரு விதமான கணக்குல வரும். ஏன் கேட்கறே?"

"ஆவரேஜா எவ்ளோ, வரும்?"

"அது லட்ச ரூபாய்க்கு மேலே வரும். என்ன"

"ஒரு லட்ச ரூபாய் இன்கம் வருமா?"

"ஆமா திருப்பி அதை போட வேண்டாமா" திருஞானம் சொன்னான்.

ஆனால் அவளுக்கு அந்த கணக்கு புரியவில்லை.

"சரி. எனக்கு அதில பங்கில்லையா" தாரிணி சடக்கென்று கேட்டாள்.

"எதில பங்கு"

"பதிப்பகத்துல எனக்கு பங்கு கிடையாதா. அது அப்பா சொத்து தானே. அப்பா சொத்து பொண்ணுக்கு உண்டுதானே"

"உனக்கு ஆறு லட்ச ரூபாய் செலவு பண்ணி கல்யாணம் பண்ணியிருக்கோம். நகை போட்டிருக்கோம். பல்வேறு சீர்கள் செய்து இருக்கோம். இப்ப தடுக்குன்னு இதில பங்கு கேட்டின்னா எப்படி. அப்பா இதை எங்கிட்ட ஒப்படைச்சபோது அப்படி ஒண்ணும் பிரமாதமா இல்லை. என் உழைப்புல இதை ஒரு இடத்துக்கு கொண்டு வந்து நிக்க வெச்சிருக்கேன். காசு வேணும்னு கேளு. நான் எதனா ஹெல்ப் பண்றேன். பங்குன்னு கேட்டினா முடியாதுன்னு சொல்ல முடியும்."

"இல்ல எனக்கு பங்கு வேணும். மாசாமாசம் இதிலேர்ந்து எனக்கு காசு வேணும். இருபத்து மூணாயிர ரூபா சம்பளத்துல நான் என்ன குடித்தனம் பண்ண முடியும். லட்ச ரூபாய் வருதுன்னு சொல்றே எனக்கு இருபத்தைஞ்சாயிர ரூபா மாசா மாசம் கொடு." என்று தாரிணி சண்டை போட்டாள். அம்மாவிடம் புலம்பிப் பார்த்துவிட்டு எந்த முடிவும் ஏற்படாமல் தாரிணி அவள் வீட்டிற்கு போனாள். பதினைந்து நாள் எந்தவித தொடர்பும் கொள்ளாமல் இருந்தாள்.

பத்து லட்ச ரூபாய் முதல் போடச் சொல்லி, மாமனாரை பாகஸ்தராக திருஞானம் சேர்த்துக் கொண்டான். முதலில் ஐந்து லட்ச ரூபாய், அடுத்த மூன்று மாதத்தில் இரண்டரை லட்ச ரூபாயும், மறுபடி கேட்கும் போது இன்னொரு இரண்டரை லட்ச ரூபாயும் கொடுப்பதாக மாமனார் எழுதிக் கொடுத்தார். கடையில் அவருக்கென்றும், மகளுக்கென்றும் தனித்தனியாக நாற்காலி, மேஜைகள் போடப்பட்டன. இன்னும் இரண்டு டெலிபோன்கள் கொண்டு வரப்பட்டது. இண்டர்காம் விரிவுபடுத்தப் பட்டது.

பழந்தமிழ் இலக்கிய புத்தகங்களை மலிவு விலையில் போடுவது என்று அவர்கள் முடிவு செய்தார்கள் திருக்குறளையும், கம்பராமாயணத்தையும் அவ்வாறு பதிப்பித்தார்கள். நூற்றியோரு ரூபாயில், விளக்கத்துடன் கம்பராமாயணம் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. சிறிய படங்களுடன், நீண்ட உரையுடன் திருக்குறளுக்கு தடித்த புத்தகம் வந்தது. அது ஐம்பது ரூபாய் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. பரிசளிப்



புக்கான அழகிய வண்ணப் பெட்டி இலவசம் என்று சொல்லப்பட்டது. 'திருமணத்துக்கு பிறந்த நாளுக்கு, உங்கள் குழந்தைகளைப் பாராட்டுவதற்கு இந்த மாதிரி பரிசளிப்பு பெட்டியுடன் கூடிய புத்தகங்களைத் தரலாம்' என்று சொல்லப்பட்டது. பத்து புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு சலுகை தரப்பட்டது.

திருமணத்திற்கு அவர் கடிகாரமும் பிளாஸ்டிக் பொம்மையும், வெள்ளிப்படமும் வாங்கி அலுத்துப்போன தமிழ்நாட்டு மக்கள் திருமணத்திற்கு புத்தகங்கள் கொடுக்க முன் வந்தார்கள். அந்த அட்டைப் பெட்டி அழகாக இருந்ததால் கம்பீரமாக இருந்ததால் அதை வாங்கிக் கொண்டு போனார்கள். முப்பது சதவீதம் விலையில் தள்ளுபடி தர, சிறு வியாபாரிகள் நூறு நூறாய் அள்ளிக் கொண்டு போனார்கள். அந்த வியாபாரிகளுக்கு பெரிய பேனர்கள் கொடுக்கப்பட்டன. அதில் இந்த பரிசளிப்புப் பெட்டி பற்றிய விவரம் இருந்தது. கட்டணம் அதிகமில்லாத ஒரு டி.வி.யில் காலையும் மாலையில் ஒரு வாரத்திற்கு இதைப்பற்றி விளம்பரம் ஒளிபரப்பப்பட்டது. பெண்கள் பத்திரிகைகளில், ஆன்மீகப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வந்தன. லாப சதவீதம் குறைவாக இருந்தாலும், விற்பனை அதிகமாக இருந்ததால், மேலும் பல பதிப்புகள் போடப்பட்டன.

வில்லி பாரதமும், சிலப்பதிகாரமும் அச்சிடப்பட்டன. அதற்கும் நல்ல வரவேற்பு இருந்தது. இதையும் மற்ற பதிப்பாளர்கள் காப்பி அடித்தார்கள்.

பாலாம்பிகாவும், அவர் அப்பா நடேசனும் மேனேஜர் ஐயரும், திருஞானமும் அடுத்தது என்ன என்பது பற்றி கூடிப் பேசினார்கள். பாலாம்பிகா மிகத் தெளிவாக ஒரு திட்டம் தயாரித்து அவர்கள் முன் வைத்தாள்.

'சினிமா எடுப்பது எப்படி, சினிமா இயக்குவது எப்படி' என்று இரண்டு தலைப்புகளில் புத்தகம் வெளியிட வேண்டும் என்றும், இந்த நடிகரைப் புரிந்து கொள்ளுங்கள். அந்த நடிகரைப் புரிந்து கொள்ளுங்கள் என்று ஆறு புத்தகங்கள் வெளியிட வேண்டும் என்று சொன்னாள்.

நடேசன் இதை கடுமையாக எதிர்த்தார்.

"இந்த சினிமா விஷயத்தைப் போய் நாம செய்வானேன். இதுக்குன்னு வேற ஆளுங்க இருக்காங்க" என்று கோபப்பட்டார்.

"இப்படி பேசவே கூடாது. இதிலே என்ன தப்பு சினிமாவை அல்பம்னு விபரமில்லாதவங்கதான் சொல்வாங்க. சினிமாவுக்கு வீட்டிலேர்ந்து போறது போயி வீட்டுக்குள்ளே சினிமா வந்திடுச்சி. ஜனங்க அத்தினி பேரும் பார்த்தே ஆகறாங்க. இந்த புத்தகம் வெளியிட்டு, இதில நல்ல லாபம் வந்தா நாம அடுத்தபடி குறுந்தொகை போடலாம். திருவாசகம் போடலாம். இதிலே நல்ல லாபம் கிடைக்கும். அதிகமான விலை விக்காம எளிமையான தயாரிப்பா இருக்கணும். தடித்த அட்டை தேவையில்லை. கொஞ்சம் சாதாரண கார்டு போட்டா போதும். ஆனா முதுகு பைண்ட் பண்ணி இருக்கணும்." என்று விவரித்தாள்.

அப்படிப்பட்ட ஒரு எழுத்தாளரை திருஞானமும் பாலாம்பிகாவும் தேடிக் கண்டு பிடித்தார்கள். எழுதச் சொன்னார்கள். எழுதியதில் திருத்தங்கள் சொன்னார்கள். மறுபடியும் எழுதச் சொன்னார்கள். படங்கள் போட்டார்கள்.

'திரைப்படம் இயக்குவது எப்படி, திரைப்படம் தயாரிப்பது எப்படி' என்று இரண்டு புத்தகங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று

விளம்பரப்படுத்தினார்கள். ஆர்டர்கள் முன்கூட்டியே வந்தன.

ஒரு நடிகர் சங்கம் பதிப்பகத்தின் படியேறி வந்து தாங்கள் அதை வெளியிடத் தயார் என்று சொன்னது. கலந்து பேசிவிட்டு அதற்கு திருஞானம் சம்மதம் தெரிவித்தான்.

பதிப்பகத்துக்கு எந்த செலவுமில்லாமல் நடிகரும், அவருடைய மன்றமும் இதை பிரம்மாண்டமான முறையில் வெளியிட்டனர் அவர்களே காசு போட்டு வெளியிடப்பட்டது போல ஒரு பாவனை ஏற்படுத்தினார்கள். ஆனால் திருஞானத்திற்கு அதில் எந்தவித நஷ்டமு மில்லை. கூட்டத்தின் வாசலிலேயே ஆயிரத்து நூற்று பன்னிரெண்டு புத்தகங்கள் விற்பனையாயின.

"எங்களுக்கு எதுவும் கிடையாதா" மன்றத்தினர் வந்து கேட் டார்கள்.

"உங்க தலைவரைப் பத்தி தடிமனா புக் போடப்போறோமே. அதுதான் உங்களுக்கு கொடுக்கப்போற பரிசு. யார்கிட்டயாவது நல்லா எழுதிகிட்டு வாங்க." என்று திருஞானம் சொல்ல அவர்கள் வேறு ஒரு சினிமா எழுத்தாளரைப் பிடித்து அவர் மூலம் நடிகரைப் பற்றி பெரிய புத்தகம் ஒன்று எழுதிக் கொண்டு வந்தார்கள்.

இப்போதிருக்கும் நடிகரைப் பற்றி ஒரு புத்தகமும், பழம்பெரும் நடிகரைப் பற்றி ஒரு புத்தகமும் வெளியிடப்பட்டன. அந்தப் புத்தகங்கள் சற்று மெல்லப்போய் பிறகு முற்றிலும் விற்றுவிட்டன.

அடுத்து சினிமா சம்பந்தமாய் மேலும் நான்கு புத்தகங்கள் போட, இது போதுமென்று பாலாம்பிகா சொல்லி விட்டாள்.

மேனேஜர் ஐயர், ஒரு நாள் காலையில் பாலாம்பிகாவிடம், திரு ஞானத்திடம் தனியே பேச வேண்டுமென்று சொன்னார். அவர்கள் 'உட்காருங்கள்' என்று சொன்னதும் வாசல்கதவை தாழ்போட்டுவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டார்.

"எனக்கு ரெண்டு பசங்க இருக்காங்க ஐயா. ஒருத்தன் அமெரிக்கா வுல இருக்கான். ஒருத்தன் ஜெர்மன்ல இருக்கான். பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி கொடுத்துட்டேன். சொந்தத்துல சின்ன அடுக்குமாடி வீடு. இது போதும். பசங்க அப்பாவுக்கு காசு அனுப்பணும்ற மரியாதைல காசு அனுப்பிகிட்டு இருக்காங்க. அப்படி அனுப்பின காசை சேர்த்து வைச்சிருக்கேன். அது ஒரு நாலே முக்கா லட்ச ரூபாய் இருக்கு. அதுதவிர, நான் ரிட்டயர்டு ஆனப்ப வாங்கின காசு, ஒரு மூணு லட்ச ரூபாய் தனியா இருக்கு. அதுவும் தவிர, என் மனைவிக்கு, அவ தம்பி கொடுத்த காசு கொஞ்சம் இருக்கு. நடேசன் ஐயா பத்து லட்ச ரூபாய் போட்ட மாதிரி நானும் ஒரு பத்து லட்ச ரூபாய் போடறேன். என்னை பாகஸ்தரா சேத்துக்கிறீங்களா.

இந்தப் பணமெல்லாம் சிட்டு கம்பெனியில இருக்கு. சமீபமா பேப்பர்ல படிச்சபோது, ரிசர்வ் பேங்க்லேர்ந்து ஒரு நோட்டீஸ் அனுப் பிச்சிருக்காங்க. மக்களுக்கு ஒரு அறிவிப்பு பண்ணியிருக்காங்க 'எந்த சிட்டு கம்பெனி விளம்பரத்தையும் நம்பவேண்டாம்' அப்படின்னு சொல் றாங்க. இதைக்கொண்டு போய் சிட்டுக்கம்பெனியில காமிச்சேன். ரிசர்வ் பேங்குக்கு என்ன தெரியும்னு எகத்தாளமா பேசறான். அதிலயே எனக்கு சந்தேகம் வந்திருச்சி.

போன வாரம் ஒரு கம்பெனியிலேர்ந்தும், நேத்து ஒரு கம்பெனி யிலேர்ந்தும் காசு எடுத்துட்டேன். நாளைக்கு இன்னொரு கம்பெனியில இருந்தும் எடுத்துடப் போறேன். எடுத்த காசை பேங்க்ல போடறதுக்கு



பதிலா நான் வேலை செய்ற உங்க இடத்துலேயே போட்டாக்க நல்ல துன்னு நினைக்கிறேன். இந்த கம்பெனியினுடைய வளர்ச்சியும் இது பண்ற நல்ல காரியங்களும் எனக்குத் தெரியும். இன்னொரு பத்துலட்ச ரூபாய் இருந்தா நீங்க இன்னும் அற்புதமா காரியங்கள் பண்ணுவீங்கன்னு எனக்குத் தெரியும். அதனாலதான் இந்த யோசனையை உங்க முன்னாடி வைக்கறேன்"

இந்த யோசனை திருஞானத்திற்கு பிடித்திருந்தது. நடேசனுக்கு இதுகுறித்து எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் இருந்தது. பாலாம்பிகா அடுத்தது என்ன செய்யப் போகிறோம் என்பதை திட்ட மிட்டு விட்டு அவரிடம் காசு வாங்கலாம் என்று சொன்னாள்.

இந்தமுறை பல்வேறு ஏஜெண்டுகளிடம் பேசி, ஒரு சர்வே செய்து விட்டு சமயசார்புள்ள புத்தகங்கள் மலிவுப்பதிப்பு என்று திருஞானம் முடிவுசெய்தான்.

'கந்தர் அநுபூதி விளக்கத்துடன், கந்தர் அலங்காரம் விளக்கத்துடன் என்று எல்லாம் பத்து ரூபாய் புத்தகங்களாகப் போட்டான். பக்தி மணி மாலை என்று பல்வேறு விஷயங்களை, பாடல்களை தொகுத்துப் போட டான். 'பெரியோர்களின் பொன்மொழிகள்' என்று இன்னொரு தொகுப்பு எழுதச் சொன்னான்.

பழைய வண்ணாரப்பேட்டையில் பரசுராமன் என்ற ஒரு நண்பர் வீட்டிற்கு பாலாம்பிகாவும், திருஞானமும் போய் வந்தார்கள். எண்ப தாயிரம் புத்தகங்கள் ஒரு பெரிய வீடு முழுக்க, சுவர் முழுக்க அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அரிய பல புத்தகங்கள், இன்றைக்கு கிடைக்கவே கிடைக்காது என்று சொல்லப்படுகின்ற புத்தகங்கள் அனைத்தும் அவர் வீட்டில் பார்க்க முடிந்தது. புருஷனும், மனைவியும் மகிழ்ந்துபோய், பரசுராமனின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

"எங்களைவிட வயதில் பெரியவர் அதனால் ஆசிர்வாதம் செய்ய வேண்டும் என்பதற்காக மட்டுமில்லை. மொழி மீதும், இலக்கியத்தின் மீதும், சமயத்தின் மீதும் மிகப்பெரிய பற்றுகொண்டு, இத்தனை சிறிய வீட்டில் படுப்பதை, சமைப்பதை, புழங்குவதைக் கூட ஒரே அறையில் வைத்துக்கொண்டு மற்ற இரண்டு அறைகளையும் புத்தகங்களுக்கு ஒதுக்கி கொடுத்திருக்கிறீர்களே. இந்த பெரிய மனதிற்காக உங்களை வணங்கு கின்றோம்" என்று நமஸ்கரித்தார்கள். இந்தப்பழைய புத்தகங்களை மறு படியும் போடலாமா என்று கேட்டார்கள். அதிலிருந்து தகவல் திரட்டி கொடுக்கச் சொன்னார்கள். பரசுராமனின் மனம் குளிரும் வண்ணமும் அவர் மனைவியின் முகம் மலரும் வண்ணமும் சன்மானம் செய்தார்கள்.

"வீட்டில எழுத வசதி இல்லைன்னாக்க, நம்ம கடைக்கு வந்துருங் கையா. தனியா ரூம் போட்டுத் தர்றேன். அதில உக்காந்து வேலை செய்யுங்க. பல புத்தகங்கள்லர்ந்து விவரங்கள் சேகரிச்சு தனியா எழுதிக் கொடுங்க. தொகுத்தளித்தவர் பரசுராமன்னு போட்டுடலாம்."

பரசுராமன் மிகுந்த உற்சாகத்தோடு வேலை செய்து கொடுத்தார்.

"பரசுராமன் சார். வேலை செய்தாதான் காசு கேக்கணும்ற மாதிரி இருக்காதீங்க. எப்ப, எந்த அவசரத்துக்கு காசு வேணும்னாலும் கேளுங்க. கணக்கை பின்னாடி தீத்துக்கலாம்" பாலாம்பிகா தானே வலியப்போய் அவரிடம் நட்பாகப் பேச பரசுராமன் இன்னும் என்னவெல்லாம் செய்ய லாம் என்பதை அவர்களுக்கு விளக்கிக் காட்டினார்.

சோழ தேசத்து கோயில்கள், பாண்டிய நாட்டு திருத்தலங்கள், சேர தேசத்து வழிபாடுகள், தொண்டை மண்டலத்தின் ஞானதீபங்கள்

என்றெல்லாம் தலைப்புகளில், கோயில்களைப் பற்றிய வரலாற்று, புராண, இதிகாச விளக்கத்தோடு புத்தகங்கள் வர அவைகளுக்கும் நல்ல மதிப்பு இருந்தது.

விளம்பரம் செய்து ஐந்து இளைஞர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு எந்த முதலுமில்லாமல் புத்தகங்கள் கொடுத்து கோயில் வாசல்களில், திருவிழா இடங்களில், சமய சொற்பொழிவுகள் நடக்கின்ற கூட்டத்தின் வாயிலில் புத்தகங்கள் விற்றுவரச் சொல்ல அவர்களுக்கும் லாபம் கொழித்தது. இவர்களுக்கும் புத்தகம் நகர்ந்தது.

ஈழப் பிரச்சனையால் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். ஐரோப்பாவில் பல இடங்களில் சென்று குடியேறினார்கள். அதேபோல தமிழ் நாட்டின் படித்த இளைஞர்கள் அரசாங்க வேலைக்கு காத்திராமல் நம்மை உதறி, விமானமேறி வெளிதேசங்களுக்குப் போனார்கள். டாலர்களில் சம்பாதித்தார்கள். இங்கு ஐந்தாயிரம், ஆறாயிரம் சம்பாதிக்கின்ற இளைஞன் அமெரிக்காவில் இறங்கியதும் நாற்பதாயிரம் ரூபாய் சம்பாதித்தான். ஐரோப்பாவில் இறங்கியதும் முப்பதாயிரம் ரூபாய் சம்பாதித்தான். இன்னும் புரூனேயில், ஆஸ்திரேலியாவில், சிங்கப்பூரில், மலேயாவில் என்று தமிழர்கள் பரவி கடினமாய் உழைத்துச் சம்பாதித்தார்கள். அங்கெல்லாம் தமிழ் புத்தகங்கள் நன்கு விற்பனையாயின. வாங்கக்கூடிய வசதி அந்த இளைஞர்களுக்கு இருந்தது. தமிழ்மீது தாகம் அவர்களுக்கு அதிகரித்திருந்தது. வெளியூரிலிருந்து வரும்போது சென்ட் பாட்டிலும், டேப்ரிக்கார்டரும், சிடி டெக்குமாய் வந்தவர்கள் திரும்பிப்போகும்போது புத்தகக்கட்டோடும், சுவாமி படங்களோடும் போனார்கள். அவர்களாலும் தமிழ்ப்புத்தகங்கள் நன்கு விற்பனையாயின.

மேனேஜருடைய தொகையை திருஞானம் பெற்றுக்கொண்டான். மேனேஜர் காலையில் எட்டுமணிக்கு கதவு திறந்து, இரவு பத்துமணி வரை பிசாசாய் உழைத்தார். பரசுராமன் ஒரு புத்தகம் எழுதி முடித்தால் அதை பத்தாவது நாள் முழுப்புத்தகமாக கொண்டு வந்து இறக்கினார். அட்டைப்படங்களுக்கு மூன்று ஓவியர்களை வரையச்சொல்லி, எந்த ஓவியம் நன்றாக இருக்கிறதோ அந்த ஓவியத்தைப் போட்டார். மற்ற இரண்டு ஓவியர்களுக்கு காசு கொடுத்து, படம் பிரசுரிப்பதற்கு இல்லை என்று சொன்னார். அடுத்தமுறை அந்த ஓவியர்கள் கூர்மையாக படம் வரைய, வெள்ளைத்தாமரை பதிப்பகத்தின் அட்டைப்படங்களுக்கு தனி மவுசு மக்களிடையே ஏற்பட்டது. எழுத்தாளர்கள் அந்தப் பதிப்பகத்திலிருந்து தங்கள் புத்தகங்கள் வெளிவர ஆவலுற்றார்கள்.

"எவனோ தெருவோட போற பார்ப்பான். அவரை கூட்டு சேத்துகினு பங்கு தர முடியுது. நான் கேட்டா தர முடியாதா" தாரிணி திடுமென்று ஒருநாள் கேட்டாள். அம்மா அவளுக்கு தகவல்களை சொல்லியிருக்கக்கூடும்.

"தெருவோட போறவரு இல்ல. பத்துலட்ச ரூபாய் முதல் போட்டவர். பதிப்பகத்துக்காக பேயாய் உழைக்கறவர். உன் புருஷனை பத்து லட்சம் போடச் சொல்லு"

"ஏன் என் புருஷன் பத்துலட்ச ரூபாய் தரணும். எனக்கு கொடுக்க வேண்டிய பங்கு பத்துலட்ச ரூபாய் நாங்க அதில போட்டோம்னு வைச்சிகிட்டு மாசாமாசம் பங்கு கொடு" தாரிணி எகிறலாய் பேசினாள்.

"தயவுசெய்து தாரிணி, வம்பு வளர்க்காத. உனக்கு தரணும்னு எந்த சட்டமும் இல்லை. உனக்கு கல்யாணம் ஆனப்போ, என் பேலன்ஸ் ஷீட் எப்படின்னு உனக்கு ஜெராக்ஸ் எடுத்து தர்றேன். அப்ப தெரியும்



இது அப்பா சொத்து இல்லை. என் உழைப்புன்னு. உனக்கு காசு வேணும்னா சொல்லு. முடிஞ்சா ஹெல்ப் பண்றேன். சட்டம் பேசினின்னா எனக்கு கெட்ட கோவம் வரும்" திருஞானம் எச்சரித்தான்.

"மாமனார் வேணும். மாமனார் வேலைக்கு வைச்ச ஐயரு வேணும். நாங்க வேணாமா. அம்மா பங்கு என்ன அதையாவது சொல்லு"

"அம்மாவுக்கு என்னத்துக்கு பங்கு. அதை அம்மா இல்ல கேக்கணும். அம்மாவே கேட்காதபோது நீ ஏன் கேட்கிறே"

"அம்மா கேளும்மா. உன் பங்கு என்னன்னு கேளும்மா உன் புருஷன் உனக்கு சொத்து வைக்கலையா. உனக்கு காசு வேண்டாமா" அவள் அம்மாவை ஏற்றி விட்டாள்.

அம்மா பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

"அம்மாவுக்கு எதுக்கு சொத்து. நான் அம்மாவைப் பாத்துக்கறேன். அவங்களுக்கு எது வேணும்னாலும் என்னை கேட்டு வாங்கிப்பாங்க. நீ மறுபடியும் எனக்கும், அம்மாவுக்கு நடுவுல சண்டை மூட்டி விடணும்னு பார்க்கறே. இதுவும் நடக்காது போ"

"எங்க போகச் சொல்றே"

"அடிக்கடி இங்க வந்து தொந்தரவு பண்ணாத. உன் வீட்டோட இரு. போ" - என்று கடுமையாய் திருஞானம் பேசினான்.

அவள் மார்பில் அடித்துக்கொண்டு அழுதாள். தாரிணியின் அழுகை அம்மாவை அசைத்தது. "போதும்டி. சும்மாயிரு" என்று கோபமும் அதட்டலுமாய்ப் பேசினாள்.

"திருஞானம் நீ பேசறதும் நல்லாயில்லை. எனக்கு ரெண்டு குழந்தைங்களும் முக்கியம். அவளோட புருஷனுக்கு அரசாங்க உத்தியோகம். குறைச்சலான சம்பளம். அவ சந்தோஷமா இருக்கறதுக்காக கேக்கறா. மாட்டேன்னு சொன்னா என்ன அர்த்தம்" - அம்மா திருஞானத்திடம் லேசான கோபத்துடன் கேட்டாள்.

"அவ காசு கேட்டதுக்கு மாட்டேன்னு சொல்லலைம்மா. பங்கு கேட்டதுக்குதான் மாட்டேன்னு சொன்னேன்."

"ரெண்டும் ஒண்ணுதானேடா"

"இல்லைம்மா. அது வேற. இது வேற. காசு, முடிஞ்சா தருவேன். பங்கு, நான் மாசாமாசம் கப்பம் கட்டியாகணும். பங்கு கொடுக்கற அளவுக்கு அவங்களோட காசு எதுவும் என் பிசினஸ்ல இல்லை. நீ எதுக்காக அவளை ஆதரிச்சுப் பேசறேன்னு எனக்குப் புரியலை" திருஞானம் அம்மா மீதும் கோபப்பட்டான்.

இந்தச்சண்டையில் வாய்திறக்காது பாலாம்பிகா பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் காலை பூஜையறையில் மாடத்திலுள்ள பழம்பூக்களை எடுத்துப்போட்டு, பூஜைமாடத்தை 'துடைத்து வை' என்று அம்மா உத்தரவிட 'சரி' என்று பாலாம்பிகா பதில் சொன்னாள்.

அப்போது பரசுராமனிடமிருந்து டெலிபோன் வந்தது. திருஞானம் வெளியே போயிருந்ததால், பாலாம்பிகா அவருக்கு பதில் சொன்னாள். விவாதித்தாள். பிறகு பாத்ரூம் பக்கம் போய்விட்டு வந்தாள். குளித்தாள். பிறகு பூஜைமாடம் தொடமுடியாது என்று தெரிந்துவிட்டது. போகிற திருஞானத்தோடு கார் ஏறி பதிப்பகம் நோக்கிப் போனாள். என்ன என்று வழியில் பளிச்சென்று தலையிலடித்துக் கொண்டாள். என்ன என்று திருஞானம் கேட்டான்.

"அம்மா பூஜை மாடம் துடைச்சு வைக்கச் சொன்னாங்க. நான்

'முடியாதும்மா'ன்னு சொல்லணும்னு நினைச்சேன். மறந்து போச்சு"

"ஏன் முடியாது?"

"அம்மா சொல்றபோது சரின்னுதான் சொன்னேன். பரசுராமன் சார்கிட்ட பேசிட்டு குளிக்கப்போகும்போது நான் பூஜைமாடம் தொடற துக்கு லாயக்கில்லைலன்னு தெரிஞ்சுபோச்சு. அதை ஒரு வார்த்தை அம்மா கிட்ட சொல்லிட்டு வரணும்னு நினைச்சேன். மறந்து போச்சு"

"போய் டெலிபோன் பண்ணிக்கலாம் போ" திருஞானம் சொன் னான்.

அவர்கள் பதிப்பகம் போய் இறங்கினார்கள். கார் கதவு திறந்து மூடியதும், அங்கே அவர்களுக்கு பிரச்சனைகள் காத்திருந்தன.

"ஏங்க ஒரு தப்பு நடந்துபோச்சு." மேனேஜர் ஐயர் உள்ளே நுழைந்தவுடன் சொன்னார்

"என்ன 'ஆச்சு?"

"உயர்தர சைவ சமையல்னு டைட்டில். கீழே என்ன பிரிண்ட் பண்ணியிருக்கான் பாருங்க"

திருஞானம் பார்த்தான். பெரிய மீனும், கோழியும் கருப்பு வண்ணத்தில் கோட்டு ஓவியங்களாய் வரையப்பட்டிருந்தன. அதேபோல இரண்டாயிரத்து ஐநூறு ரேப்பர்கள் அச்சிடப்பட்டிருந்தன.

"சிரிக்கமாட்டானா யாராவது. ஓவியர்கிட்ட கொடுத்துட்டு பாக் காத அப்படியே அனுப்பிச்சிட்டோம். அதான் தப்பாப் போச்சு"

"யார் அந்த ஓவியர். கூப்பிடுங்க அவரை"

ஓவியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

"என்னாங்க ஆச்சு. பாலாம்பிகா அம்மா. ஒரு சமையல் புத்தகத்துக்கு டிராயிங் போடணும் அப்படின்னாங்க. சரி போட்டுத் தரேம்மான்னேன். நல்லபடியா போடுங்கன்னு சொன்னாங்க. எனக்கு சமையல்னவுடனே அசைவம்தான் ஞாபகம் வந்தது. அதனால ஒரு படத்தைப் பார்த்து, வட இந்திய புக்கைப் பார்த்து நான் இந்த டிராயிங்கை வரைஞ்சேன். உயர்தர சைவ சமையல்னு டைட்டில் என் கிட்ட சொல்லலீங்களே"

"சரி படம் வந்து லெட்டரிங் எழுதி யார் பாத்தது?" - திருஞானம் கேட்டான்.

"நீங்கதான் பாத்தீங்க திருஞானம்" மேனேஜர் ஐயர் அவனிடம் பேசினார்.

திருஞானம் தலையிலடித்துக் கொண்டான். 'ஆமாம்' என்றான்.

"ஒரு பிரச்சனை இருக்கு பாலாம்பிகா"

"என்னங்க"

"எனக்கு கண்ணு கொஞ்சம் சரியா தெரியலை"

"ஐயையோ" பாலாம்பிகா திகைத்தாள்.

"இந்தப்படம் பாத்தேன். இந்த டைட்டிலும் பாத்தேன். ஆனால், இந்தப்படத்தில இருக்கறது மீனு, கோழின்னு எனக்கு மனசில பதியலை. பார்வை கொஞ்சம் டல்லா இருந்தது. வாழைக்காய், கத்தரிக்காய்னு காய்கறியா போட்டு வைச்சிருக்காரு அப்படின்னு யோசனை பண்ணி 'சரி' ன்னு பிரஸ்ஸுக்கு அனுப்பிச்சுட்டேன். என் பார்வையில ஒரு சின்ன கோளாறு வந்திருக்கு."

"என்னா இப்படி நிதானமா சொல்றீங்க படிக்கறவங்களுக்கு, பதிப்பகத்துல வேலை செய்யறவங்களுக்கு நிச்சயமா கண்ணாடி போட நேர.... நீங்க கொஞ்சம் பாத்திருக்க வேணாமா. கண்ணு பிளர்ராவுதுன்ன



வுடனே டாக்டர்கிட்ட போகவேணாமா. என்ன போங்க"

"சரி. இதை என்ன பண்றது?"

"கவலைப்படாதீங்க எதாவது பண்ணலாம். சைவத்துக்கு முன் னாடி 'அ' போட்டா அசைவ சமையல். உயர்தர அசைவ சமையல்னு ஒரு புத்தகம் போடுவோம்."

"சே, என்ன ஒரு முட்டாள்தனம். இதுவரைக்கும் இப்படியொரு தப்பு பண்ணதேயில்லை. தேவையில்லாம ஒரு தப்பு பண்ணிட்டேன்" - திருஞானம் திரும்பத் திரும்ப புலம்பிக் கொண்டிருந்தான். மேனேஜர் ஐயரும், பாலாம்பிகாவும் அவனை சமாதானப்படுத்தினார்கள். 'தவறு தன்னுடையது' என்று பாலாம்பிகா சொன்னாள்.

"இல்லீங்க நான் பாத்து இருக்கணும். நீங்க பாத்ததுனால விட்டுட்டேன். இனிமே அப்படி இடையவே கிடையாது. நீங்க பார்த் தாலும், நான் பார்க்காம ஒரு விஷயமும் போகக்கூடாது" ஐயர் கூறுரைத் தார்.

அந்தப் பிரச்சனையில் வீட்டில் அம்மாவிடம் பூஜை மாடத்தை சுத்தம் செய்ய முடியாது என்று சொல்லவேண்டிய விஷயம் மறந்து போயிற்று.

பன்னிரெண்டு மணிக்கு அம்மா பூஜை மாடத்தைப் பார்த்தாள். விக்கிரகங்கள் நேற்றைய பூவோடு இருந்தன.

"சொல்லியும் செய்யலை. பதிப்பகம் முக்கியம்னா அப்ப இங்க பூஜை என்னத்துக்கு. பதிப்பகத்துலயே பண்ணட்டும். இங்க வேண்டாம்."

அம்மா ஒரு பிளாஸ்டிக் பக்கெட் கொண்டு வந்தாள். விக்கிரகங் களை அதில் போட்டாள். கொண்டு போய் குப்பைக்கூடை இருக்கு மிடத்தில் வைத்துவிட்டாள். 'ஒருகணம் தேவையில்லாமல் கோபப் படுகிறோமோ' என்று தோன்றியது. ஆனால் தேவைதான் என்று இன் னொரு மனம் சொல்லிற்று. இப்படி கோபப்படாவிட்டால் மருமகள் தலைக்கு மிஞ்சிப்போய் விடுவாள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று அவளுக்கு ஆசை வந்தது.

'பொண்ணு லாபத்தில பங்கு கேக்கறா. கொடுத்தா என்ன, எல்லாம் பொண்டாட்டி பேச்சை கேட்டுகிட்டு ஆடறான். நாளைக்கு நமக்கும் இல்லேன்னுவான். எனக்கும் இதில் பங்கு இருக்கு. ஆனா, நான் பங்கு கேட்டேனா. பொண்ணு கேக்கிறபோது என் பங்கும் சேத்து இல்லை அவளுக்கு கொடுக்கணும். கொடுக்க முடியாதுன்னு சட்டதிட்டமா பேச றானே. அவ வந்தநாள்லேர்ந்து தங்கச்சி பிடிக்காம போயிடிச்சி. அப்ப நானும் பிடிக்காத போயிடப்போறேன்.

இவளுக்கு என்ன திமிரு பாரு. வேலை சொன்னபோது சரின்னு சொல்லிட்டு, அப்புறம் இங்க போன்ல பேசி, அங்க போய் நின்னு பேசி, டக்குன்னு உடுத்தி பவுடர் போட்டுகினு போயிட்டாளே' அம்மா படபடத்தாள். ஆத்திரப்பட்டாள்.

பிற்பகல் சாப்பாட்டிற்கு புருஷனும், மனைவியும் வந்தபோது பூஜைமாடம் காலியாக இருப்பதைப்பார்த்து திடுக்கிட்டார்கள்.

"அம்மா பூஜைமாடம் காலியா இருக்கு"

"இருக்கட்டும்"

"எங்கம்மா விக்கிரகங்கள்லாம்"

"என்னத்துக்கு உனக்கு விக்கிரகம்"

"ஏம்மா துடைச்சு வைக்க வேணாமா"

"அதான் துடைச்சு துடைச்சி தான் வைச்சிருக்கீங்களே அப்புறம்

என்ன?"

"என்னம்மா பேசறீங்க?"

"நான் ஒண்ணும் பேசலைடி" - அம்மா சிடுசிடுத்தாள்.

"விக்கிரகங்கள்லாம் எங்க?"

"குப்பைத்தொட்டிகிட்ட இருக்கு பாரு" - அம்மா வேகமாகப் பேசினாள்.

பாலாம்பிகா ஓடிப்போய் பார்த்தபோது வெண்கல விக்கிரகங்களும், சக்கரங்களும் மனைப்பலகையும், ஒரு பக்கெட்டில் போடப்பட்டு குப்பைத்தொட்டிக்கு அருகே இருந்தது. பாலாம்பிகா மனம் நொந்தாள். கண்ணில் நீர் கட்டியது. புருஷனை அழைத்தாள். சுட்டிக்காட்டினாள்.

திருஞானம் வேதனைப்பட்டான்.

"சரி. இப்ப பேசினா சண்டை வரும். எடு. எடுத்து துடைச்சு வை."

"நான் எடுக்கக்கூடாதுங்க. ஏன் உங்களுக்கும் புரியலை. இதைப் போய் அம்மாகிட்ட சொன்னா, நான் பொய் சொல்றேன்னு நினைப்பாங்க."

"விடு. நான் பாத்துக்கறேன். நான் துடைக்கறேன்."

அவன் பக்கெட்டை எடுத்து வந்தான். வாஷ்பேசினில் ஒவ்வொரு விக்கிரகத்தையும் அலம்பினான். சந்தன குங்குமம் இட்டான். மனைப் பலகையில் கோலம் போட்டான். குளிர்பெட்டியிலிருந்து பூவை எடுத்து எல்லாவற்றிற்கும் சார்த்தினான். விளக்கேற்றினான். ஊதுவத்தி ஏற்றி வைத்தான்.

"ஏன். உன் பொம்பளைக்கு இதெல்லாம் செய்யத் தெரியாதா" - அம்மா கேலியும், கோபமுமாய் கேட்டாள்.

"ஆமாம்மா. அவளுக்கு ஒண்ணும் செய்யத் தெரியாது. சமைக்கத் தெரியாது. பூஜைமாடம் துடைக்கத் தெரியாது. வாசல்ல கோலம் போடத் தெரியாது. அவளுக்கு பதிப்பகம்தாம்மா தெரியும். என்ன பண்ணச் சொல்றே?

"எனக்கு வந்திருக்கற பொண்டாட்டி, ரொம்ப மோசமான பொம்பளை, ராட்சஸி. அதனாலதான் நானே துடைக்கறேன். உனக்கு சந்தோஷமா இருக்கா. போ. அக்கம்பக்கத்துல நாலு வீட்டுக்குப்போய் என் மருமக புள்ளையை ஆட்டி வைக்கறான்னு சொல்லு. உனக்கும் பொழுதுபோகணும்லே" திருஞானம் குத்தலாகப் பேசினான்.

நேரடியாக, இரைச்சலாக போடும் சண்டையை விட, இப்படி, மிருதுவாக, குத்தலாகப் பேசும் வாசகங்கள் மிகுந்த பாதிப்பை ஏற் படுத்தும்.

"என்னைக்குமா நான் அப்படி சொன்னேன். நாக்கு மேல பல்லைப்போட்டு ஏண்டா அடாத பேச்சு பேசறே" அம்மா கோபப் பட்டாள்.

"ஒரு தாயார் பண்ணுவாளா இப்படி. வீட்டுல இருக்கிற அத்தினி சாமியையும் எடுத்து குப்பைத் தொட்டிக்குள் வைச்சிருக்கியே. ஒரு அம்மா பண்ணுவாளா இப்படி. எவ்வளவு ஆங்காரம். ஆத்திரம் இருந்திருந்தா இப்படி செஞ்சிருப்பே. என்ன... ஒரு நாள் பூஜைமாடம் துடைச்சு பூ போடாட்டி என்ன. ஒரு நாள் கோலம் போடாட்டி என்ன. எத்தினி நாள் நீ கோலம் போடாம இருந்திருக்கே. இன்னைக்கு ஒருநாள் அவ



செய்யலைன்னவுடனே அத்தினியும் வாரிக்கொண்டு போய் ஓரமா வைச்சிருக்கியே. இப்படி சாமியெல்லாம் குப்பைத்தொட்டிகிட்ட வைக்கறேன்னா என்ன அர்த்தம். நாங்க குப்பையா போகணும்னு அர்த்தம். இதானே உன் ஆசிர்வாதம்.

சே... எவ்ளோ நல்ல பொம்பளை நீ. கெடுத்து நாஸ்தி பண்ணியிருக்கா அந்த நாய்."

"தேவையில்லாத தாரிணியைப் பத்திப் பேசாத"

"நிச்சயம் சொல்லுவேன். என் தங்கச்சி நாயால தான் நீ நாசமாய்ப் போறே. நீ ரொம்ப நல்ல பொம்பளை. உன்கிட்ட இவ்ளோ ஆத்திரம் கிடையாது. உன்னைக் கெடுத்திருக்கா அவ. இவகிட்ட என்ன குறை கண்டே. ஏன் இது மாதிரி பண்றே.

இது நான் இருக்கற வீடில்லையா. நாங்க வாழ வேண்டிய வீடில்லையா. என் குழந்தைங்க இங்க வாழ வேண்டாமா. சாமீ பொம்மையெல்லாம் தூக்கி குப்பைத் தொட்டியில போடற அளவுக்கு நான் கேவலமா போயிட்டனா. இந்த வீடு கேவலமா போயிடுச்சா. உனக்கு என்ன குறை வைச்சோம்னு இந்த மாதிரி பண்றே."

அவன் உரத்துப் பேசினான். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் காது கொடுத்து கேட்கத் துவங்கினார்கள். முதன் முதலில் அந்த வீட்டில் தாயாருக்கும், மகனுக்கும் உரத்த குரலில் சண்டை வந்தது. பாலாம்பிகா இடையில் புகுந்தாள்.

"அம்மா. தயவுசெஞ்சு புரிஞ்சுக்குங்க. நீங்க ஒண்ணு சொல்லி நான் செய்யாம போவேனா. நீங்க சொல்றபோது சரின்னு சொன்னேன். போன் பண்ணிட்டு பாத்ரூம் பக்கம் போனேன். எனக்கு செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுப் போச்சி. உங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கணும்.

'அம்மா. நான் வீட்டுல இல்லை. விலக்கா இருக்கேன்' அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கணும். அடுத்தடுத்த மற்ற வேலைகள்ல மறந்துட்டேன். வண்டியில போகும்போது நினைச்சிகிட்டேன். 'ஐயையோ சொல்லலியே'ன்னு இவர்கிட்டேயும் சொன்னேன். ஆபீஸ் போய் சொல்லிக்கலாம்னாரு. ஆபீஸ் போய் இறங்கினோம். இறங்கனவுடனே அங்க ஒரு பிரச்சினை, அப்பவும் மறந்து போச்சு. இங்கவந்து பூஜை ரூமை பார்த்தப்புறம்தான் மறுபடியும் ஞாபகம் வந்தது. தப்பு என்னதுதான். ஆனா அதுக்காக இப்படி எல்லாத்தையும் தூக்கி குப்பைத்தொட்டியிலே போடுவாங்களா. நான் உங்களுக்கு என்னம்மா கெடுதல் பண்ணேன்" கண்களில் நீர் வழிய பாலாம்பிகா கேட்டாள்.

"கோவமா இருந்தா திட்டிடுங்கம்மா. இங்க வாடி நாயேன்னு சொல்லுங்கம்மா வந்து நிக்கறேன். அதுக்கும் மேல கோவமா இருந்தா பளீர்னு ஒரு அறை வைங்கம்மா. வாங்கிக்கறேன். ஆனா. வீட்டில இத்தினி வருஷமா கும்பிட்டுக்கிட்டு இருக்கற தெய்வங்களைப் போய் குப்பையில போட உங்களுக்கு எப்படி மனசு வந்தது."

"நீ சும்மா இரு பாலாம்பிகா. அந்த நாய் இங்க வரக்கூடாது. நான் இப்ப போன்போட்டு சொல்றேன். இந்த வீட்டுக்கு என் தங்கச்சி வரவேண்டிய அவசியம் கிடையாது."

"டேய் நிறுத்தடா. இது என் வீடு. அவளை இந்த வீட்டுக்கு வரக்கூடாதுன்னு சொல்றதுக்கு நீ யார்" அம்மா சீறினாள்.

"அப்படியா... அப்படியா..." திருஞானம் படபடத்தான்.

பாலாம்பிகா ஓடி வந்து திருஞானத்தின் அருகில் நின்றாள். அவன் வாயைப் பொத்தினாள்.

"தயவு செய்து எதுவும் தப்பா பேசிடாதீங்க. அவங்க கேக்கறது ரைட். இது அவங்க வீடு. அவங்க பொண்ணு இந்த இடத்துக்கு வரலாம். உங்க தங்கச்சிங அண்ணனைத் தேடிகிட்டு வரலாம். இது தப்பில்லை. வரக்கூடாதுன்லாம் சொல்லவே சொல்லாதீங்க."

"என்னடி அவன் பெரிசா சொல்லிடப் போறான். நான் இங்க இருக்க மாட்டேன். மாமனார் வீட்டோட போறேன்னு சொல்லப் போறான். போகட்டுமேடி. போ. உன் புருஷனைக் கூட்டிகிட்டு போ. ஆம்படையானும், பொண்டாட்டியும் எங்கயாவது போய் சௌகரியமா இருங்க" அம்மா வெறுப்போடு பேசினாள்.

புருஷனும், மனைவியும் விக்கித்துப் போனார்கள். திருஞானத்தின் கண்கள் கலங்கின. மெல்ல எழுந்து அறைக்குள் போய் கட்டிலில் உட்கார்ந்து கொண்டார்கள். பாலாம்பிகா அவனைப் பின் தொடர்ந்தாள். மெல்ல அவன் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டாள். திருஞானம் விசும்பினான்.

"வேணாம், வேணாம் தப்பான நேரம். விஷக்கடி வேளை. பேசி தொலைச்சுட்டோம். விட்ருங்க. தயவு செய்து இதோட விட்ருங்க. மறந்துடலாம். அம்மா ஏதோ கோபத்தில சொல்லிட்டாங்க. எதையும் ஞாபகம் வைச்சுக்காதீங்க" - பாலாம்பிகா தேற்றினாள். அவனை தடவித் தடவி சந்தோஷப்படுத்தினாள்.

ஆனால் வெட்டுப்பட்ட காயம் மனதிலிருப்பது அகல முடியாமல் ரணமாகவே வெகுநாள் இருந்தது.

பாலாம்பிகா சூலானாள். மூன்று மாதம் வரை வீட்டில் இருந்து விட்டு, பிறகு தாயார் வீட்டிற்கு சீராடப் போனாள். அவளுக்கு வாந்தியும், தலைசுற்றலும் அதிகமாக இருந்தன. சிலர் உடம்பு வாகு அப்படித்தான் என்றும், கவலைப்பட ஏதுமில்லையென்றும் அவள் ஆரோக்கியமாக இருக்கிறாளென்றும் டாக்டர்கள் சொன்னார்கள். நல்ல ஓய்வு தேவை என்றார்கள். பாலாம்பிகாவிடம், பதிப்பகத்திற்கு வர வேண்டாம். தேவைப்பட்டால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று திருஞானம் சொன்னான். மறுபடியும் அவனுக்கு வேலைப்பளு அதிகரித்தது.

'சரி. நல்லா இரு. போயிட்டு வா, ரொம்ப சந்தோஷம்' என்று பொதுப்படையாய் அம்மா பேசினாளே தவிர அடிமனதிலிருந்து பாலாம்பிகாவை ஆசிர்வதிக்கவில்லை. கட்டித் தழுவி முத்தமிடவில்லை. பாலாம்பிகாவிற்கு அது பெரிய குறையாகவே இருந்தது.

'நான் என்ன தப்பு பண்ணேன். எதுக்காக என்னை இவ்வளவு வெறுக்கறாங்க. பொண்ணு பிடிச்சா கொண்டாடட்டுமே. அதுக்காக, என்னை எதுக்கு வெறுக்கணும்' என்று அழுதாள். அவளை அழ வேண்டாம் என்று திருஞானம் தேற்றினான்.

எல்லா விஷயமும் தெரிந்த நடேசன் திருஞானத்தின்மீது பாசமழை பொழிந்தார். அப்பா இல்லாத குறையை, அம்மா கோபித்துக் கொண்டிருக்கிற வேதனையை நடேசனுடைய நட்பால் திருஞானம் சற்று மறந்தான்.



நடேசனுடைய வீடும் திருஞானத்திற்கு சீராடிற்று. நடேசனுடைய உறவுக்காரர் ஒருவரின் திருமணம் நடந்தபோது, திருஞானத்தையும், நடேசனையும் முதல் வரிசையில் உட்கார வைத்து மிகப்பெரிய மரியாதை செய்து அவர்கள் தலைமையில் திருமணம் நடத்தினார்கள்.

ஒரு நாள், பதிப்பகத்தின் வாசலில் நுழைய, தட்டுப்பந்தல் போடப் பட்டிருந்தது. சரிகையோடு கூடிய வண்ணத் துணிகள் சுற்றப் பட்டிருந்தன. வாழை மரமும், கமுகும் மாட்டப்பட்டிருந்தன.

"என்னுங்க ஆச்சு. என்ன இன்னைக்கு" திருஞானம் ஆவலோடு கேட்டுக்கொண்டே நுழைந்தான். பதிப்பகத்தின் பின்பக்கத்திலிருந்து புகை வந்தது. போய் பார்த்தபோது, அங்கு பெரிய பாத்திரம் நிறைய கதம்ப சோறு தயாராகிக் கொண்டு இருந்தது.

"என்னங்க விஷயம் அறுபத்து மூவரா?"

"இல்லீங்க தம்பி. இன்னைக்கு உங்க பிறந்தநாள்" என்று பதிப்பகத்தில் வேலை செய்பவர்கள் ஞாபகப்படுத்தினார்கள்.

"ம்... ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்." அவர்களை நோக்கி ஆவலோடு கேட்டான்.

"நடேசன் ஐயாதான் சொன்னாரு. இன்னைக்கு நட்சத்திரப்படி உங்க பிறந்தநாளு. அதனால அன்னதானம் பண்ணுவோம் அப்படின்னாரு. நாங்களும் ஆளுக்கு கொஞ்சம் காசு போட்டு கதம்ப சோறு பண்ணியிருக்கோம். பகல் பன்னிரெண்டு மணிக்கு அன்னதானமனு அங்கங்கே போர்டு எழுதி வைச்சிருக்கோம். இது தவிர மேனேஜர் ஐயா கிருஷ்ணா ஸ்வீட் ஸ்டால்லர்ந்து ஐநூறு பால்கோவா வாங்கிட்டு வர போயிருக்கார். ஒரு கையில பால்கோவா. இன்னொரு கையில் கதம்ப சாத பொட்டலம் அப்படின்னு கொடுக்கப்போறோம். இன்னைக்கு பகல் வரைக்கும் இதான் வேலை" என்று சொன்னார்கள்.

திருஞானம் நெகிழ்ந்து போனான். என்ன இது என்று நடேசனை லேசாகக் கடிந்து கொண்டான்.

"கேக் வெட்டுறது நம்ம மரபு இல்லே. வாரி வாரி வழங்கறதுதான் நம்ம மரபு. நீங்க வாரி வழங்கினா உங்க வம்சம் நல்லா இருக்கு. இன்னைக்கு உங்க கையால எல்லாருக்கும் சோறு கொடுக்கணும். அலுக்காத கொடுக்கணும்" என்று சொன்னார்.

பன்னிரெண்டு மணி உச்சி வெய்யிலில் பெரிய ஜனக்கூட்டம் திரள, சகலருக்கும் பொட்டலம் பொட்டலமாக திருஞானம் சோறு கொடுத்தரன். பதிப்பகத்தில் வேலை செய்பவர்கள், அனைவரையும் ஒழுங்குபடுத்தினர்.

"நல்லா இருக்கணும்யா. நல்லா இருக்கணும். உங்களுக்கு பிறந்த நாளா நல்லா இருக்கணும்யா" என்று நூற்றுக்கும் மேற்பட்ட ஏழைகளும், எளியவர்க்ளும் வாழ்த்தினார்கள்.

திருஞானம் நடேசனை கிழக்கு பார்த்து நிற்க வைத்து காலில் நெற்றிபட விழுந்து வணங்கி மெல்ல குலுங்கினான்.

நடேசன் அவனை வாரி எடுத்துக் கொண்டார். அணைத்துக் கொண்டார்.

"பிள்ளை நல்ல இருக்கான் அப்படின்னு பெருமைப்படறதை விட மாப்பிள்ளை நல்லா இருக்கான். என் பொண்ணை நல்லபடியா வைச்சிருக்கேன் அப்படின்னும் ஒரு நிலைமை இருக்கே. அதவிட

சந்தோஷம் மனுஷனுக்கு வேற எதுவும் இருக்க முடியாது. பிள்ளையோட நட்பா இருந்துடலாம். மாப்பிள்ளையோட சினேகிதமா இருக்கறதுன்றது எல்லாருக்கும் கிடைக்குமா. நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி திருஞானம். நீ எனக்கு மாப்பிள்ளையா கிடைச்சதுக்கு பூர்வ ஜென்மத்துல நான் புண்ணியம் பண்ணி இருக்கணும். வயசான காரணத்தினால நீ என் கால்ல விழுந்து நமஸ்காரம் பண்றே. ஆனால் என் பொண்ணு மேல நீ வெச்சிக்கிற அன்புக்கு, அவ மேல வெச்சிருக்கிற மதிப்புக்கு, அவளைக் கொண்டாடுகிற பாங்குக்கு நான் தான் உன் கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணனும். அது உனக்கு நல்லதில்லைன்றதனால. மனசார உனக்காக தினம் தினம் நான், 'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்'னு பாட்டு படிக்கிறேன். நல்லபடியா குழந்தை பொறக்கணும்னு 'ஓம் நமச்சிவாய' ஜபம் நூத்தியெட்டு பண்றேன். இப்படி சோறு போடணும்ற ஐடியா கொடுத்ததே உங்க மேனேஜர் ஐயர்தான்."

திருஞானம் மேனேஜர் ஐயரையும் வணங்கினான்.

"வீடுன்னா! 'கச, முச'ன்னு இருக்கத்தான் செய்யும். வாசற்படி, வராண்டா, கூடம்னு இருந்தா கொல்லைப்புறமும் கூடவே இருக்கு. சாக்கடைன்னு ஒரு இடம் இருக்கும். நாலு இடமும் இருந்தாதான் அது வீடு. அதுக்கெல்லாம் கவலைப்படாதீங்க. தானா சரியாயிடும். உங்க தங்கச்சிக்கு புரியலைன்றது நல்லாத் தெரியுது. ஒவ்வொருவருக்கும் விஷயங்கள் ஒவ்வொரு காலகட்டத்தில புரியும். பத்து வயசுலயே வாழ்க்கையைப் புரிஞ்சவன் நான். நாப்பது வயசாகியும் வாழ்க்கை என் புள்ளைக்கு புரியலைன்னு என்னுடைய அபிப்ராயம். உங்க தங்கச்சிக்கு இப்ப புரியாத வாழ்க்கை இன்னும் பத்து வருஷம் கழிச்சி புரியலாம். அவங்களுக்கு வாழ்க்கை புரியணும்னு வேண்டிக்கறதுதான் நம்முடைய கடமையே தவிர, வீட்டுக்கு வராதேன்னு சட்டுன்னு சொல்லிடாதீங்க தம்பி. அது நல்லதில்லை" மேனேஜர் நாசுக்காய் உபதேசித்தாள்.

காலங்கள் உருண்டோடின.

பாலாம்பிகாவின் அண்ணன் வெளிநாட்டிலிருந்து வந்தான். தங்கைக்கு ஏகப்பட்ட பரிசுகள் கொண்டு வந்திருந்தான். மாப்பிள்ளை தன் தங்கையை மிக சௌக்கியமாய் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை தாய் மூலம் தொலைபேசி வழியே கேட்டுத் தெரிந்து கொண்டவன், மாப்பிள்ளைக்கென்று விதம் விதமான சட்டைத் துணிகள், பேண்ட்களும் வாங்கி வந்தான். பத்து, இருபது சென்ட் பாட்டில்களை கொண்டு வந்து அடுக்கினான். இசைபாடும் வால்கிளாக், டேபிள், அலமாரியில் வைத்துக் கொள்கின்ற அழகான பீங்கான் பொம்மைகள், விதவிதமான சமையல் உபகரணங்கள் என்று பரிசளித்தான்.

"ஜப்பான்ல வேலை முடிஞ்சு போச்சு. அதே கம்பெனி என்னை ஸ்டேட்ஸ்க்கு மாத்தப் போறாங்க. அங்க போய் செட்டிலாகப் போறேன். ஸ்டேட்ஸ்ல உங்க புஸ்தகங்கள் நல்லா போகுதாமே. என் ஒய்ப் பேருக்கு ஏஜென்ஸி கொடுங்க, நான் நல்லா வித்துத் தர்றேன்" என்று வியாபாரம் பேசினான். என்ன முதல் போட வேண்டும் என்று கேட்டான். மரியாதைக்காக இரண்டாயிரம் டாலர் டெபாசிட் செய்தான்.

அவன் ஊரிலிருக்கும்போதே பாலாம்பிகா, மிக அழகான ஒரு ஆண் குழந்தைக்கு தாயானாள்.

"அடடா, சதய நட்சத்திரத்துல ஆம்பளை பிள்ளைன்றது ரொம்ப



பிரமாதமான விஷயம். ராஜபோகம் அப்படின்னு இதுக்கு அர்த்தம். பையன் தெளிவா இருப்பான். கண்டிப்பா இருப்பான். அதிகாரம் பண்றவனா இருப்பான். அதே நேரத்தில அன்பால ஆட்களை வளைக்கறவனாகவும் இருப்பான். என்ன கொஞ்சம் உசரம் மட்டாதான் இருக்கு. அம்மா உயரம்தான் இருப்பான்னு வைச்சுக்கோங்க. இது ராஜ ராஜசோழன் நட்சத்திரம். ராஜராஜ சோழனும் ரொம்ப உயரம் இல்லே. உங்களுக்கு தெரியுங்களா" - மேனேஜர் ஐயர் குழந்தையைப் பற்றி விவர மாகச் சொன்னார்.

அம்மா வந்து குழந்தையைப் பார்த்துவிட்டுப் போனாள். தன் கழுத்தில் கிடந்த தங்கச்சங்கிலியை எடுத்து குழந்தை கழுத்தில் மாட்டி னாள்.

"நாங்க என்னென்ன செய்யணும்னு நினைக்கிறீங்களா அத்தினி யும் செய்யறேன்" என்று சம்பந்தி அம்மாளை பார்த்துச் சொன்னாள்.

சம்பந்தியம்மாள் எதுவும் சொல்லாமல் இருக்க, "டேய் திருஞானம். குழந்தைக்கு நிறைய நகைகள் போடுங்கடா. அது ஒரு மரியாதை. அவங்க வீட்டுக்கு நம்ம நகைகளை கொடுக்கறது ஒரு சடங்கு" என்று அம்மா சொன்னாள்.

குழந்தைக்கு காப்பும், கொலுசும், மோதிரங்களும், இன்னும் ஒரு தங்கச்செயினும் செய்யப்பட்டன.

தாரிணி வாரம் தவறாமல் வீட்டிற்கு வந்து போய் கொண்டு இருந் தாள். தன் மகனுக்காக படிப்புச் செலவை அம்மா ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தி மாதாமாதம் இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு இருந்தாள்.

'ஆடிமாசம் காசு கொடு. கன்னிப்பொங்கலுக்கு காசு கொடு. தீபாவளிக்கு புடவை எடுத்துக்கொடு. அவருக்கு பிறந்தநாள் வருது சட்டைத்துணிமணி எடுத்துக்கொடு. எனக்கு பிறந்தநாள் வருது. தங்கத்துல ஏதாவது பண்ணிப்போடு, பிள்ளைக்கு பிறந்தநாள் வருது வெள்ளியில எதனா செய்து கொடு' என்று விதம் விதமாய் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

இந்தக் கேள்விகளெல்லாம் அம்மா மூலம் திருஞானத்திற்கு வந்தது. திருஞானம் எல்லாவற்றிற்கும் காசு எடுத்துக் கொடுத்தான்.

தாரிணி வந்து குழந்தையைப் பார்க்கவில்லை. தாரிணியின் புருஷன் பாலாம்பிகாவின் வீட்டிற்கு வந்து, ஆயிரத்தோரு ரூபாய் போட்டு குழந்தையின் கையில் கொடுத்து குழந்தையை கொஞ்சி விட்டுப் போனான்.

"ஏங்க உங்க ஒய்ப் இப்படிப் பேசறாங்க. ஏன் என் கூட எப்பவுமே மல்லுக்கு நிக்கறாங்க." என்று தாரிணியின் புருஷனான அந்தக் கேமரா மேனிடம் பாலாம்பிகா விசாரித்தாள்.

"அவ அப்படிதாங்க. நீங்க விலகி இருக்க முடியும். விலகி இருங்க. என்னால விலகியிருக்க முடியாது.

நான் விலகினா ஊர் கைகொட்டி சிரிக்கும். அதனால இவளோட நான் நரக அவஸ்தை பட்டுட்டுருக்கேன். நாங்க கீழேயிருந்து மேல வந்தவுங்க. இருபத்து மூணாயிரம் ரூபாய்ன்றது எங்களுக்கு பெரிய சம்பளம். 'நீ என்ன சம்பாதிக்கிறே. நீ சம்பாதிக்கிற லட்சணம்தான் எனக்குத் தெரியுதே அண்ணன் மாதிரி சம்பாதிக்க வேணாமா. நீ

வேலையை விட்டுட்டு வா'ன்னு கத்தறா. இது எனக்கு பிடிச்ச வேலை. நான் சந்தோஷமா செய்யற வேலை. கேமராமேன் ஆகணும்றது தான் சின்ன வயசுலயே என்னோட லட்சியமா இருந்தது. இப்ப அந்த வேலையை நான் நிறைவா செய்துகிட்டு இருக்கேன். இவ அழகுக்கு மயங்கி, 'சரி'ன்னு தலையசைச்சு இவளை கல்யாணம் பண்ணிகிட்டேன். இவ ஆசைக்கு தீனி போட என்னால முடியாதுங்க.

'தூர்தர்ஷன்ல லஞ்சம் வாங்க முடியாதா' அப்படின்னு கேக்கறா. நான் எப்படி இவளுக்குப் பதில் சொல்வேன். முடியாதுன்னு சொல்லிட்டேன். 'நீ ஒரு துப்பு கெட்ட ஆம்பிளைய்யா'ன்னு திட்டறா. சரின்னு பேசாம பொறுத்துகிட்டேன். இவ பேச்சைக் கேட்டு எங்கனா கைநீட்டி அவமானப்படறை விட, வீட்டுக்குள்ள இவகிட்டயே அவமானப்பட்லாம்னு மௌனமா இருக்கேன். ஒரு நாளைப்போல படுக்கையில மல்லாந்து படுத்துகிட்டு எப்படியெல்லாம் பேசறான்னு உங்ககிட்ட சொன்னா நீங்க சிரிப்பீங்க. என்னைக் கேவலமா ஒரு தெரு நாயை பாக்கறதுபோல பார்ப்பீங்க. என் வேதனை என்னோட போகட்டும். நான் உங்களுக்கு சொல்லிக்கிறதெல்லாம் ஒண்ணுதான். எப்படியாவது நாத்தனாரை சமாதானப்படுத்தி நட்பாயிடலாம்னு நினைக்காதிங்க. அவகூட நட்பாக முயற்சி செஞ்சா அதனால உங்களுக்கு தொந்தரவுதான் வரும். அந்த நாயை விலக்கியே வைங்க" - தாரிணியின் புருஷன் தெளிவாகச் சொன்னான். பாலாம்பிகா வியந்தாள்.

"ஒரு அஞ்சு லட்ச ரூபாய் கொடுங்களேன். அதை நாங்க பத்து பதிப்புல போட்டு உங்களுக்கு மாசாமாசம் எதனா தர்றோம்" பாலாம்பிகா கேட்டாள்.

"வேணாங்க. அந்த அஞ்சு லட்ச ரூபாய் இருந்தா நான் ஒரு கேமரா வாங்குவேன். சொந்தத்துல தோள்ல தூக்கிட்டு போய், நாலு புரோக்ராம் கவர் பண்ணி தூர்த்தர்ஷனுக்கே விப்பேன். டாக்குமெண்டரி தயார் பண்ணுவேன். எதுக்கு பதிப்பகத்துல போறது. உங்க தொழிலை நீங்க பண்றீங்க. என் தொழிலை நான் பண்ணனும். என் காசை என் தொழில்ல போட்டாதான் எனக்கு மரியாதை. நான் அதை சொன்னா, அவளுக்கு புரியலை எங்க அண்ணனுக்கு காசு கொடு. அவன்கிட்டே வட்டியும் முதலுமா வாங்கணும்றா. நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்.

இன்னும் ஒரு வருஷத்துல எனக்கு அஞ்சு லட்ச ரூபாய் சேர்ந்துடுங்க. நல்லதா ஒரு கேமராக வாங்கி. வெளிநாட்டுக்குக்கூட டாக்குமெண்டரி தயார் பண்ணி அனுப்பப்போறேன். 'தென்னிந்திய வெள்ளை நாரைகள்' அப்படின்னு ஒரு டாக்குமெண்டரி செய்து பி.பி.சிக்கு அனுப்பிச்சேன். ரொம்ப நல்லாருக்குன்னு பி.பி.சியிலேர்ந்து லெட்டர் அனுப்பிச்சிருக்காங்க. அவங்க அதை உபயோகப்படுத்தினா காசு கொடுப்பாங்க. அவங்ககிட்டேயிருந்து நல்லா இருக்குன்னு லெட்டர் வந்தது பெரிய விஷயங்க எனக்கும் எதிர்காலதைப் பத்தி நிறைய திட்டங்கள் இருக்கு. இவளுக்குப் புரியலை. என்ன பண்றது." அந்த கேராமேன் வருத்தப்பட்டான்.

"சரி. நான் உங்களுக்கு எதனா காசு தரட்டுமா. கேமரா வாங்க ஏன் அடுத்த வருஷம் வரைக்கும் பொறுத்திருக்கணும். இப்பவே எதனா காசு தரேன். வாங்கிடுங்களேன்" - திருஞானம் சொன்னான்.



"என்னன்னு வாங்கறது. அவகிட்ட சொன்னா அசிங்கமா பேசுவா. ஏற்கெனவே உங்களுக்கும், அவளுக்கும் தகராறு. இந்த நேரத்தில நான் காசுக்கு கை நீட்டினா அது உங்களையும் பாதிக்கும். என்னையும் பாதிக்கும்.

"அதெல்லாம் விடுங்க. நான் ரெண்டு லட்ச ரூபாய் தரேன். டக்குன்னு கேமரா வாங்கிடுங்க"

அவன் மௌனமாய் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். திருஞானம் இரண்டு லட்ச ரூபாய்க்கு அவன் பெயருக்கு ஒரு செக் எழுதி அவனிடம் நீட்டினான். மாப்பிள்ளை தயக்கத்தோட அந்த செக்கை வாங்கிக் கொண்டான்.

"இதை அவகிட்ட சொல்றதா வேணாமான்னு தெரியலை. சொன்னா என்ன செய்வான்னு புரியலை. கொஞ்சம் குழப்பமா இருக்கு. இப்போதைக்கு சொல்ல வேண்டாம்னு நினைக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான்.

அவனுக்கு என்ன சங்கடமோ, என்ன தோன்றியதோ தெரியவில்லை. அன்று இரவே மனைவியிடம் காசோலையைக் காண்பித்திருப்பான் போலிருக்கிறது.

மறுநாள் காலை, தாரிணி வீட்டிற்குள் புயல் போல நுழைந்தாள்.

"எம் புருஷனுக்கு கேமரா வாங்கி கொடுத்தா என்னை வாங்கிட்டதா அர்த்தமா. அந்தக்காசை நாங்க திருப்பித்தர முடியாது. பத்து லட்சத்துல இரண்டு லட்சம் சரியாப்போச்சு. மீதி எட்டுலட்சம் பாக்கி" தாரிணியின் பேச்சுக்கு திருஞானம் பதில் சொல்லவே இல்லை.

ஒரு நல்லநாளில், நல்லநேரத்தில் குழந்தையை நெஞ்சொடு அணைத்துக்கொண்டு வலக்கால் எடுத்துவைத்து பாலாம்பிகா வீட்டிற்குள் நுழைந்தாள். வம்சவிருத்தி என்பது எவ்வளவு பெரிய விஷயமென்று அந்த க்ஷணம் திருஞானத்திற்கு புரிந்துபோயிற்று இந்த கொஞ்சலும், அன்பும், சண்டையும், சமாதானமும், காசும், பலமும், அதிகாரமும் எல்லாம் மனிதனின் வம்சவிருத்தியைப் பொறுத்துதான். தனக்கு வம்சமே இல்லையென்று சொன்னால் அடுத்து மனிதர்களே பிறக்கப்போவது இல்லை என்று சொன்னால் இந்த உலகம் சோர்ந்து சுருண்டு போய் விடும். வெறுமே உயிர்வாழும்.

உலக வாழ்க்கையின் உற்சாகத்திற்கு காரணமே அடுத்த தலைமுறைதான். வாழ்க்கையின் பிடிப்புக்குக் காரணமே தன்னுடைய குழந்தைகளுக்கு தான் நல்லது செய்யவேண்டும் என்ற நினைப்புதான். இவன் என் பிள்ளை என்று நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிற சந்தோஷம் போல் மிகப்பெரிய சந்தோஷம் எதுவும் இல்லை.

குழந்தைக்கு தாத்தாவின் பெயர்வைப்பது மரபானாலும், அம்மா அந்தப்பெயரைக் கூப்பிட முடியாது. கூப்பிட்டுக் கொஞ்சமுடியாது. அது மரியாதைக்குறைவு என்பதால் வேறொரு பெயர் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. 'ப' என்ற எழுத்து குழந்தைக்கு நல்லது என்று சொன்னதால் பரமேஸ்வரன் என்று பெயர்வைத்தார்கள். 'பரமு' என்று கூப்பிட்டார்கள்.

பெயர் வைக்கிற வைபவம் சிறிய அளவில் திருஞானத்தின் வீட்டில் நடந்தது. குழந்தையை மடியில் போட்டு அதைச்சுற்றி ஓதுவார்கள் அமர்ந்து, காதுகுளிர பல்வேறு பதிகங்கள் பாடினார்கள். குழந்தையை அள்ளி தூக்கி காதில் 'பரமேஸ்வரன், பரமேஸ்வரன்,

பரமேஸ்வரன்' என்று மூன்று முறை இனிய குரலில் திருஞானம் கூறினான். குழந்தை 'ஆ' என்று பதிலுக்கு குரல்கொடுத்தது. எல்லோரும் கைதட்டினார்கள்.

இந்த விழாவுக்கு தாரிணியை வரச்சொல்லி திருஞானம் டெலிபோன் செய்திருந்தான். நேரே வந்து என்னையும் என் புருஷனையும் கூப்பிட்டால் வருவேன் என்று அம்மாவிடம் அவள் தகவல் சொன்னாள். 'இதுக்கெல்லாம் வேற ஆள் பாருங்க. எடுத்ததுக்கெல்லாம் நான் வந்துகிட்டு இருக்க முடியாது' என்று திருஞானம் சொல்லிவிட்டான்.

தாரிணியின் புருஷன் இதைப்பற்றி கவலையேபடவில்லை.

"புது கேமரா வாங்கிட்டேன் திருஞானம். ரொம்ப லேட்டஸ்ட் மாடல். மெட்ராஸ்ல யார்கிட்டயுமே இப்படி ஒரு கேமரா இல்லை. நிறைய ஆர்டர் புக் ஆகுது. நான் வேணா பங்ஷனுக்கு வந்து குழந்தையையும் உங்களையும் வீடியோ எடுக்கட்டுமா" என்று கேட்டான்.

அம்மா சிறுகுழந்தையை எடுக்கவேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் அவன் வரவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

"எனக்கும் என் தங்கைக்கும் சரியா ஒத்து வரலை. இதில உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே" என்று திருஞானம் கேட்க, "எனக்கு கொஞ்சம்கூட வருத்தமில்லை. நீ செய்த உதவிக்கு நான் காலமெல்லாம் உனக்கு நன்றியோட இருக்கணும். இருப்பேன். நீ கொடுத்த ரெண்டுலட்ச ரூபாய் இன்னும் மூணு வருஷத்துக்குள்ள நான் சர்வநிச்சயமா அடைச்சிடுவேன். இது அநாமத்து கணக்கு இல்லை. இது கடன். நான் மரியாதையோட இதைத் திருப்பி தந்திருவேன் திருஞானம். அப்பதான் உன்னைப்பார்த்து நான் கம்பீரமா நிக்க முடியும்" என்று டெலிபோனில் உரத்துச் சொன்னான்.

திருஞானத்திற்கு மாப்பிள்ளையைப் பிடித்திருந்தது. தங்கை மட்டும் ஏன் இப்படி அபத்தமாய் நடந்துகொள்கிறாள் என்று கோபம் வந்தது.

தங்கை தாரிணி இல்லாமலேயே பெயர்சூட்டு விழா நடந்து முடிந்தது.

அம்மா அன்று இரவு, "அந்த குழந்தையை நேர்ல போய் ஒரு வார்த்தை கூப்பிட்டு இருக்கலாம். உனக்கு ஒரு கர்வம், அவளுக்கு ஒரு கர்வம். இதில நான் மாட்டிக்கினு சாவறேன்" என்று கண்ணீர் உகுத்தாள்.

திருஞானம் பேச முற்பட்டபோது, பாலாம்பிகா, பேச வேண்டாம் என்று வாயில் விரல்வைத்து சைகை செய்தாள். அதை அம்மா கவனித்திருக்க வேண்டும்.

"இருக்கற புள்ளை பொண்டாட்டிக்கு அடங்கி இருக்கு. பெத்த பொண்ணு புருஷனைத் தாண்டி சுயமா நிக்குது இதில வந்த கோளாறுதான் எல்லாம்" என்று இன்னொரு வார்த்தையும் அவிழ்த்துவிட்டாள்.

திருஞானம் மீண்டும் பேச முற்பட, பாலாம்பிகா வேண்டாம் என்று தடுத்தாள். திருஞானம் அடக்கிக் கொண்டான். வெகுநாள் இப்படி அடங்கியிருக்க முடியும் என்று தோறவில்லை. ஏதோ ஒருநாள் பியத்துக் கொண்டு பெரிய ரகளை நடக்கப்போகிறது என்று அவன் மனது சொல்லியது.

ஆனால் அத்தனை சண்டையையும், அத்தனை மனஸ்தாபத்தையும் குழந்தையினுடைய பேச்சும், அழுகையும், மிரளும் விழிகளும், வாசனையும் அவர்களை மறக்கடித்தன. அம்மா கொஞ்சி கொஞ்சி சீராட்டினாள். காலில் போட்டு குளிப்பாட்டினாள். கொதிக்க கொதிக்க



வெந்நீர் வைத்து சிவக்க சிவக்க சுத்தம் செய்தாள். மூக்குறிஞ்சினான். எப்படி மருந்து புகட்ட வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தாள். என்ன சாப்பிடலாம், என்ன சாப்பிடக்கூடாது என்று பாலாம்பிகாவுக்கு அறிவுறுத்தினாள்.

மாமியார் ஆதரவு மட்டுமில்லாது, திருஞானம் என்கிற அற்புதமான புருஷனின் அரவணைப்பும் இருந்ததால் பாலாம்பிகாவுக்கு மனம் நிரம்பி பால் சுரந்தது. குழந்தை ஆனந்தமாக தாய்ப்பால் அருந்தி சந்தோஷமாகத் தூங்கினான்.

ஒரு மாதம் தாரிணி வரவே இல்லை. அம்மா கார் வேணுமென்று கேட்டு, ஒருநாள் அவளைப்போய் பார்த்துவிட்டு வந்தாள். வந்த அன்று மாலையே சிடுசிடுவென்று இருந்தாள். மறுநாள் குழந்தையைப்பார்த்து சரியானாள்.

"டேய். அவளுக்கும் குழந்தையை பாக்கணும் போல இருக்குடா. சும்மா ஒரு வார்த்தை வரச் சொல்லி சொல்லுடா. என்ன உங்களுக்குள்ள பெரிய மனஸ்தாபம். சின்னசின்ன தகராறு. இதுக்குப்போய் பேசாம இருக்கீங்க. நம்மவீட்டுக்குழந்தைதானே. 'வா' அப்படினு சொன்னா என்ன கெட்டுப்போயிடும். இதுல என்ன உனக்கு பெரிய மதிப்பு" என்று திருஞானத்தை கேட்டுக் கொண்டாள்.

திருஞானம் போன் செய்து, தாரிணியை வீட்டிற்கு 'வா' என்று அழைத்தான். அவள் 'பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள். அடுத்த அரைமணியில் வீட்டில் இருந்தாள். அவள் வந்தவுடன் ஐந்துநிமிடம் பேசிவிட்டு திருஞானம் பதிப்பகத்திற்கு கிளம்பினான்.

இன்னும் ஆறு மாதத்திற்கு பாலாம்பிகா பதிப்பகத்திற்கு வர வேண்டாம் என்று முடிவானபடியால் பாலாம்பிகா வீட்டில் குழந்தைக்கு அருகே படுத்திருந்தாள். திருஞானத்தை வாசல்வரை போய் வழியனுப்பி விட்டு வந்தாள். குளிக்கலாம் என்று பாத்ரூம் நோக்கிப் போனாள். உடைகளை அவிழ்த்து முதல் சொம்பு தண்ணீர் ஊற்றியதும் குழந்தை அலறுவது கேட்டது. 'என்ன என்ன என்று அவள் பாத்ரூமிலிருந்து கத்த, 'ஒண்ணுமில்லை நீ குளி' என்று தாரிணி அதட்டலாய்ச் சொன்னாள்.

பாலாம்பிகாவுக்கு மனம் ஒப்பவில்லை. பாவாடையோடு வெளியே ஓடிவந்தாள். 'ஏன் குழந்தை அழுவுது' என்று கேட்டாள்.

குழந்தை கால் உதறி எறும்பு கடித்ததுபோல் அழுதுகொண்டிருந்தான்.

"ஒண்ணும் இல்ல. அவனுக்கு குரல் எப்படி இருக்குன்னு பார்த்தேன்"

"குரல் எப்படி இருக்குன்னு பார்த்தேன்னா என்ன அர்த்தம்"

"தொடையில ஒரு கிள்ளு கிள்ளினா குழந்தை அழுவுவான். அழுதா அவன் குரல் எப்படியிருக்குன்னு தெரியும். குழந்தை நல்லா அழணும். அழாம இருக்கக்கூடாது" என்று தாரிணி சொன்னாள்.

"என்ன முட்டாள்தனம் இது. அறிவிருக்கா. எதுக்கு சும்மா இருக்கற குழந்தையைப்போய் கிள்ளி அழவிடறே. காட்டு ஜென்மமா நீ" பாலாம்பிகா கத்தினாள்.

"இப்படி செய்து பாக்கறது வழக்கம்தான்" தாரிணி அம்மாவைப் பார்த்துச் சொன்னாள்.

"என் குழந்தைக்கு இதெல்லாம் செய்யவேண்டிய அவசியம் இல்லே. அதுவும் நீ செய்யவேண்டிய அவசியம் இல்லை."

பாலாம்பிகா குழந்தையைப் புரட்டிப் பார்த்தாள். தொடையில்

நகம்பட்டு சிவந்திருந்தது. குழந்தை இன்னும் பெரிதாக அழுதது. சிவந்த இடத்தில் தேங்காய் எண்ணை போட்டு மார்போடு அணைத்து பால் கொடுத்தாள்.

யாரோ கதவு தட்டினார்கள்.

"திறக்காதே இரு" என்று தாரிணியை பாலாம்பிகா அதட்டினாள். வெறும் பாவாடையோடு இருக்கிறோமே என்று தவித்தாள்.

ஆனால் தாரிணி அவள் பேச்சைக் கேட்கவே இல்லை. கதவை விரியத் திறந்து 'வாங்க, வாங்க' என்று சொன்னாள்.

மேல்வீட்டிலுள்ளவர்கள் இத்தனை நாள் ஊரில் இல்லை என்பதால் குழந்தையைப் பார்க்க வந்திருந்தார்கள்.

பாலாம்பிகா வாரி சுருட்டிக்கொண்டு அறைக்குள் ஓடினாள். கோபத்தில் பல் கடித்தாள்.

"சாரி. மன்னிக்கணும்" என்று வந்தவர்கள் தவித்தார்கள்.

"சாயந்திரமா வாங்க" என்று தாரிணி அவர்களைத் திருப்பி அனுப்புவது அறைக்குள்ளிருந்த பாலாம்பிகாவுக்கு கேட்டது. கதவு மூடுவது கேட்டது. வாய்விட்டு சிரிப்பது கேட்டது.

பாலாம்பிகா உக்கிரமானாள். அவளுக்கு கட்டிலடங்கா கோபம் வந்தது.

'என்ன ஒரு மட்ட விளையாட்டு. ஏன் இப்படி அபத்தமாக விளையாடுகிறாள்' என்று ஆத்திரப்பட்டாள். குழந்தையைத் தூங்க வைத்தாள். மெல்ல கதவு மூடிக்கொண்டாள். தாழிட்டாள். பூட்டுபோட்டு சாவி எடுத்துக்கொண்டாள். பாத்ரூமுக்குப் போய் மறுபடியும் குளிக்கத் துவங்கினாள்.

"பாலாம்பிகா இது என்ன கெட்ட பழக்கம்" பாத்ரூமுக்கு வெளியே மாமியாரின் குரல் கேட்டது.

பாலாம்பிகா மௌனமாக தொடர்ந்து குளித்தாள்.

"என்னம்மா. ஏன் குழந்தையை உள்ள வைச்சி, கதவைப்பூட்டி சாவி எடுத்துகிட்டு போயிட்டே. தப்பு இல்லே அது. சாவியைக் கொண்டா"

"தரமுடியாதும்மா. உங்க பொண்ணு பைத்தியம் மாதிரி நடந்துக்கறா"

"நான் இங்க இருக்கச்சொல்ல நீ யாரைப்பத்தி கவலைப்படறே. சாவியைக்கொடு. அந்தமாதிரி செய்யாதே. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிப்போச்சின்னா" அம்மா அதட்டலாய் கேட்டாள்.

ஆனால் பாலாம்பிகா 'சாவி தர முடியாது' என்று சொல்லி விட்டாள். வேகமாகக் குளித்தாள். உடுத்திக்கொண்டாள். வெளியே வந்தாள்.

"என்ன நீங்களும் பாத்துகிட்டு இருக்கீங்க. இவ குழந்தையை நகம் பதிய கிள்ளுவாளாம். அது அலறுமாம். அது குழந்தைக்கு தொண்டை நல்லாருக்குன்றதுக்கு வைத்தியமாம். என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு உங்க பொண்ணுக்கு" என்று சீறினாள்.

"இல்லைடி. அப்படி பண்றது வழக்கம்தான்" அம்மா பதிலுக்குச் சொல்ல,

"இப்படி என் குழந்தையை பண்ணக்கூடாது. அதுவும் உங்க பொண்ணு பண்ணக்கூடாது. இன்னொரு தடவை அவ என் குழந்தை மேல கைய வெச்சான்னா, வைக்கற கையை உடைச்சிப் போட்டுடுவேன்" என்று வேகமாக மீண்டும் சீறினாள்.

"என்ன பாலாம்பிகா இப்படி மோசமா பேசறே. அவ இந்த வீட்டுப் பொண்ணு"

"இருக்கலாம். என் குழந்தையை தொடறதுக்கு அவளுக்கு எந்த



ரைட்டும் கிடையாது. என் குழந்தையை அழ விடுறதுக்கு அவளுக்கு எந்த உரிமையும் இல்லை. அவ கிள்ளுறா. அதை நீங்களும் சரின்னு சொல்றீங்களே. உங்களுக்கு அறிவு எங்கே போச்சு. இப்படித்தான் ஒரு குழந்தைக்கு குரல்வருதான்னு பார்ப்பாங்களா. நீங்கள்லாம் எங்கேயிருந்து வந்தீங்க" என்று உரக்கக் கத்தினாள்.

அம்மா திகைத்துப் போனாள். மௌனமானாள். பின்வாங்கினாள். பாலாம்பிகா சுவாமிக்கு பூ போட்டுவிட்டு, தானே உணவு எடுத்து பரிமாறிக்கொண்டு சாப்பாடு தட்டை எடுத்துக்கொண்டு தன் அறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள்.

குழந்தை இன்னமும் வேதனையில் முகம் சுழித்துக் கொண்டிருந்தான். அந்த இடத்தைத் தொட்டாலும் உதறி அழத் துவங்கினான். அந்த காயத்தைப் பார்க்க பார்க்க பாலாம்பிகாவுக்கு கோபம் பொங்கியது. கார்டுலெஸ் போனில் தொடர்புகொண்டு திருஞானத்தைத் தேடினாள். திருஞானம் எங்கோ வெளியே போயிருப்பதாக செய்தி சொன்னார்கள். வந்தவுடன் உடனடியாக போன் செய்ய சொல்லவேண்டும் என்று ஐயரிடம் தெரிவித்தாள்.

"என்னம்மா. எதனா தகராறா?" ஐயர் கேட்டார்.

"ஆமாங்க. இந்த வீடே ஒண்ணும் சரியா இல்லை."

"சரியா வராது தாயி. அந்தப்பொண்ணு அந்த வீட்டுக்கு வந்து போய்க்கிட்டு இருக்கறவரைக்கும் சரியா வராது. அந்தப்பொண்ணு என்ன செய்தாலும் அதுபக்கம்தான் உங்க மாமியார் இருப்பாங்க. ஒரு மாதிரி, தனியா வந்திரு பாலாம்பிகா. அங்க இருக்கறமட்டும் சின்ன சின்னதா தொந்தரவு வந்துகிட்டுதான் இருக்கும். அது உன் தலையிலும், திருஞானம் தலையிலும் விடியத்தான் விடியும். திருஞானம் ஒரு முக்கியமான இடத்துக்கு ஆர்டருக்காக பேசப் போயிருக்கான். இந்த நேரத்தில நீ இந்த சண்டையைப்பத்தி சொன்னினாக்கா, அவனால அங்க போய் என்ன பேசமுடியும். என்ன வியாபாரம் பண்ண முடியும். தயவுசெய்து எந்த சண்டையும் இந்த நேரத்துக்கு அவன் காதில போடாத" என்று எச்சரித்தார்.

பாலாம்பிகாவுக்கு திருஞானத்தின் நிலைமை புரிந்தது. போட்டி, பொறாமைகள் பதிப்பக வியாபாரத்தில் அதிகமாகி விட்டன. தனக்கு ஆர்டர் கிடைக்கிறதோ இல்லையோ, வெள்ளைத்தாமரைக்கு ஆர்டர் கிடைக்கக்கூடாது என்பதில் நாலைந்துபேர் மும்முரமாக இருந்தார்கள். 'நீ எப்படி இந்த தடவை ஆர்டர் பிடிப்பேன்னு பாத்துடலாம்' என்று வழியில் மறித்து உரத்துப் பேசினார்கள். பழம்பெருச்சாளிகள் மூன்றுபேர் திருஞானத்தின் மீது கடும் பொறாமையில் இருந்தார்கள்.

"திருஞானம் நீ இந்த தொழில்லயே இருந்தா பிரயோஜனமில்லை. இன்னொரு குதிரையும் சைடுல ஓட்டிட்டுப் போறது நல்லது. பேப்பர் வியாபாரம் என்னன்னு கொஞ்சம் புரிஞ்சுக்க. மாம்பலத்துப்பக்கம் பேப்பர் வியாபாரம் யாரும் செய்யவே இல்லை. நீ ஆரம்பி" என்று நடேசன் சொல்ல, அதுபற்றியும் திருஞானம் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்தான். இரவும், பகலும் அதுபற்றிய கணக்குகளே அவன் மனதுக்குள் நிரம்பியிருந்தன. உண்பதும் உறங்குவதும் கூட அவனால் சரியாகச் செய்ய முடியவில்லை.

இந்த நேரத்தில் அவனிடம் இப்படிப்பட்ட சண்டைகளை எப்படி எடுத்துப்போவது என்று பாலாம்பிகா யோசனை செய்தாள். சொல்லாமல் போனால் இன்னும் அதிகமாகுமோ என்று கவலைப்பட்டாள்.

ஆனாலும் இந்த விஷயத்தை சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்தாள். குழந்தையை விட்டு அகலாமல் சுற்றி சுற்றி வந்தாள்.

தாரிணி, அன்று இரவு வீட்டிற்குப்போய்விட, அம்மாவும், பாலாம்பிகாவும் ஓரிரு வார்த்தைகள் பேச்சோடு நிறுத்திக்கொண்டார்கள்.

“ஏன் அம்மா ஒருமாதிரியா இருக்காங்க” என்று திருஞானம் கேட்க, “தெரியலியே” என்று பாலாம்பிகா பதில் சொன்னாள்.

கேள்வியோடு வீட்டுப்பிரச்சனையை மறந்துவிட்டு வியாபாரப் பிரச்சனையை திருஞானம் சிந்திக்கத் துவங்கினான். தூக்கத்திலும் 'பேப்பர், பேப்பர்' என்று ஏதோ பிதற்றினான். அவன் நெஞ்சைத் தடவி பாலாம்பிகா சமாதானப்படுத்தினாள். அவன் அப்படியே தூங்கிப் போனான்.

“இது ரொம்ப மோசமான பீரியடு எனக்கு பாலாம்பிகா. சுத்தி பத்து பேரு கொன்னுடுவேன்ற மாதிரி நிக்கறாங்க. இந்த குழந்தையை தொடறது மட்டும் இல்லேன்னு வைச்சுக்க எனக்கு பைத்தியமே பிடிச்சுப் போயிடும். இல்லை, ஆவேசமா எதனா பண்ணிடுவேன். குழந்தையை மனசுல நினைச்சுக்கறதுனாலதான் கோபப்படாதயே இருக்கேன்” என்று குழந்தையை நெஞ்சில் வைத்துக் கொஞ்சிவிட்டு கடைக்குப் போனான்.

மறுபடியும் தாரிணி ஆட்டோவில் வந்து இறங்கினாள். அவள் பையனைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தாள்.

“என் பையனுக்கு பொண்ணு பெத்துக் குடுன்னு சொன்னேன். பைத்தியக்காரி மாதிரி புள்ளை பெத்திருக்கே” வந்ததும் வராததுமாக ஆரம்பித்தாள்.

“அப்படியே நான் பொண்ணு பெத்திருந்தாலும் உனக்கு கொண் ணாந்து கொடுப்பேனா. உன்னை மாதிரி ராட்சஸிகிட்டே என் பொண்ணை கொடுத்துட்டு முழிக்கறதுக்கு நான் என்ன பைத்தியமா”

“அப்படி என்ன பண்ணிடுவாங்க உன் பொண்ணை” தாரிணி கத்தினாள்.

“அதான் தொடையிலே வெடுக்குன்னு கிள்ளுனியே குரல் வரு தான்னு. அப்புறம் என் பொண்ணு ருசியா இருக்காளான்னு கட்டை விரலை நறுக்கி பார்ப்பே. அந்தமாதிரி புத்தி இருக்கவங்ககிட்ட எப்படி பொண்ணு கொடுக்க முடியும்” பாலாம்பிகா பதிலுக்குக் கத்தினாள்.

உள்ளே நுழைந்தவுடனேயே சண்டை துவங்கிவிட்டது.

“போதும். போதும். சும்மா இருங்க” அம்மா அதட்ட இருவரும் பிரிந்துபோனார்கள்.

பாலாம்பிகா தாரிணியிடம் குழந்தையைத் தூக்க வேண்டாம் என்று கட்டளையிட்டு விட்டாள். தாரிணி வருவதற்கு முன்பாகவே தன்னுடைய கடமைகளை எல்லாம் முடித்துவிட்டு, குழந்தைக்கு அருகிலேயே அமர்ந்து குழந்தைக்கு காவல் இருந்தாள். தாரிணியின் பையன் அருகே வந்து மண்டியிட்டபோது, “வேணாண்டா கண்ணு. பாப்பா தூங்குது. தொந்தரவு பண்ணாத. கூடத்துல போய் விளையாடு” என்று கனிவாகச் சொன்னாள்.

கூடத்தில் அவன் பந்து எறிந்து விளையாடுவது தெரிந்தது. இரண்டு, மூன்று சாமான்கள் விழுந்து உடைந்தன. வேண்டுமென்றே குழந்தையை தாரிணி பந்து எறிந்து விளையாடச் சொல்கிறாள் என்பது புரிந்தது. இந்த வீட்டில் ஏதேனும் ஒரு ரகளை செய்தே ஆகவேண்டும் என்று அவள் வந்திருப்பது புரிந்தது. 'உடையட்டும் எது வேண்டு மானாலும் உடையட்டும். எது உடைந்தாலும் வாங்கிக்கொள்ளலாம்'



என்று பாலாம்பிகா அறையை விட்டு போகாமல் இருந்தாள்.

பாலாம்பிகா தட்டு எடுத்து வந்து, சாதம் போட்டு, குழம்பு ஊற்றி பிசைந்து, கத்தரிக்காய் கறியோடு லேசாய் கலந்து சாப்பிட்டாள். உணவு முடிந்ததும் வைட்டமின் மாத்திரைகள் எடுத்துக் கொண்டாள். சாப்பிட்ட களைப்பில் தூக்கம் வந்தது. குழந்தைக்கு சிறிது நேரம் கழித்து பால் கொடுத்தாள். அவன் மடியைத்தட்டி ஏப்பம் வரச்செய்தாள்.

திருஞானத்தின் அம்மா தாரிணி இருந்தால் குழந்தையைத் தொடுவதேயில்லை. தாரிணி இல்லையென்றால் வந்து எட்டிப் பார்ப் பாள். 'இது என்ன ஒரு கேவலமான பிறவி' என்று பாலாம்பிகா நினைத் துக் கொண்டாள். ஆனால் வாயைத் திறந்து சொல்லவில்லை.

அன்று குழந்தையை அருகே போட்டு ஒருக்களித்துப் படுத்துக் கொண்டே தூங்கிப் போனாள். திடீரென்று பெரிய தாம்பாளம் விழும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். குழந்தை உதறி எழுந்தான். அலறி அழுதான். முகம் சிவக்கக் கத்தினான்.

பாலாம்பிகா திரும்பிப் பார்த்தாள். பின்னே தாரிணி தாம் பாளத்தை தரையிலிருந்து எடுப்பது தெரிந்தது.

“என்ன பைத்தியமே. இங்க என்ன பண்றே” பாலாம்பிகா சீறி னாள்.

“குழந்தைக்கு காது கேக்குதான்னு பாக்கறதுக்கு இப்படி பண்றது வழக்கம். உன் குழநீதைக்கு காது நல்லா கேட்குது” தாரிணி மறுபடியும் தாம்பாளத்தை தரையில் அடித்தாள்.

இந்த முறையும் குழந்தை அதிர்ந்து அழத்துவங்கியது. பாலாம்பிகா குழந்தையை வாரி நெஞ்சில் அணைத்துக்கொண்டாள். கூடத்திற்குப் போனாள். அம்மாவைப் பார்த்தாள்.

“உங்களுக்கு எதனா அறிவிருக்கா? உங்க பொண்ணு பைத்தியக் காரி மாதிரி வேலைங்க பண்றா. தூங்கறபோது தாம்பாளத்தை தூக்கி பக்கத்துல போடறா. குழந்தைக்கு காது கேக்குதான்னு பாக்கறேன்றா. நீங்களும் பாத்துகிட்டு சும்மா இருக்கீங்களே. இப்படி ஒரு கொடுமையை பார்த்துட்டு யாராவது சும்மா இருப்பாங்களா. உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா. நீங்க பொம்பளைதானா. நீங்க குழந்தை பெறலை. இந்த நாயை இந்த வீட்டுக்குள்ளே விட்டுட்டு ஏன் என் உயிரை வாங்கறீங்க” என்று கத்தினாள்.

“என்னடி. குழந்தைக்கு காது கேக்குதான்னு பாக்கணும்னு சொன்னா. தாம்பாளத்தை போடட்டுமான்னு கேட்டா. 'சரி போடு'ன்னு நான்தான் சொன்னேன்.”

“எப்படி சொல்லுவீங்க போடுன்னு. இன்னைக்கு ராத்திரி நீங்க தூங்கறபோது உங்க மூஞ்சியிலே வெந்நீர் கொட்டட்டுமா. உங்களுக்கு சொரணை இருக்கான்னு பாக்கட்டுமா. உங்க கால்ல குழவியைத் தூக்கிப் போட்டுட்டு, ரத்தம் வருதா, உங்களுக்கு நல்ல ரத்தம் இருக்கா'ன்னு நான் சோதிக்கலாமா. இப்படிதான் சோதிப்பாங்களா குழந்தைக்கு காது கேக்குதான்னு. என்ன இழவு இது. வயசாகுதே தவிர, உங்களுக்கு அறிவே கிடையாதா. சோறுதான் சாப்பிடறீங்களா வேற எதனா சாப்பிடறீங்களா” என்று பாலாம்பிகா அதிக சத்தம்போட்டு உரக்கக் கத்தினாள்.

அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கதவு திறந்தார்கள். வீட்டு வாசலுக்கு வந்தார்கள்.

“என்ன பாலாம்பிகா என்ன ஆச்சு” ஒரு மாமி கேட்டாள்.

“எப்படி பண்றாங்க பாருங்க மாமி” - விம்மி விம்மி அழுதாள்.

"ஏங்க. ஏன் ஏன் இப்படி பன்றீங்க" - மாமி அம்மாவைப் பார்த்த
படி கேட்டாள்.
"தாரிணி நீ பண்றது தப்பு. நானும் ஒரு வாரமா பாக்கறேன்.
அந்த குழந்தையை எதுக்கு வம்பு பண்ணின்டுருக்கே" என்று இன்னொரு
மாமி சொல்ல.
"ஏய் பாப்பாத்தி போடி உன் வேலையைப் பார்த்துகிட்டு" என்று
தாரிணி பதிலுக்கு சீற சட்டென்று அந்தக் கூட்டம் கலைந்து போயிற்று.
"அவன் எனக்கு மருமகன். அவன் நல்லா இருக்குறதுல எனக்கும்
பங்கு உண்டு. அவன் நல்லா இருக்கானான்னு நான சோதிச்சுப் பார்க்க
லாம். இந்த மாதிரி சோதிக்கறது வழக்கம்தான். இப்படி இல்லைன்னு
யாரையாவது சொல்லச் சொல்லு அவ குடித்தனம் பண்ணாத
அவிசாரியாதான் இருப்பாளே தவிர, நல்ல குடித்தனக்காரி இதை
சரின்னுதான் 'சொல்லுவா" தாரிணி விளக்கம் சொல்ல, என்ன செய்வ
தென்று பாலாம்பிகாவிற்குத் தெரியவில்லை.
உள்ளுக்குள் போய் கதவு சாத்திக் கொண்டாள். படுக்கையில்
குழந்தையைப் போட்டு இறுக்க அணைத்துக் கொண்டு அழுதாள். அப்பா
வுக்கு போன் செய்தாள்.
அப்பா திகைத்தார். "சரிம்மா. திருஞானம் வரட்டும். பேசுவோம்"
என்றார். மேனேஜர் ஐயருக்கும் இது தெரிவிக்கப்பட்டது.
"தினம் தினம் ஒவ்வொரு தொந்தரவுன்னா அந்தப் பொண்ணு
தான் என்ன பண்ணும். உடம்பு சரியில்லேன்னு குழந்தையை வீட்டுக்கு
எடுத்துகிட்டு வரச் சொல்லிடுங்க. நம்ம இதை திருஞானத்திற்கு சொல்ல
வேண்டாம்." - ஐயர் சொன்னார்.
ஆனால், திருஞானத்திற்கு நடேசன் தெரிவித்து விட்டார்.
"இப்படி மூணாவது தடவையா ரகளை நடக்குது. குழந்தையைக்
குறி வைச்சு இப்படி பண்றது நல்லாவே இல்லை போங்க." என்று
நடேசன் சொல்லிக் கொண்டிருக்கும்போது அவருக்கு அழுகை வந்து
விட்டது.
"பெரியவங்க சண்டையில அந்த பச்சிளம் குழந்தையை பாடா
படுத்தறீங்களே. இது நல்லாவா இருக்கு. ஒரு குழந்தையைப் பெத்தடுக்
கறது ரொம்ப கஷ்டம்யா. ஒரு குழந்தை ஊனமில்லாம வளர்றது ரொம்ப
கஷ்டம். இதை இப்படியெல்லாம் சோதிக்கக்கூடாதுய்யா. ஒரு
குழந்தைக்கு இந்த மாதிரி நாலு தடவை தூக்கி வாரிப்போட்டா. அது
வாழ்நாள் முழுக்க பயந்து நடுங்கற குழந்தையா போயிடும்யா. தயவு
செய்து இந்த மாதிரி குழந்தை வளர்க்க வேண்டாம்னு உங்க வீட்டுப்
பெரியவங்ககிட்ட சொல்லுங்கைய்யா" என்று கைகூப்பிக் கேட்டுக்
கொண்டார்.
திருஞானம் திகைத்தான். மண்டை நிறைய பதிப்பகத்துக்கு வேலை
கள் இருக்க, இந்த செய்தி வேறு உள்ளுக்குள் அதிகமாய் இறங்கியது.
பல் கடித்தான. கார் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.
"தாரிணி ஏன் இப்படி பண்றே"
"அம்மாகிட்டே கேட்டுக்கிட்டுத்தான் பண்ணேன்" தாரிணி நிதான
மாகச் சொன்னாள்.
"என்னம்மா குழந்தை பக்கத்துல போய் தாம்பாளத்தை போடு
வாங்களா"
"இல்லைதான். எப்பயாவது ஒரு தடவை அப்படி செய்யறது
வழக்கம். அதுல ஒண்ணும் தவறு நேர்ந்துடாதுடா. குழந்தைக்கு நல்லா
காது கேக்குதான்னு அப்படி செய்து பாக்கறது வழக்கம்"
"இல்லைம்மா. இது காட்டுமிராண்டித்தனமா இருக்கு. அவதான்



சொல்றான்னா நீயும் கேக்கறியே."
"இல்லைடா இது கிராமத்து வழக்கம்."
"எந்த கிராமத்திலயும் இப்படி பண்ணதா நான் கேள்விப்பட்டது
இல்லை. நடந்தவரைக்கும் போகட்டும். இனிமே இது நடக்கக்கூடாது.
தாரிணி, திருப்பியும் சொல்றேன். இந்த வீட்டுல இது மாதிரி 'ரப்சர்'
பண்றதுக்கு வருவதாக இருந்தால் நீ வர வேண்டாம். உனக்கும் எனக்கும்
உறவு அறுத்துப் போச்சுன்னு வைச்சுக்க. இன்னொரு தடவை இந்த
வீட்டுக்குள்ள வந்து என் குழந்தையை அழ வைச்ச, தலைமயிரைப்
பிடிச்சு 'தரதர'ன்னு இழுத்துட்டுப் போய் வெளிய விட்டுருவேன. யார்
தடுத்தாலும் விடமாட்டேன்." என்று பல்கடித்து ஆத்திரத்தோடு பேசி
னான்.
"ஏண்டா என்னடா பேசறே. உன் குழந்தை நல்லாயிருக்கணும்றதுக்
காக, என் குழந்தையை உன் வீட்டுக்கு வரவேண்டாம்னு சொல்றயா.
எப்படிறா உன்னால அப்படி சொல்ல முடிஞ்சது. உன் குழந்தை அழுதா,
உனக்குத் தாங்கலையே அதேபோல என் குழந்தை அழுதா எனக்குத்
தாங்குமா. அதை நான் பார்த்துகிட்டு சௌக்கியமா இருக்க முடியுமா.
அவளை இந்த வீட்டுக்கு வர வேணாம்னுட்டா நான் எங்க போய்
இருக்கறது. அவளை இந்த வீட்டுக்கு வர வேணாம்னா வேற யார்
வந்து என்ன வராம என்ன. இவளை இவ வீட்டுக்கு போகக்கூடாதுன்னு
சொன்னா இவ கேப்பாளா. இவ அம்மாவைப் பாக்கக்கூடாதுனனா
சும்மா இருப்பாளா. உங்க அப்பனுக்கும் எங்களுக்கும் முழுசா உறவு
அத்துப் போச்சின்னா, இவ வாயை மூடிக்கிட்டு இருப்பாளா. எப்படி
நாக்கு மேல பல்லைப் போட்டு உனக்கும், எனக்கும் உறவு அத்துப்
போச்சின்னு தங்கச்சியைப் பார்த்து சொல்றே" அம்மா கேட்டாள்.
"உன் பொண்டாட்டி ரொம்ப கெட்டிக்காரி. அவ ரெண்டுங்
கெட்டான் ஆயிட்டாளா. உன் பொண்டாட்டி ரொம்ப நல்லவ. தாரிணி
கெட்டவளாயிட்டாளா. இந்த காலணி முழுக்க அவளை கொண்
டாடிட்டு இருந்துதேடா. எல்லாருமே அவளை சுத்தி சுத்தி வந்துட்டு
இருந்தாங்களேடா. இன்னைக்கு அவ ராட்சஸியா மாறிட்டாளா. இது
என்னடா இது நியாயம்?"
அம்மா பாலாம்பிகா பக்கம் திரும்பினாள்.
"அவன்தான் அப்படி பேசறான்னா, உனக்கு அறிவு வேண்டாம்.
அந்த மாதிரி பேசக்கூடாதுன்னு நீ சொல்ல வேண்டாம். என்ன
வேடிக்கைப் பார்த்துகிட்டு இருக்கே. புருஷனைத் தூண்டிவிட்டு அம்மா
வுக்கும் ஆகாத தங்கச்சிக்கும் ஆகாத பண்ணிட்டியே. இதுக்குதான் நீ
கல்யாணம் பண்ணிகிட்டு வந்தியா. இதான் உங்க அப்பன் உனக்கு
சொல்லிக் கொடுத்தானா. இதான் உங்க குடிபொறப்பா?" - அம்மா
கத்த ஆரம்பித்தாள்.
"அவ காசு கேக்கறா. அதானே தப்பா போயிடுச்சி. எல்லா காசை
யும் பொண்டாட்டிக்கு கொடுக்கனும்னு நீ தீர்மானம் பண்ணிட்டே."
அம்மா சொல்ல, பாலாம்பிகா மெல்லிய சீற்றமடைந்தாள்.
"உங்க சொத்து எதையும் நான் ஆண்டுறலை. உங்க சொத்து
இருக்கற இடத்துக்கு நான் நாயா உழைச்சிகிட்டு இருக்கேன். சம்பாதிச்சு
கொண்டு வந்து கொட்டுனு, நான் வீட்டுல உக்காந்து காலை ஆட்டிக்
கினு டி.வி பார்த்துவிட்டு இருக்கலாம். அப்படி இல்லை என் புருஷன்
என்னை எதுக்கு கல்யாணம் பண்ணிக்கிட்டாருன்னு புரிஞ்சுகிட்டு அந்த
வேலையை நான் செய்திருட்டிருக்கேன். இது என் புருஷன் கம்பெனி

மட்டும் இல்லை. என் கம்பெனியும் கூட. நான் அங்கே போவேன். வருவேன். நான் எப்ப நகர்றேன் பார்த்துட்டு இவ ஓடியாந்துடுறா. இத தூக்கிட்டு போறதும். அத தூக்கிட்டு போறதும், அத நோண்டறதும் இதை நோண்டறதும் மரியாதையாவா இருக்கு."

"இது என் வீடு. என் பொண்ணு வரும், போவும். எத வேணும்னாலும் எடுத்துக்கிட்டு போவும். இங்க உன் சாமான் எதுவும் இல்லை."

"அது எப்படி சொல்றீங்க. இங்க இருக்கற அத்தனையும் என் சாமான். நான் கொண்ணாந்தது. என் புருஷனுடைய சொத்து. என்னைக் கேக்காத இங்கிருந்து ஒரு துரும்பு கூட எவளும் எடுத்துனு போகக்கூடாது. நீங்க எடுக்கறதா இருந்தாகூட என்கிட்ட ஒரு வார்த்தை கேக்கறதுதான் மரியாதை."

"நான் அப்படி கேட்டு இங்க குடித்தனம் பண்ணனும்னு எனக்கு அவசியம் இல்லேம்மா. அப்படி கேட்டுதான் இந்த வீட்டுல இருக்கணும்னா நான் இந்த வீட்டுல இல்லை. நான் கிளம்பறேன்.

அம்மா முன்னும் பின்னும் அலைந்தாள். பாலாம்பிகா மௌனமாக இருந்தாள். திருஞானம் அம்மாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"திருஞானம் நீ ஏன் பாலாம்பிகா சொன்னதை புரிஞ்சுக்க மாட்டேன்ற. இங்க இருக்கற சாமான் எதையாவது எடுத்துட்டு போகணும்னா, அதை பாலாம்பிகா கிட்ட கேக்கணும்னு தாரிணுக்குத் தெரியாதா. இங்க இருக்கற சாமான் என்னதுடா. பாலாம்பிகாவுது இல்லை."

"எப்படிம்மா சொல்றே? அவ வீட்டுலேர்ந்து கொண்ணாந்த டேப் ரிக்கார்டை இவ எடுத்துகிட்டு போய்ட்டு நான்தான் எடுத்துக்கிட்டு போனேன்னு கூட சொல்லாத இருக்காளே இது திருட்டு இல்ல. இதுக்கு நீயும் உடந்தையா?"

"என்ன பொல்லாத டேப் ரிக்கார்டர். எவ்வளவுடா காசு. சொல்லு நான் கொடுத்துடறேன்" அம்மா மறுபடியும் முன்னும் பின்னும் அலைந்தாள்.

"நீ தப்பா பேசறம்மா. என் பொண்டாட்டி ஆகாத போயிடுச்சு உனக்கு என் குழந்தை பிடிக்காம போயிடுச்சு உனக்கு"

"அப்படி ஒண்ணும் கிடையாது. இதோ இந்த மாதிரி சாமானை எடுத்து கீழப்போட்டு குழந்தைக்கு காது கேக்குதான்னு பாக்கற வழக்கமுண்டு."

அம்மா பக்கத்திலிருந்த கண்ணாடித் தட்டை எடுத்து தரையில் வேகமாய் வீசினாள். சத்தம் கேட்டு குழந்தை அதிர்ச்சியில் வீறிட்டு அழத் துவங்கினான்.

"நான் இருக்க மாட்டேங்க. நான் இங்க இருக்க மாட்டேன். இவங்க கீழே போடறேன்னு குழந்தை தலையில கண்ணாடித் தட்டை எடுத்து போட்டுடுவாங்க. நான் இங்க இருக்க மாட்டேன். இங்கு என் குழந்தையை கொன்னுடுவாங்க. தூங்கறபோது என்னை கொன்னுடுவாங்க. நான் இங்க இருக்கமாட்டேன். உங்க அம்மா இருக்கற இடத்துல நான் இருக்க மாட்டேன். நான் கிளம்பறேங்க.

இது இவங்க வீடாவே இருக்கட்டும். இவங்களே இங்க கொண்டாடிக்கிட்டும். இங்க பொண்ணை வைச்சிக்கிட்டும் பொண்ணுக்குத் துணையா வேற யாரையாவது கொண்ணாந்து வைச்சிகிட்டும். என்னை விட்டுடுங்க. நான் எங்க வீட்டுக்கு போறேன். என் சாமான் அத்தனையும் நான் எடுத்துகிட்டு போயிடறேன். என் சாமான் ஒண்ணும் இங்க இருக்



காது.

இது எங்க அண்ணன் எனக்குக் கொடுத்த இங்லண்ட் கண்ணாடித் தட்டு வேணும்னுட்டே அதைப் போட்டு உடைக்கறாங்க. இது சரியா வராதுங்க" பாலாம்பிகா சீறினாள்.

"ஏம்மா, ஏன் இவ்வளவு ஆத்திரத்தோட நடக்கறே" திருஞானம் அம்மாவைப் பார்த்து அதட்டலாய் கேட்டான்.

"என்னடா என்னைப் போய் அதட்டறே. எங்களுக்கெல்லாம் வளர்க்கத் தெரியாத குழந்தையாடா இவ வளர்க்கப்போறா. யார் வேணா, எங்க வேணா போகட்டும். எப்படி இவ வளர்த்து கிழிச்சுடுறான்னு நானும் பார்க்கறேன்." அம்மா இடுப்பில் கை ஊன்றிப் பேசினாள்.

"சரிம்மா. ஒரு முடிவுக்கு நீ வந்துட்டேன்னு தெரிஞ்சிப்போச்சி. என் பொண்டாட்டிய நான் தவறாம கரிச்சுக் கொட்டப்போறேன்னு தெரிஞ்சுப் போச்சு. எம்பையனை தூக்கி வாரிப் போடப் போறேன்னு தெரிஞ்சுபோச்சு, விட்டுடும்மா. அவங்க ரெண்டு பேரும் இங்க இல்லை. எப்ப என் பொண்டாட்டியும், பிள்ளையும் இல்லையோ, அப்புறம் எனக்கு இங்க என்னா வேலை. நீ இரு உன் பொண்ணை கூப்பிட்டு வைச்சிக்கோ. மாப்பிள்ளையோட இரு. இல்ல பொண்ணு வ்ர, போக இரு. என்ன வேணா பண்ணிக்கோ. இப்பவே, இன்னும் அரை மணி நேரத்திலே இவ போயிடறா. நான் ரெண்டு நாள்ல என் சாமானையெல்லாம் எடுத்துட்டு போயிடறேன்."

"எனக்குத் தெரியுண்டா. எப்ப இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணியோ. அப்பவே, இவ வீட்டுக்கு நீ ஒரு நாள் பொட்டி எடுத்துட்டு போயிடுவேன்னு தெரியும். அம்மா வேண்டாம். தங்கச்சி வேண்டாம்னு நகந்துருவேன்னு தெரியும்.

எப்ப என் வீட்டுக்குள்ள காலடி எடுத்து வைச்சாளோ, அப்பவே இவ பிரிச்சு போடத்தான் வந்திருக்கான்னு தெரியும். நாங்க சொன்ன பொண்ணை நீ கல்யாணம் பண்ணியிருந்தா, அது ஒட்டோ ஒட்டுன்னு இங்க ஒட்டிக்கினு இருக்கும். என்னையும் கொண்டாடினு இருக்கும். உன் தங்கச்சியையும் கொண்டாடினு இருக்கும். இந்த வீட்டுக்கும் ராணியா இருந்திருக்கும். பேயை கொண்ணாந்துட்டியேடா. பிசாசை கொண்ணாந்து குடித்தனம் பண்றியேடா" அம்மா கத்த, பதிலுக்கு பாலாம்பிகா கத்த குழந்தை வீறிட்டு அழுதது.

தோளில் குழந்தையைப் போட்டுக் கொண்டு திருஞானம் வெளி வராண்டாவுக்குப் போனான். வராண்டாவிலிருந்து எதிர் பங்களாவைப் பார்த்தான். அணில்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன. ஒரு அணில் சட்டென்று நிற்க பின்னால் வந்த அணில அதை இறுக்கிக் கொண்டது. கெட்டது நடந்தாலும் எங்களுக்கென்ன. நாங்கள் எந்தக் கவலையுமில்லாமல் சந்தோஷமாக இருப்போம்' என்பதில் அணில்கள் பிடிவாதமாக இருந்தன. அலட்சியமாக இருந்தன. தானும், தன் மனைவியும் மட்டுமே முக்கியம் என்பது போல அந்த அணில்கள் நடந்து கொண்டன. அணில்களையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த திருஞானம் சட்டென்று திரும்பினான்.

"பாலாம்பிகா நீ கிளம்பு. நேரம், காலம் எதுவும் பாக்க வேண்டாம். கிளம்பு"

பாலாம்பிகா பத்து நிமிடத்தில் கிளம்பினாள். தோளில் குழந்தையை போட்டுக் கொண்டாள். சுவாமிக்கு நமஸ்காரம் செய்தாள். தொலைவிலிருந்து அம்மாவை நமஸ்கரித்தாள். குழந்தையோடு கார் ஏறினாள்.

திருஞானம் காரைச் செலுத்தினாள். பாலாம்பிகாவைக் கொண்டு போய் அவள் அப்பாவின் வீட்டில் விட்டான். கூடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

பாலாம்பிகா உள்ளே போய் நடந்தது மொத்தமும் அப்பாவிடமும், அம்மாவிடமும் சொன்னது.

மேனேஜர் ஐயர் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார். "என்ன திருஞானம், என்ன ஆச்சு" என்று கனிவாகக் கேட்டார்.

திருஞானம் முகம் திரும்பிக் கொண்டான். அழத்துவங்கினான்.

அந்த வீடு அவனைச் சுற்றிக் கொண்டது. சகலரும் அவனுக்கு நெருக்கமாய் நின்றார்கள். அவன் மடியில் பாலாம்பிகா குழந்தையைப் போட்டாள். அவனுக்கு அருகே உட்கார்ந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். மானேஜர் இடதுபுறம் உட்கார்ந்து தலையைத் தடவினார். நடேசன் முன்னால் நாற்காலி இழுத்தும் போட்டுக் கொண்டு, அவள் கால்களைப் பிடித்து விட்டார். பாலாம்பிகாவின் அம்மா பின் பக்கம் போய் நின்று ஆதரவாகப் பேசினாள்.

"விட்டுட்டு வா. அப்படின்னு நாக்கு மேல பல்லைப் போட்டு இப்பவும் நான் சொல்ல மாட்டேன். ஆனால் முடிவு நீ செய். வேற யாரையும் கேக்காத. உன் பொண்டாட்டி பேச்சைக் கேக்காதே. உன் மாமனார் பேச்சைக் கேக்காத. மேனேஜர் பேச்சைக் கேக்காத. இந்த வீட்டுல உன் பொண்டாட்டியோட இருக்கியா. தெள்ளத்தெளிவா முடிவு செய். நடுவுல அலையாதே. இவ்வளவு ஆத்திரமா கண்ணாடித்தட்டைப் போட்டு உடைச்சி புள்ளை அழணும்னு சொல்ற தாயாரை நான் எங்கயும் பாத்ததில்லை. உங்க அம்மா நல்ல பொம்பளை எங்கயோ தப்பாயிப் போச்சு. உன் தங்கச்சி கெடுத்துட்டா. அவளுக்கு காசு கொடுத்து மாளாது. நீ பத்து லட்ச ரூபாய் அள்ளி கொண்டு போய் கொடுக்கிறேன்னு வைச்சிக்க, மறுபடியும் ரெண்டு வருஷம் கழிச்சி இன்னும் பத்து லட்ச ரூபாய் கேப்பா. இதுக்கு முடிவே கிடையாது. உழைக்காத காசு வருதுன்னாக்கா எல்லோருக்கும் நல்லாதான் இருக்கும். அவங்களுக்கு காசு கொடுத்து நமக்கு கட்டுப்படி ஆகாது. நாம ரத்தம் சிந்தி சம்பாதிக் கறத அவங்க அப்படி அனுபவிக்கக் கூடாது. தெள்ளத் தெளிவா முடிவு பண்ணு. நீ எங்க வேணா இரு. இந்த வீட்டுக்கதவு உனக்கு எப்பவும் திறந்திருக்கும். ஆனால் தயவு செய்து தீர்மானம் பண்ணிக்கோ. இங்கயா. அங்கயா" நடேசன் உரக்கக் கூறினார்.

மௌனமாய் திருஞானம் அமர்ந்திருந்தான்.

"பேசு திருஞானம். எங்கே இருக்கப் போறேன்னு எங்கிட்ட வாய் திறந்து பேசு. எத்தனையோ விஷயம் பேசி இருக்கோம். இதை பேச முடியாதா உனக்கு. பேசு திருஞானம்" நடேசன் வற்புறுத்தினார்.

"எங்கம்மாவுக்கு சாப்பாட்டுக்கு காசு கொடுக்கணும்னா நான் எங்கயாவது சம்பாரிச்சு ஆகணும். அந்த வீட்டுல இருந்தாக்கா நான் நிம்மதியா இருக்க முடியாது. நிம்மதியா இல்லேன்னா என்னால நல்லா சம்பாதிக்க முடியாது. எப்படா 'வெள்ளைத்தாமரை' பதிப்பகம் கவுரும்னு காத்துக்கிட்டு இருக்காங்க. எப்படா எனக்கு குழி தோண்டி மண்ணு மூடலாம்னு தொழில் போட்டியில பத்து, பதினைஞ்சு பேர் அலைஞ்சுகிட்டிருக்காங்க. அத்தனை பேரையும் தாண்டி உயிரோட இருந்து ஜெயிக்கணும்னா நிறைய வேலை செய்யணும். கூடத் துணைக்கு ஆள் வேணும்.

நீங்க நாலு பேரும் இருக்கறதுனாலதான் நான் ஜெயிக்கறேன். பொண்டாட்டியை விட்டுட்டோ. மேனேஜரை ச்சின்னு சொல்லிட்டோ,



மாமனாரை ஒதுக்கிட்டோ என்னால இங்க ஜெயிக்கவே முடியாது. நான் இங்க ஜெயிச்சு மாசத்துக்கு ஒரு லட்ச ரூபாய் சம்பாதிச்சாதான் அம்மாவுக்கு இருபதாயிர ரூபாய் தர முடியும். தங்கச்சிக்கு பத்தாயிர ரூபாய் தர முடியும். இல்லேன்னா தர முடியாது. அதனால நான் சம்பாதிக்கறது இதில முக்கியம். சம்பாதிக்கறதுக்காக, அம்மாவுக்கு சம்பாதிக்கிறதுக்காக நான் அம்மாவை விட்டுட்டு இந்த வீட்டுக்கு வந்துடறேன். கொஞ்சநாள் எனக்கு இந்த வீட்டுல இடம் கொடுங்க அப்புறம் தனியா வீடு பாத்துகிட்டு போயிடறேன். அந்த வீட தங்கச்சியே எடுத்துக்கட்டும். எனக்கு ஆட்சேபனை இல்லை. பத்து லட்ச ரூபாய் கணக்கு அந்த வீட்டோட முடிஞ்சு போயிடுது. போகட்டும். என்னால வேற வீடு வாங்க முடியும். இதைவிட இன்னும் நல்லபடியா இருக்க முடியும். நான் நிம்மதியா இருக்கணும். அதான் முக்கியம். நான் நிம்மதியா இருக்கறது. என் அம்மாவுக்கு பிடிக்கலை. என் தங்கச்சிக்குப் பிடிக்கலை. அம்மாவா இருந்தா என்னா. எவ்ளோ உசத்தியா இருந்தா என்னா. என் புள்ளையை என் கண்ணெதிரே அலற விடுறவளை நான் அம்மான்னு எப்படி கூப்பிடறது. நான் அந்தப்பக்கம் போகலை. தயவு செய்து உங்க வீட்டுல எனக்கு ஒரு ரூம் கொடுங்க. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்ளோ சீக்கிரம் நான் வேற வீடு பார்த்துடறேன்." அவனை நடேசன் கால் தொட்டான். நடேசன் அவனை இறுக்க அணைத்துக் கொண்டார்.

"நீங்க எடுத்துருக்கறது ரொம்ப பெரிய வேதனையான முடிவு திருஞானம். எனக்குப் புரியுது. ரொம்ப சிரமம். ரொம்ப நல்ல அம்மாவை இப்படி அறுக்கறது எத்தனை வேதனைன்னு எனக்குப் புரியுது. என்ன பண்றது. சூழ்நிலை அப்படியிருக்கு. கவலைப்படாதே. நமக்கு ஆயிரம் வேலை இருக்கு. இன்னிக்குப் போய் என் ரூம்ல படுத்துக்கிட்டு தூங்கு. வேலையை நான் பாத்துக்கறேன். நாளைலேர்ந்து, இங்க இருந்து வேலைக்குப் போ" என்று நடேசன் அவனுக்குத் தன் அறையை ஒழித்து விட்டார்.

அந்த அறையில் திருஞானம் ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றான். அறையின் நடுவில் குழந்தைக்கு 'ஏணை' கட்டி தூங்கச் செய்தார்கள். பாலாம்பிகா வேறொரு அறையில் படுத்துத் தூங்கினாள். நடேசனும், மேனேஜரும் கடைக்கு கிளம்பிப் போனார்கள்.

மாலை ஆறு மணிக்குக் கண் திறக்கறபோது எங்கிருக்கிறோம் என்று திருஞானத்திற்குப் புரியவில்லை. தன்னுடைய அறை என்று நினைத்து, இடுப்பு லுங்கியை இறுகக் கட்டிக் கொண்டான். கதவைத் திறந்து அம்மாவிடம் பேச வேண்டும் என்ற எண்ணத்தில் வெளியே கால் வைத்தான். வீடு வேறாக இருந்தது. அம்மா அங்கு இல்லை என்பது புரிந்தது. மனதில் சோகம் கவ்வியது. வராண்டாவில் பாலாம்பிகாவின் குரல் கேட்டது. பாலாம்பிகா குழந்தையை மடியில் போட்டுக் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

"அம்மா... சொல்லு. நான் யாரு. அம்மா... சொல்லு" என்று அந்தப் பச்சிளம் குழந்தைக்கு பாடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"அம்மாவை நீ காப்பாத்துவியா. அம்மாவை கடைசி வரைக்கும் வைச்சு சோறு போடுவியா. அம்மாவுக்கு எந்த ஆபத்தும் வராம கண்ணுக்குள்ள வைச்சிக்குவியா. அம்மா கூடவே இருப்பியா... சொல்லு. சொல்லுடா கண்ணு... அம்மா உனக்குப் பிடிக்குதா. அம்மா... சொல்லு அம்மா "தனக்குத்தானே குழந்தையை வைத்துக் கொண்டு பாலாம்பிகா

COOKING MADE EASY
சுவையான சமையல் புத்தகங்கள்

சமையல் நாயகி திருமதி மல்லிகா பத்ரிநாத் எழுதிய
கீழ்க்கண்ட சமையல் புத்தகங்கள் ( தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ) கிடைக்கும்.

| | |
|---|---|
| 200 வகை அறுசுவை மதிய உணவுகள் | - ரூ. 70/- |
| 100 வகை மிக்சர் முறுக்குகள் | - ரூ. 45/- |
| 100 வகை மசாலா குருமா | - ரூ. 45/- |
| 100 வகை சுவையான சிற்றுண்டிகள் | - ரூ. 45/- |
| 100 வகை பிரியாணி கலவை சாதங்கள் | - ரூ. 45/- |
| 100 வகை சூப் குளிர்பானங்கள் | - ரூ. 45/- |
| 100 வகை டிபன் வகைகள் | - ரூ. 45/- |
| 200 வகை இன்சுவை இனிப்பு | - ரூ. 80/- |
| 300 வகை சர்க்கரை நோய்க்கேற்ற உணவு குறிப்புகள் (சைவம்) | - ரூ.150/- |

திருமதி ரமணிசந்திரன் எழுதிய

| | |
|---|---|
| ராணி சமையல் | - ரூ.50/- |
| அசைவ சமையல் | - ரூ.30/- |

இத்துடன் ரமணிசந்திரனின் 79 நாவல்களும் கிடைக்கும். மேலும், சாண்டில்யன், கல்கி, லட்சுமி போன்ற பிரபல எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள் மற்றும் ஆன்மீகப் புத்தகங்கள், ஆன்மீக கேசட்டுகளும் கிடைக்கும்.

VPP மூலம் புத்தகங்களை அனுப்புகிறோம். VPP செலவு தனி.

கார்த்திக் புத்தக நிலையம்

50, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 4958186

பேசிக் கொண்டிருந்தாள்.

திருஞானத்திற்கு பளிச்சென்று ஒரு துக்கம் மேலே எழுந்தது.

'இப்படித்தானே, இப்படித்தானே தன் அம்மாவும் மடியில் போட்டுக் கொண்டு தன்னிடம் பேசியிருப்பாள் என்று எண்ணம் வந்தது. அவன் திரும்பி அம்மாவை பார்க்க வேண்டும் என்று ஆத்திரமாகி ஹாலுக்குள் நடந்தான். சட்டென்று நடுவில் நின்றான்.

'முடியாது. போக முடியாது. அம்மாவிடம் போய் இருந்தால் நிம்மதி இருக்காது. நிம்மதி இல்லையென்றால் சம்பாதிக்க முடியாது. சம்பாதிக்க முடியவில்லையென்றால் அம்மாவுக்கோ, தங்கைக்கோ கொடுக்க முடியாது. எனவே இங்குதான் இருந்தாக வேண்டும். இங்கிருந்த படி அம்மாவுக்கும், தங்கைக்கும் கொடுத்தாக வேண்டும். வேறு வழி யில்லை. திருஞானம் மனதுக்குள் தீர்மானித்தான். வரண்டாவில் பாலாம்பிகாவின் குரல் கேட்டது.

"அம்மா... சொல்லு" பாலாம்பிகா குழந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

திருஞானம் மெல்ல, அவள் சொன்னதுபோலவே 'அம்மா' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டான். போனை எடுத்து மேனேஜரிடம் பேசினான். எவ்வளவு வரவு, எவ்வளவு செலவு" என்று மேனேஜர் சொல்ல குறித்துக் கொண்டான். அவன் மனதில் இப்போது பணம் மட்டுமே முதன்மையாய் நின்று கொண்டிருந்தது.

( முற்றும் )